தவறிழைப்போர் என்றோ ஒருநாள் தண்டனைக்கு ஆளாவது நியதி
பக்.12

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 233 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 01, சனிக்கிழமை 16.07.2016

## சீனி, கடலையை நிர்ணய விலையில் விற்க முடியாதாம்

கொழும்பு, ஜூலை 16
அரசு நிர்ணயித்த விலையில் அத்தியாவசியப் பொருள்கள் எல்லாவற்றையும் விற்பனை செய்ய முடியாது. சீனி, பருப்பு மற்றும் கடலை ஆகியவற்றின் நிர்ணய விலையை விட அவற்றின் இறக்கு மதிக்கான செலவு அதிகம். அரசின் நிர்ணய விலைக்கு அவற்றை விற்க வேண்டுமானால் அரசு மானியம் வழங்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தது அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி மற்றும் மொத்த விற்பனையாளர்கள் சங்கம்.
(விரிவு பக்கம் 11)

# ஐ.நா. தீர்மானத்தை முறித்தது கொழும்பு

### பன்னாட்டு நீதிபதிகளின் பங்கேற்பு நிராகரிப்பு நல்லாட்சி பதவியிலிருக்கும் வரை நடக்காது என்றார் மங்கள

கொழும்பு, ஜூலை 16
போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை இலங்கை அரசு நேற்று முழுமையாக நிராகரித்தது. நல்லாட்சி அரசு பதவியில் இருக்கும் வரை வெளிநாட்டு நீதிபதிகள் விசாரணைக்காக அழைத்து வரப்பட மாட்டார்கள் என்பதே ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தெளிவான நிலைப்பாடு என்று தெரிவித்தார் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர. இதன் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தை ஒரு தலைப்பட்சமாக முறித்துக் கொண்டது. இந்த விடயத்தில் நீண்ட காலமாக ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர் மங்கள சமரவீர மட்டுமே. சில நாள்களுக்கு முன்னர் அவரும் இந்த விடயத்தில் தலைகீழ் மாற்றம் எடுத்து வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என்று அறிவித்தார். அண்மையில் ஜெனிவாவில் உரையாற்றும் போது கூட இந்த விடயத்தில் இன்னும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை என்று மங்கள தெரிவித்தார்.
மாவட்டச் செயலர்களுக்கான பக்.23

## 6 மாதங்கள் கடந்தும் அடிப்படை வசதி இல்லை

*பிரம்படி கிராம மக்களின் அவலம்*

யாழ்ப்பாணம், ஜூலை 16
முல்லைத்தீவு – பிரம்படி மக்கள் மீளக்குடியமர்ந்து 6 மாதங்கள் கடந்தும் அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்படுகிறது.
"வளம் நிறைந்த எங்கள் கிராமம், இராணுவ நடவடிக்கையால் தரைமட்டமாகியது. பற்றைக் காடுகளுக்கு மத்தியிலேயே மீளக்குடியமர்ந்தோம். எமக்கு எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை. பிரம்படி – கேப்பாப்பிலவு கிராமங்களை இணைக்கும் வீதியை இராணுவத்தினர் மூடிவைத்துள்ளனர். இதனால் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேற்ற பல கிலோமீற்றர்கள் செல்லவேண்டியுள்ளது" எனக் கவலை வெளியிட்டனர் பிரம்படி கிராம மக்கள்.
(விரிவு: பக்கம் 08)

## யாழ். மக்களுக்கு விரைவில் நல்ல செய்தி அறிவிப்போம்

*பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 16
குடாநாட்டு மக்களுக்கு விரைவில் நல்ல செய்தி ஒன்றைப் பொலிஸார் அறிவிப்பர். குடாநாட்டையே உறைய வைத்துள்ள வாள்வெட்டுக்கள் –கொள்ளைகள் – ரவுடித்தனங்களில் ஈடுபடும் கும்பல்களின் தலைவனுக்கு பொலிஸார் வலை விரித்துள்ளனர். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன.
"குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களில் இருவர் மாத்திரமே தற்போது வெளியில் நடமாடுகிறார்கள். அவர்கள் தலைமறைவாகி உள்ளனர். அவர்களைக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் சல்லடை போட்டுத் தேடுகிறார்கள். விரைவில் அவர்கள் கிடைத்துவிடுவார்கள்" எனவும் அவர் குறிப்பிட்டார்.
(விரிவு: பக்கம் 07)

## முப்பாய்ச்சலில் 7 ஆண்டுகளின் பின் சாதனை முறியடிப்பு

வடக்கு மாகாண பாடசாலை மட்ட தடகளத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் பி.டெனிசன் முப்பாய்ச்சலில் நேற்று புதிய சாதனை படைத்தார்.
யாழ். துரையப்பா மைதானத்தில் நடைபெற்று வரும் வடக்கு மாகாண தடகளப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் அவர் 12.74 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து தங்கம் வென்றார். அருணோதயக் கல்லூரி மாணவன் யு.அகிலன் 2009ஆம் ஆண்டில் 12.59 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்ததே இதுவரை சாதனையாக இருந் தது. அதனை 7 ஆண்டுகளின் பின் நேற்று டெனிசன் முறியடித்தார்.
(விரிவு: பக்கம் 27)

## பன்னாட்டு நீதிபதிகளுக்கு ஜே.வி.பியும் ஆதரவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 16
போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்பது அரசமைப்புக்கு முரணானது. அரசமைப்புக்கு முரணாக அரசு செயற்பட முடியாது. இந்த விடயத்தில் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தவேண்டி ஏற்படும். இதனால் சிறந்த தெரிவு உள்நாட்டுப் பொறிமுறையே.
இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க.
அரசின் வற்வரி அதிகரிப்பு தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் துண்டுப் பிரசுர விநியோகம் யாழ். மையப் பேருந்து நிலையத்தில் நேற்று இடம் பெற்றது. துண்டுப் பிரசுரங்களை பக்.23

## பிரான்ஸில் புதுவித தாக்குதல் 87 அப்பாவிகள் கோரச் சாவு

*தீவிரவாதம் என்று அந்த நாட்டு அதிபர் சாடல்*

பிரான்ஸில் பொதுமக்கள் மீது புதிய பாணியில் தீவிரவாதத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் 87 பேர் உயிரிழந்தனர். பிரெஞ்சுப் புரட்சியின் நினைவு நாளான தேசிய தினக் கொண்டாட்டங்களில் மக்கள் திளைத்திருந்த போது தாக்குதல் நடத்தப்பட்டது. கனரக வாகனம் ஒன்றில் காத்திருந்த தாக்குதலாளி, மக்கள் கூட்டத்தினரிடையே அதனைத் தாறுமாறாகச் செலுத்தி அநியாயச் சாவுகளை ஏற்படுத்தினார். பொலிஸாரால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.
இது ஒரு தீவிரவாதத் தாக்குதல் என்று பிரான்ஸ் ஜனாதிபதி பிராஸ்வா ஒல்லாந்த் அறிவித்தார். பிரான்ஸ் ஆன்மா மீது நடத்தப்பட்ட தாக்குதல் இது என்றார். நாடு முழுவதும் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் அவர் உத்தரவிட்டார். தீவிரவாதத்துக்கு எதிராகத் தனது நாடு தொடர்ந்தும் உறுதியாகச் செயற்படும் என்றும் அறிவித்தார். தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்காக நாடே கண்ணீர் சிந்துகிறது என்றார். உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளனர்.
தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பிரான்ஸில் இன்று முதல் 3 நாள்களுக்கு தேசிய துக்க தினமாக அறிவித்தது பிரான்ஸ் அரசு. மேலதிக வன்முறை நடக்கலாம் என்கிற அச்சம் காரணமாக நீஸிலுள்ள மக்கள் வெளியில் நடமாட வேண்டாமென பொலிஸார் அறிவித்துள்ளனர். (விரிவு: பக்கம் 14)

கண்ணீரில் மிதக்கிறது நீஸ்



## பொறுப்புக்கூறல் - நல்லிணக்கம் மீது தொடர்ந்தும் அமெரிக்கா கரிசனை

*இறுக்கம் தளரவில்லை என்கிறார்கள் உதவிச் செயலர்கள்*

கொழும்பு, ஜூலை 16
பொறுப்புக்கூறல் - நல்லிணக்கம் ஆகியனவே இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் கரிசனைக்குரிய விடயங்களாக தொடர்ந்தும் இருக்கின்றன. நாங்கள் யதார்த்தமாக சிந்திப்பவர்கள் என்ற வகையில் நிலையான அமைதிக்கு உதவக்கூடிய பொருளாதார வளர்ச்சி மீதும் கவனத்தை செலுத்துகின்றோம்.
இவ்வாறு தெரிவித்தனர் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜாங்க துணை செயலா பக்.23



## வற் வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து புறக்கோட்டையில் நேற்றுப் பேரணி

*கடையடைப்பும் நடத்தப்பட்டது*

கொழும்பு, ஜூலை 16
வற் வரி அதிகரிக்கப்பட்டமையைக் கண்டித்துக் கொழும்பு வர்த்தகர்களால் புறக்கோட்டையில் கவனவீர்ப்புப் போராட்டமும் கடையடைப்புப் போராட்ட முழு நேரமும் நடத்தப்பட்டன. பிரதமருடன் நேரடிப் பேச்சுகளுக்கு ஒழுங்கு செய்து தருவதாக அமைச்சர் மனோகணேசன் போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு நேரில் சென்று வழங்கிய உறுதிமொழியைத் தொடர்ந்து, வர்த்தகர்கள் கடையடைப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர்.
அதிகரிக்கப்பட்ட வற் வரி தொடர்பில் நாடு முழுவதும் வர்த்தகர்களால் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக கொழும்பு புறக்கோட்டை வர்த்தகர்களால் வற் வரிக்கு எதிராகக் கடையடைப்பும், கவனவீர்ப்புப் பேரணியும் நேற்று முன்னெடுக்கப்பட்டன.
கூலித் பக்.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாச்சி பாரம்பரிய உணவகம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 16

5.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பாரம்பரிய உணவுநுகர்வை ஊக்குவிக்கும் வகையில் "அம்மாச்சி' உணவகம் கிளிநொச்சியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பணிமனை வளாகத்தில் அமைக்கப்பட்ட உணவகத்தை வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

போசாக்கான பாரம்பரிய உணவுகளை நுகரும் பழக்கத்தை ஊக்குவிக்க மாவட்டம் தோறும் அம்மாச்சி என்ற பெயரில் பாரம்பரிய உணவகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் திறந்து வைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கிவருகின்றது.

இந்த உணவகத்தில் உணவுகளைத் தயாரித்து விற்பனை செய்யும் உரிமம் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுடரமுதம், தேனமுதம், மாதர் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. பாரம்பரிய உணவு வகைகள் நுகர்வோருக்கு உடனுக்குடன் தயாரித்துப் பரிமாறப்படும். எந்தவிதமான செயற்கை நிறமூட்டிகளோ, செயற்கைச் சுவையூட்டிகளோ உணவில் சேர்க்கப்படமாட்டாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, எதிர்க்கட்சியான ஈ.பி.டி.பி.யின் உறுப்பினர் வை.தவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-5)

## மருத்துவ சேவைகள் பயிலுநருக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

### யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

"சுகாதார அமைச்சினால் தவறான தலையங்கத்துடன் வர்த்தமானியில் சுகாதார சேவைக்கான மாதிரி விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. எனவே திருத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களின்படி ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கக்கூடியதாக இருப்பதனால் தகுதியுடையவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி முன்னர் விண்ணப்பியுங்கள்".

இவ்வாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

வர்த்தமானி அறிவித்தலில் பயிற்சி நெறிக்கான மாதிரி விண்ணப்பப்படிவத்தில் துணை மருத்துவத்துறையின் கீழ் குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கான பயிலுநர் ஆட்சேர்ப்புஎன்றதலைப்புதவறானது. சரியான தலைப்பு, 'மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில் வல்லுநர் சேவைகள் மற்றும் துணை மருத்துவ சேவைகளின் பயிற்சிக்கான பயிலுநர்களை ஆட்சேர்ப்புக்கான தமிழ்மொழிமூல விண்ணப்பப்படிவம்' என்பதே.

தவறான தலைப்புடன் மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி பெண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அதனால் பல ஆண்கள் அது தொடர்பில் அக்கறை கொள்ளாத நிலை ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. விண்ணப்பங்கள் குறைந்தால் பாதிப்பு அனைவருக்கும்தான்.

எனவே திருத்திய மாதிரி விண்ணப்பத்தின்படி ஆண்கள் பெண்கள் இருபாலாரும் அதற்கு விண்ணப்பிக்க முடியும். பயிற்சிக் காலத்தில் இருபாலாருக்கும் உரிய அதனை உறுதிப்படுத்தும் அரச அதிகாரி வருடாந்தம் 3 லட்சத்து 34 ஆயிரத்து 452 ரூபாவுக்கு மேற்பட்ட சம்பளம் பெறுபவராக இருந்தால்உறுதிப்படுத்தமுடியும். மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர், மருந்தாளர், பௌதிக சிகிச்சையாளர், தொழில் வழிச் சிகிச்சையாளர், கதிரியலாளர், கண்தொழிநுட்பவியலாளர், பற்சிகிச்சையாளர், பாடசாலைப் பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர்,

> தவறான தலைப்புடன் மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி பெண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அதனால் பல ஆண்கள் அது தொடர்பில் அக்கறை கொள்ளாத நிலை ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. விண்ணப்பங்கள் குறைந்தால் பாதிப்பு அனைவருக்கும்தான்.

கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த விண்ணப்பப்படிவங்களை உறுதிப்படுத்தும் அரச அதிகாரி வருடாந்தம் 3 லட்சத்து 44 ஆயிரத்து 452 ரூபாவுக்குக் குறையாத சம்பளம் பெறுபவராக இருக்க வேண்டும் என்றும், முன்னைய படிவத்தில் தவறாகக் குறிப்பிடப்பட்டது. ஆனால் செயற்கை அவயவ தொழிநுட்பவியலாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், இதயத்துடிப்புப் பதிவாளர், மூளை மின் இயக்கப் பதிவாளர் ஆகிய 13 பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கவும்- என்றார். (வ-4)

# கோப்பாய் பிரதேச செயலரை மாற்றுவதில் அரசியல் தலையீடு

## இராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுக்கு அழுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கோப்பாய்க்கான புதிய பிரதேச செயலர் பணியைப் பொறுப்பேற்க விடாது தடுக்கப்பட்டார் என்று குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. அதனைத் தற்போதைய பிரதேச செயலர் மறுத்தார். பிரதேச செயலராக நியமிக்கப்பட்ட திருமதி சுபாசினி மதியழகன், கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு நேற்றுக் காலை சென்றார். வரவுப் பதிவேட்டில் தான் கையெழுத்திட முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டதாக அவர் மாவட்டச் செயலகத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்த நிலையில் இடமாற்றம் வழங்கப்பட்ட பிரதேச செயலாளர் ம.பிரதீபன், எதிர்வரும் 31ஆம் திகதி வரை கோப்பாயில் தனது கடமையைத் தொடர நேற்று மாலை அனுமதிக்கப்பட்டார். திருமதி சுபாசினி மதியழகன் மாவட்டச் செயலகத்தில் இணைக்கப்பட்டார்.

கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபனுக்கு புதன்கிழமை இடமாற்றம் வழங்கப்பட்டது. உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மறு நாள் வியாழக்கிழமை, கோப்பாய் பிரதேச செயலக நலன்புரி சங்க கூட்டம் திடீரென நடத்தப்பட்டது. கூட்டம் முடிந்ததும் பிரதேச செயலரின் இடமாற்றத்தை இந்த மாதம் 31ஆம் திகதி வரையில் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி ஊழியர்களிடம் கையெழுத்துப் பெறப்பட்டது.

தேசிய உற்பத்தித் திறன் மேம்பாட்டுப் போட்டியில் பிரதேச செயலக மதிப்பீட்டு அதிகாரிகள் இந்த மாதம் 24ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதிக்குள் வருகை தர இருப்பதனால் இடமாற்றத்தை நிறுத்துமாறு காரணம் கூறப்பட்டது. பிரதேச செயலர் ம. பிரதீபனின் தூண்டுதலின் பேரிலேயே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் பிரதேச செயலர் அதனையும் மறுத்தார். "அரச ஊழியர்கள் பட்டதாரிகள். அவர்களை அவ்வாறு மிரட்டிக் கையெழுத்து வாங்க முடியுமா? அத்துடன் ஒரு தாளில் அதனைப் படித்துப் பார்க்காமல் அவர்கள் கையெழுத்திடுவார்களா?" என்று பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இதற்கிடையில் இராஜாங்க அமைச்சர் ஒருவர் மாவட்டச் செயலகத்தின் உயர் அதிகாரிகள் சிலருடன் தொடர்புகொண்டு, பிரதீபன் கேட்கும் கால நீடிப்பை வழங்குமாறு தெரிவித்தார் என்று அறிய வந்தது. "மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் பெருந்தொகை பணம் எடுத்தவர்களையெல்லாம் பேசாமல் விட்டு, சின்னப் பிரச்சினையுடன் தொடர்புடையவரை ஏன் இடமாற்றம் செய்ய அந்தரிக்கின்றீர்கள் ? அவர் கேட்கிற கால நீடிப்பைக் கொடுங்கள்" என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இவை குறித்து கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்ததாவது :

"இடமாற்றம் கிடைத்தவுடன் இந்த வருட இறுதி வரையில் எனது காலநீடிப்பைக் கோரிமேன் முறையீடு செய்தேன். மேலதிக மாவட்டச் செயலரிடம் இந்தக் கடிதம் 13ஆம் திகதி கொடுத்தேன். மாவட்டச் செயலருக்குத் தொலைபேசியூடாகத் தெரிவித்தேன். வேறு மாவட்டத்திற்கு இடமாற்றம் கிடைத்தமையினால் உரிய ஒழுங்குகளைச் செய்வதற்கு கால அவகாசம் தேவை. அதனடிப்படையிலேயே மேன் முறையீட்டுக்கு விண்ணப்பித்தேன்.

நேற்றிரவு (நேற்று முன்தினமிரவு) அரச அதிபருடன் தொடர்பு கொண்டேன். எனது மேன்முறையீடு தொடர்பாக கேட்டேன். குறைந்த பட்சம் இந்த மாதம் 31ஆம் திகதி வரையிலாவது இடமாற்றத்தை இடைநிறுத்துமாறும் கேட்டுக் கொண்டேன். தேசிய உற்பத்தித் திறன் மேம்பாட்டு அலுவலர்களின் மதிப்பீடு முடிய வேண்டும். இதற்காகவே மேன்முறையீட்டைக் கேட்டேன். இதற்கு மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் பேசியே முடிவு செய்யலாம் என்றும், மேன்முறையீடு நடைமுறையாவதற்கு சாத்தியப்பாடுகள் இருப்பதாகவும் பதில் வழங்கினார்.

புதிய பிரதேச செயலராக நியமிக்கப்பட்டவருடன் தொடர்பு கொண்டு தகவலைத் தெரிவிக்க தொலைபேசி அழைப்பு எடுத்தேன் பதிலளிக்கவில்லை. இன்று காலை (நேற்று) மாவட்டச் செயலருடன் மீண்டும் தொடர்பு கொண்டேன். அமைச்சின் செயலாளருடன் பேசிப் பதிலளிப்பதாகத் தெரிவித்தார். மேன் முறையீட்டுக்கு சாதகமான பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், நான் பிரதேச செயலகத்துக்குப் புறப்பட்டேன். இதன் போது புதிய பிரதேச செயலராக நியமிக்கப்பட்டவர் என்னைத் தொடர்பு கொண்டு, பிரதேச செயலகத்துக்குச் சென்று விட்டேன் என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் பிரதேச செயலகத்துக்குச் சென்று, மாவட்டச் செயலரிடம் நான் மேன் முறையீடு செய்ததை அவரிடம் தெரிவித்தேன். மாவட்டச் செயலரின் முடிவு தெரிந்த பின்னர் வரவுப் பதிவேட்டில் கையெழுத்திடலாம் என்று குறிப்பிட்டேன் - என்றார்.

இது குறித்துக் கருத்து அறிய சுபாசினியுடன் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் முடியவில்லை. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதைத் தொகுப்பு நாளை வெளியீடு

க.சட்டநாதன் எழுதிய 'பொழிவு' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தி.செல்வமனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சி.ரமேஸ் தொடக்கவுரையை நிகழ்த்துகிறார். (வ-ரி)

## சிறையிலுள்ள நாமலுக்கு மெத்தை

மகசின் சிறைச்சாலையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ச விடுத்தவேண்டுகோளுக் கிணங்க, வைத்திய ஆலோசனையின் அடிப்படையில் சிறைச்சாலையில் உறங்குவதற்கு மெத்தை வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன. மெத்தை அவரின் வீட்டிலிருந்து வரவழைக்கப்பட்டது. (வ-5)

கோடீபதி ஷனிதா
028
2016-07-15
அடுத்த செவ்வாக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.87,613,060/-
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
T 14 36 41 79
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 15.07.2016 | வெற்றி வாரம் 2004 | வர்ணம் சிவப்பு
மிதுனம்
வெற்றி இலக்கங்கள்
02 12 42 52
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 7,724,580 /-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

நியத்த ஜய
வெற்றி வாரம் : 479
திகதி : 15.07.2016
வர்ணம் : நீலம்
16 40 55 58 T
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை
ரூ 11,991,940/=
தொ.பே: 011 4062062 / 0114062062 Web: www.dlb.lk
Tel: 011 4 824 824
2016.07.19

## கண்ணீர் அஞ்சலி



யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த இசை ஆசிரியர் **திரு.சின்னையா துரைராசா** (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் தாயார்

**மகேஸ்வரி சின்னையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இசை ஆசிரியர் கழகம், யாழ் கல்வி வலயம்.**

**September 24th & October 29th 2016 இல்**
யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்



16 - Practice Tests with Explanations
Daily Writing Practice
Daily Speaking and Listening Practice
It is an Inovative Training Programme

**IELTS**



September 24th & October 29th 2016 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புக்கள் திங்கள் தொடக்கம் வியாழன் வரை காலை 8.30 மணி முதல் 11.30 மணிவரை நடைபெறும்.

**OUR TARGET IS BAND : 9**

IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.
Pearson English Course Level B2

**வகுப்புக்கள் – 18.07.2016 ஆரம்பம்**

**COURSE SCHEDULE**

| Mon, Tues, Wed, Thus | Saturday & Sunday |
|---|---|
| 60 Hours | 60 Hours |
| 8.30 - 11.30, 5.00 - 7.00 | Time: 8.30 - 12.00 |

**IELTS** LIFE SKILLS **A1, B1**

March, April, May, June - 2016 ஆகிய மாதங்களில் நடைபெற்ற A1, B1 பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அடிப்படையில் இருந்து ஆங்கிலம் 2 மாதங்களில் பூரணமான அறிவைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.

IELTS Registration Centre for British Council

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, Navalar Road, Jaffna.
(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887

புதுவிதி
PUTHU VITHI

# இந்த வார புதுவிதியில் ...



* நிழல் அரசும் போரும்
  - திடுக்கிடும் அரசியல் திருப்பங்கள்
* பொதுபலசேனாவை மிஞ்சும் 'முருகசேனா'
  - நல்லூரில் அடாவடி
* தண்ணீருக்குப் பதில் பிளாஸ்ரிக்
  - யாழ் நகரில் விநோத நீச்சல் குளம்
* வடக்கு விமானநிலையம்: எங்கே அமைப்பது?

விலை - 20/ = மட்டுமே

புதுவிதி வாசகர்களுக்கு ரூபா 5000 மேற்பட்ட பரிசிலை வெல்லும் வாய்ப்பு

இன்னும் சிறுகதை, சிறுவர் பகுதி, உலக விடயங்கள் என வாசிப்புக்கு தீனி போடும் பகுதிகள்.

வாங்கிவிட்டீர்களா நீங்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரிசளிப்பு நிகழ்வு

நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 .30 மணிக்கு கல்லூரி அதிபர் கிருஷ்ணகுமார் தலைமையில், கல்லூரி ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ். சேதுராஜா கலந்து சிறப்பிப்பார். (த-109)

# போரில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு தொடர்ந்தும் நெருக்கடியில்

## பண்பாட்டு மலர்ச்சிக்கூடத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

போர் முடிவடைந்து 6 வருடங்கள் கடந்துவிட்ட சூழலிலும், போரின் அதிர்வும்–அதிர்ச்சியும் நமது சமூகத்தைத் தொடர்ந்தும் தாக்கிய வண்ணமே உள்ளன. போரில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின், போராளிகளின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வு இன்றும் நெருக்கடிக்குள்ளானதாகவே இருக்கிறது.

இவ்வாறு பண்பாட்டு மலர்ச்சிக்கூடத்தின் தலைவர் க.சிதம்பரநாதன் தெரிவித்தார்.

பண்பாட்டுமலர்ச்சிக்கூடம் அரங்கச்செயற்பாட்டுக்குழு நிகழ்த்தும் புதியதொரு சமூகத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் தொடக்க விழா தொடர்பான ஊடகச் சந்திப்பு ஒன்று நேற்று கந்தர்மடம் பழம் வீதியில் இடம்பெற்றது.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

இறுதிப் போர் நடைபெற்ற வன்னிப் பகுதியிலும் ஏனைய வடக்கு–கிழக்குப் பகுதிகளிலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வை மீள ஒழுங்கமைப்பதற்காகத் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். போரின் பின், பொதுவாகவே மக்களின் தன்னம்பிக்கையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. மக்களுக்கிடையேயான உறவுகளிலும், பிரதேசங்களுக்கிடையேயான தொடர்புகளிலும் தாக்கம் ஏற்பட்டது. மக்களும் தம்முடைய வாழ்க்கைத் தேவைக்கான அறிவுபூர்வமான வழிகாட்டுதல்களின்றிச் செய்வதறியாது தடுமாறுகின்றனர். பலர் தாறுமாறான போக்கில் தாம் நினைத்தபடி சீவிக்கின்றனர். இதனால் நமது பண்பாடு சீரழிந்து போகும் நிலை தோற்றம் பெறுகிறது.

போர்ச் சூழலால் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்த தகவல் தொழில்நுட்பம், தற்போது தனது முழுமையான படையெடுப்பைத் தொடங்கிவிட்டது. படிப்படியான அறிமுகமும் சரியான வழிகாட்டல்களும் போதியளவு இல்லாத காரணத்தால் தொழில்நுட்ப வளர்ச்சி எதிர்மறையான பண்பாட்டுத் தாக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றது. நமது பண்பாட்டில் எற்பட்டுவரும் வீழ்ச்சி நமது இனத்தை அழிவுப் பாதையை நோக்கித் தள்ளுகிறது.

இதனால் பண்பாட்டுத் தளத்தில் ஒரு மக்கள் இயக்கமாகச் செயற்பட்டுப் புதிய பண்பாட்டைக் கட்டியெழுப்பி, ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டியது சமூக அக்கறை கொண்டவர்கள் அனைவரதும் பணியாகவுள்ளது.

போருக்குப் பிந்திய இன்றைய காலகட்டத்தில் தற்போதைய மற்றும் எதிர்காலத் தலைமுறையின்நன்மை கருதி ஆரோக்கியமாகச் சிந்தித்துச் செயலாற்றக் கூடிய ஒரு புதிய சமூகத்தை உருவாக்குவதற்கு பண்பாட்டுத் தளத்தில் செயற்பட வேண்டியது அவசியமாகஉணரப்படுகின்றது. நமது அடையாளங்களைப் பேணிக்கொள்ளவும், தனித்துவமான தன்னம்பிக்கை உடைய ஒரு புதிய தலைமுறையை உருவாக்கவும் காலம் தாழ்த்தாது செயற்படவேண்டியதும் அவசியமாக இருக்கிறது.

பண்பாட்டைமீளக் கட்டியெழுப்புவதன் மூலம், தமிழ்ச் சமூக ஆளுமையை விருத்தி செய்து, சுயமாகவும் ஆக்கபூர்வமாகவும் சிந்தித்துச் செயற்படக் கூடிய, தன்னம்பிக்கை கொண்ட ஒரு தலைமுறையை பண்பாட்டுத் தளத்தில் தொடர்ச்சியாகச் செயற்படுதல் மூலம் உருவாக்கு தலை நோக்கமாகக் கொண்டு இந்தப் பண்பாட்டு மலர்ச்சிக் கூடங்கள் உருவாக்கப் படுகின்றன.

மாணவர்களும், இளையோர்களும், பெண்களும் போர் பாதிப்புக்கு உள்ளானவர்களும் இந்தப் பண்பாட்டு மலர்ச்சி வேலைத் திட்டத்தில் முன்னுரிமை பெறுவார்கள் –என்றார். (த–ரி)


### ஆண்/ பெண் அனைவருக்கும் வேலைவாய்ப்பு

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில்
No. 01 பிரசித்தி வாய்ந்த கம்பனிக்கு வேலைவாய்ப்பு
18 வயதுக்கு மேலான ஆண்/பெண் இருபாலாருக்கும் வேலைவாய்ப்பு.

சம்பளம் 20, 000+OT With Allowane 9 மணித்தியால வேலை வாரத்தில் 6 நாள்கள் மட்டும். உணவு, பாதுகாப்பான தங்குமிடம், மருத்துவம், இன்சுரன்ஸ் முற்றிலும் இலவசம். விவரங்களுக்கு இலங்கை தொழில் வழங்கும் நிறுவனம்

KNS INTERNATIONAL (PVT) LTD
Hotline : 076 638 0428 Mobil : 075 056 0129
Hotline: 076 784 4451 Tel: 094 112 055770

### வேலைவாய்ப்பு

யாழ், சாவகச்சேரியில்
அமைந்துள்ள
"SUVEE ENTERPRISES"
லீசிங் நிறுவனத்திற்கு
பண வசூலிப்பாளர்கள் தேவை.
(Recovery Officers)
கவர்ச்சிகரமான சம்பளம்
வழங்கப்படும்.

076 803 4937, 076 652 0074

### பகிரங்க அறிவித்தல்
### வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வீதிகளின் விவரம்

வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட சபை வீதிகளின் தொகுப்பு கடந்த 08.07.2016 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் பிரதேசசபையின் வீதிகளின்பெயர், ஆரம்பம், முடிவு, நீளம், அகலம் உள்ளிட்ட விவரங்கள் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

பிரசுரிக்கப்பட்ட வீதிகளின் விவரங்களில் ஆட்சேபனை இருப்பின் அதன் விவரங்களை **வலிகாமம் மேற்குபிரதேச சபை தலைமை அலுவலகம், உப அலுவலகங்களான அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம்** ஆகிய இடங்களில் பார்வையிட்டு அவற்றிலுள்ளதிருத்தங்களையும் புதிதாக உட்சேர்க்கப்பட வேண்டிய வீதிகளின் விவரங்களையும் எதிர்வரும் 09.08.2016 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு எழுத்து மூலம் அறியத்தரலாம்.

இதனைத் தொடர்ந்து சபைக்குட்பட்ட சகல வீதிகளின் தொகுப்பு சீர் செய்யப்பட்ட பின்னர் மீளவர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்.** (சி.24332) (13.18)

### வீடு வாடகைக்கு

பலாலிவீதி, கந்தர்மடத்தில்
6 அறைகள் மற்றும் இரண்டு
விறாந்தைகளுடன் கூடிய வீடு
வாடகைக்குண்டு. அரச,
அரசசார்பற்ற நிறுவனங்கள்
மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(04அறைகளும் இணைந்த
குளியலறை மற்றும்
குளிரூட்டப்பட்டதுமானது)

077 956 6761 , 077 536 5155

### தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் இயங்கும்
பிரபலமான பெண்கள் அழகுக்கலை
நிலையத்துக்கு அனுபவம் வாய்ந்த
அழகுக்கலை நிபுணர்கள்
(பெண்கள்) தேவை.

076 604 0011, 076 938 8052

### JCB சாரதி தேவை.

077 480 1734

### மணமகள்கள் தேவை

- 80 இல் பிறந்த 4இல் செவ்வாய் 28¼ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை
- 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 30 பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 85 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 6 இல் சூரியனும் செவ்வாயும் 26 பாவமுடைய BSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 81 இல் பிறந்த 6 இல் சூரியனும் செவ்வாயும் 8 பாவமுடைய சட்டத்தரணி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

கமலக்கண்ணன் திருமண சேவை
இல. 62 இராமலிங்கம் வீதி,
முடமாவடி பூங்கனிச் சோலையடி
077 607 0862

### வீடு விற்பனைக்கு

13/2, மத்தியூஸ் வீதி, யாழ் ஆயர் இல்லத்துக்குப் பின்புறமாக, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.

076 725 9429 M. அன்ரன்

### காணி தேவை

K.K.S., தெல்லிப்பழை,
கட்டுவன், மாவிட்டபுரம்,
மயிலிட்டி, வறுத்தலைவிளான்
போன்ற பகுதிகளில் 50-100
பரப்புக்காணி தேவை.

தொடர்பு: 077 480 1734

இன்று (16.07.2016) முதல்
ஆடி மாதம் முடியும் வரை என்றும்
எங்கும் இல்லாதவாறு
புதுப்புது டிசைன்களில்

மாபெரும்
ஆடித்தள்ளுபடி



- சாறி வகைகள்
- சல்வார் வகைகள்
- ஸ்கேட் வகைகள்
- பிளவுஸ் வகைகள்
- சிறுவர்களுக்கான ஆடைத்தினுசுகள்
- ஆண்களுக்கான சேட், T. சேட் மற்றும் ஜீன்ஸ்வகைகள்
- மேலும் பல புடைவை தினுசுகள்

தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்.

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்
வித்தியாசத்தை உணர்வீர்கள்

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42 பெரியகடை, யாழ்ப்பாணம்.
021 222 8847


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவும் மலர் வெளியீடும்

சுழிபுரம் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையின் 18ஆவது நிறைவு விழாவும், சிறப்பு மலர் வெளியீடும், விசு.க.விமலன் ஞாபகார்த்த சிறப்பு வருடாந்த விழாவும் பரிசுத் தினமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை முன்றிலில் நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் திருமதி க.சறோஜினிதேவி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர் சி.யமுனாநந்தாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலக இந்து சமய கலாசார உத்தி யோகத்தர் சு.உதயபாலனும் கலந்து கொள்வர். (த-ரி)

## மணிவிழா வாழ்த்து




**வா. சிவராசா**
**V. SIVARAJAH**
**( B.A, DIP.in.Edu., S.L.T.S I ) (பகுதித்தலைவர்)**

அரசசேவையில் : 03.04.1978 - 16.07.2016
இந்துக்கல்லூரியில் : 23.07.1993 - 16.07.2016

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 24 வருடங்கள் சிறப்பாக சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் புகழ் பூத்த தமிழ் ஆசானும் பகுதித் தலைவருமான திரு.வா.சிவராசா அவர்களது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

*ஆசிரியர் கழகம்*
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

(J 2839) (13.18)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### நல்லூர் கந்தசாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்- 2016

நல்லூர் கந்தசாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்படிவங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

**கேள்விப்படிவக் கட்டணம்** : ரூ.500.00 + VAT + NBT
**கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி** :- 18.07.2016 தொடக்கம் 01.08.2016 பிற்பகல் 2.30 மணிவரை.
**கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்** :- 02.08.2016 முற்பகல் 9.30 மணிவரை
**கேள்வி திறத்தல்** :- 02.08.2016 முற்பகல் 10 மணிக்கு.

- **மாநகர சபை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்துக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - ரூபா. 11,700 .00**
- **ஏனைய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் - ரூபா. 2,925.00**

விண்ணப்படிவங்கள் யாவும் ஆணையாளர்,மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு நானாவித இறைவரிப்பகுதியில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் 02.08.2016 முற்பகல் 9.30 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்ற வர்கள் கேள்வித்தொகையினை 03.07.2016 பிற்பகல் 2.30மணிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்திக் குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை, நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

**குறிப்பு:-**

- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவ காலத்துக்கு மாநகரசபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி திறந்து வியாபாரம் நடத்தவும், விளம்பரங்கள், விளம்பரப் பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறு அனுமதியின்றி நடத்தப்படும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.
- கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகரசபையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
- துவிச்சக்கரவண்டிக்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா 5.00உம் மோட்டார் வண்டிக்கு ரூபா 10.00 உம் மட்டுமே அறவிடப்பட வேண்டும். தலைக்கவசத்துக்குப் பணம் அறிவிடப்படலாகாது.
- உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தினைப் பூர்த்தி செய்து பொதுசுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர்

**பொ.வாகீசன்,**
**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**
**13.07.2016**

(சி/2335) (11.17.18)




### அனலைதீவு - நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு
## பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் (ஐயனார்) தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா சிறப்பிதழ் - 2016

**தேர்த்திருவிழா**
**18.07.2016 -திங்கட்கிழமை**

### விழாக்கால நிகழ்வுகள்

**16.07.2016** - சனி 7ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம்,மாலை வேட்டைத் திருவிழா
**17.07.2016** - ஞாயிறு 8ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், சந்தன அலங்காரம், மாலை சப்பைரத உற்சவம் (சப்பரத் திருவிழா)
**18.07.2016** - திங்கள் 9ஆம் திருவிழா பகல் தேர்த்திருவிழா பகல் 10 மணிக்கு இரத ஆரோகணம், வீதியுலா, பச்சை சாத்துதல், மஹா அபிஷேகம், (108 சங்காபிஷேகம்) பஞ்சமுக அர்ச்சனை.
**19.07.2016** - செவ்வாய் 10ஆம் திருவிழா தீர்த்தத்திருவிழா முற்பகல் 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும். மாலை துவஜா அவரோகணம்.(கொடியிறக்கம்) சண்டேஸ்வரர் உற்சவம், ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும்.
**20.07.2016** - புதன் 11ஆம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம், மாலை திருக்கல்யாண உற்சவம்.
**21.07.2016** - வியாழன் மாலை வைரவர் பொங்கல்.

**11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.**

"அனைவரும் ஐயன் அருள் பெறுக"
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

அனலைதீவு - 05

**பரிபாலனசபையினர்,**
**ஐயனார் ஆலயம்**

(சி/2185) (11.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று மின் தடைப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 16

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை பின்வரும் இடங்களில் மின் தடைப்படும்.

யாழ். பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான், ஆகிய இடங்களிலும், கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஆனந்தபுரத்திலிருந்து கொக்காவில் வரைக்கும், மத்திய வங்கி, எஸ்.எப்.எச்.கியூ இரணைமடு, மாஸ் அக்ரிவ், யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், நோர்த் கார்கில்ஸ் அக்ரி பூட்ஸ், 7 ஆவது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கைத் தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்திய சாலை, விக்கிரமரட்ன பிறைவேற் லிமிற்ரெட், கொக்காவில் இராணுவ முகாம் 1, கொக்காவில் இராணுவ முகாம் 2, கொக்காவில் இராணுவ முகாம் 3, ரூபவாகினி தொலைத் தொடர்புக் கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம் தொலைத் தொடர்புக்கோபுரம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் ஆதிவிநாயகர் கோயில் பிரதேசத்திலும். மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார் குளம், வெள்ளிமலை, சி.இ.சி.பி. ஆகிய பிரதேசத்திலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின்பொறியலாளர் தெரிவித்துள்ளார். (த-ரி)

## சேனையூரில் கத்திக் குத்து; 5 பிள்ளைகளின் தாய் சாவு

மூதூர், ஜூலை 16

பெண்ணொருவரின் கத்திக்குத்துக்கு இலக்காகித் திருகோணமலை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஐந்து பிள்ளைகளின் தாயொருவர், கடந்த வியாழக்கிழமை இரவு 8.45 மணியளவில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவம், மூதூர் கிழக்கு-சேனையூர் பகுதியில் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சேனையூர் பகுதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயாரான இளங்குமார் சாந்தமலர் (41வயது) என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கத்திக்குத்துக்கு இலக்கான குறித்த பெண், இரண்டு வருடங்களுக்கு முன்னர் பக்கத்து வீட்டுப் பெண்ணின் மகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாவை வட்டிக்குக் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அந்தப் பணத்தை மீளச் செலுத்தாமையால் அது தொடர்பில், பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டதில் இருந்து, பக்கத்து வீட்டுப்பெண், ஒவ்வொரு நாளும் அவரைத் திட்டிக் கொண்டே இருந்துள்ளார்

இந்த நிலையே முரண்பாடு கைகலப்பாக மாறிக் கத்திக் குத்தில் முடிவடைந்தது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-40)

### ஒட்டுசுட்டான் நூலகத்தை மேம்படுத்தக் கூட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 16

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் பொது நூலகத்தின் ஆலோசகர் குழுக் கூட்டம் நூலகர் சிவகுமார் தலைமையில் நேற்று நடைபெற்றது.

வாசிப்பை மாணவர்கள் மத்தியில் ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். நுலகத்துக்கான மேலதிக நூல்களை நன்கொடையாளர்களிடம் இருந்து பெற்று நூலகத்தை எதிர்கால சந்ததியினரின் அறிவுப் பொக்கிசமாக மாற்றவேண்டும் என்று இதில் சுட்டிக்காட்டப்பட்டது.

நூலகத்தின் நிதி நடவடிக்கைகளைக் கையாள்வதற்காக ஆலோசனைக் குழுவில் இருந்து பொருளாளர் ஒருவரும், கணக்காய்வு செய்வதற்கு ஒரு வரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (த-ரி7)

## மரண அறிவித்தல்

### கந்தையா விசுவலிங்கம் (இராசலிங்கம்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விசுவலிங்கம் (இராசலிங்கம்) 14.07.2016 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் பேரின்பநாதன், சுதாஜினி, சுல்பிகா, ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வறஞ்சன், சுகந்தன் ஆகியோரின் மாமனாரும் பவீனா, புவீரா, டிவிதா, தஜீனா ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 17.07.2016 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 300 7067 , 077 619 9109

### சுகாதார மாநாட்டில் பங்கேற்க ராஜித ஜெனிவாவுக்கு பயணம்

உலக சுகாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையிலான சுகாதார மற்றும் வைத்தியக் குழு அடுத்த வாரம் ஜெனிவாவுக்குச் செல்லவுள்ளது.

இதேவேளை, அடுத்த வார இறுதியில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் இலங்கை வரவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வருடாந்தம் நடைபெறும் உலக சுகாதார மாநாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் இந்த மாநாடு நடைபெறுகின்றது.

அடுத்தவார இறுதியில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதார சேவைகள், இன்று சுகாதாரத் துறையில் சர்வதேச ரீதியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இவர்கள் இலங்கைக்கு வருவதாகவும் அவர் கூறினார். (த-4)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

நல்லூர் பிரதேச சபையினால் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியையும் அருகில் உள்ள கல்லூரிக் காணியையும் இணைக்கும் முகமாகக் குளப்பிட்டி ஒழுங்கையை மாற்றி அமைத்தல் தொடர்பாக இதில் ஆராயப்படவுள்ளது.

எனவே இந்த வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (த-ரி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### வைரவிப்பிள்ளை விஜயரட்ணம் (கிளி)

செல்வம் பிறதர்ஸ் (பங்காளர்) மன்னார்

திதி - துவாதசி (16.07.2016)

பிறப்பு 26.06.1952 — இறப்பு 28.07.2015

என்றென்றும் எம் நெஞ்சத்தை
நீக்கமற நிறைந்திருக்கும் அன்புத் தெய்வமே!
இன்று நீ இவ்வுலகை விட்டு - இணுவில்
காரைக்கால் சிவனார் பாதமடைந்த ஓராண்டு நிறைவுநாள்!
எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது என்று
கீதையில் மாயவன் கண்ணன் சொன்னான் அன்று
உங்களை இழந்து வருடம் ஒன்றாகியும்
ஆறுதல் இல்லையே இன்று
பலரிடம் பாசம் காட்டுவதால் வல்லவனாய்
- வாழ்ந்தவன் நீ அன்றோ?
என்றுமே உந்தன் தாளினைத் தொழுது
நாம் பழுதிலா வாழ்வை பாரினில் தொடர
அருவமாய் நின்று அருளாசி தந்திடும் ஐயனே!
நின்பாதக் கமலங்களுக்கு
மாசற்ற எம் மனமலர் மாலையை
சூடியே மன ஆறுதல் அடைகின்றோம்.



பெற்றா,
மன்னார்.
023 225 0423 (ஜே.2011) (13.18)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 11 . 06 . 1938



இறப்பு 17 . 06 . 2016

### திருமதி இராசபூபதி இரத்தினசபாபதி

கடந்த 17.06.2016 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி இராசபூபதி இரத்தினசபாபதி அவர்களின் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (16.07.2016) சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அஷ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

ஜெ.தர்மவதனி (பிரான்ஸ்), கி.தர்மபவானி (ஜேர்மனி),
இ.தர்மதேவன் (ஜேர்மனி), இ.இரட்ணகுமார் (லண்டன்),
[illegible] (சுவிஸ்), இ.உருத்திரநாதன் (கனடா),
இ.கேசவமூர்த்தி (சுவிஸ்)

(வல்/50) (11.18)

போக்காலை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
021 373 7208, 077 439 8833

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாக் கடத்தலைத் தடுக்க கடற்படை - பொலிஸ் கூட்டு

## யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ள கஞ்சாக் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிக்கக் கடற்படையுடன் இணைந்து பொலிஸாரும் தீவிர சுற்றுக் காவல் பணியை முன்னெடுத்துள்ளனர். தனிப் பொலிஸ் குழுக்கள், தனிப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுகள், அதிரடிப் படையினர் இந்த நடவடிக்கைகளில் கள மிறக்கப்பட்டுள்ளனர்.



இவ்வாறு யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக் காலை சென்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொலிஸ் நிலையத்தின் குறைநிறைகளை ஆராய்ந்ததுடன் குற்றச் செயல்கள் குறித்தும் ஆராய்ந்தார்.

முன்னதாகத் தீருவில் பொது மைதானத்தில் இடம்பெற்ற வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொண்டார்.

இதன் பின்னர் அவர் தெரிவித்ததாவது:

கஞ்சாக் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிக்க எனது தலைமையில் தனிக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. சிறப்பு அதிரடிப் படையும் இந்த நடவடிக்கைகளில் களமிறக்கப்பட்டுள்ளது. கஞ்சாவுடன் சேர்த்து கடத்தல்காரர்களை மடக்கத் தீவிர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் 45 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகளை இந்தக்குழு மடக்கியிருக்கின்றது. ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இது குறித்து சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவுகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தகவல்களைத் திரட்டி நடவடிக்கைகளுக்குத் தயாராகி வருகின்றோம்

அண்மையில்கூட அச்சுவேலிப் பகுதியில் இந்தக் குழுவினர் 5 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகளைக் கைப்பற்றினர். கஞ்சாக் கடத்தல்காரர்களையும் அவர்களின் வலையமைப்பை யும் இல்லாது ஒழிக்கும் நட வடிக்கை தீவிரமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. போதைப் பொருள்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

வாள்வெட்டுக் கும்பல்கள் தொடர்பில் சில நாள்களுக்குள் நல்ல செய்தி குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்படும். இந்தக் கும்பல்களின் தலைவர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். புலனாய்வுப் பிரிவும் தனிப் பொலிஸ் குழுக்களும் இந்த நடவடிக்கையில் தீவிரமாக களமிறங்கியிருக்கின்றன.

வாள்வெட்டுக் குழுக்களில் இருவர் மட் டுமே இன்னும் தப்பி வெளியில் இருக்கின்றனர். அவர்கள் தற்போது தமது பிரதேசங்களில் இருந்து வெளியேறித் தலைமறைவாகியிருக்கின்றனர். அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெக்கப்படுகின்றன- என்றார். (த-109-26)

# அரச அலுவலகங்களில் ஆடிப்பிறப்பு திங்களன்று

யாழ்ப்பாணம், ஜூலை 16

அரச அலுவலகங்களில் ஆடிப் பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வுகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று சனிக்கிழமை என்பதால் அரச பணியாளர்கள் கடமைக்கு வரமாட்டார்கள். அதனால் நாளை மறுதினம் திங்கட்கிழமை அலுவலகங்களில் அனைவரும் இணைந்து ஆடிப்பிறப்பைக் கொண்டாவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, மாணவர்களுக்கு ஆடிப்பிறப்பின் மகத்துவத்தை எடுத்தியம்பவே இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது. இம்முறை சனிக்கிழமை ஆடிப்பிறப்பு வருவதால் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடத்துவதே சிறந்தது எனத் தெரிவித்தனர்.

பிரதேச செயலகங்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, ஆடிப்பிறப்பு நிகழ்வுகளுக்கு பிரதேச கலாசாரப் பிரிவினரால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஆடிப்பிறப்பு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கலாசார அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதால் பிரதேச செயலகத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு திங்கட்கிழமை நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# அராலி முதல் வட்டுக்கோட்டை வரை இலுப்பை மரங்கள் நடுவதற்கு திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

அராலிப் பாலம் தொடக்கம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வரையான வீதியின் இரு மருங்கும் பசுமைக் கரங்கள் திட்டத்தின் கீழ் இலுப்பை மரங்கள் நடுகை செய்யப்படவுள்ளன.

வேள்ட் விசன் நிறுவன பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட மாவட்ட முகாமையாளர் ஜி.கே. அனுராஜ் இதனைத் தெரிவித்தார்.

வீதியின் அருகே 200 மரங்கள் பசுமையை ஏற்படுத்த நடப்படவுள்ளன. இதற்கு வலி.மேற்கில் உள்ள பிரதேச சபை, பிரதேச செயலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொது அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலரது ஒத்துழைப்புக்களையும் வேண்டி நிற்பதாக அவர் கூறினார்.

அடுத்த வாரம் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. 100 இலுப்பை மரங்களைச் சனசமூக நிலையங்கள் ஊடாக வழங்கி நடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிச் சந்தியிலிருந்து அராலிப் பாலம் வரையிலான வீதியின் அருகே நடப்படவுள்ள இலுப்பை மரங்களுக்கான பாதுகாப்புக்காக வேள்ட் விசன் நிறுவனம் கூடுகளை வழங்கவுள்ளது.

அத்துடன் வலி. மேற்குப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதனின் ஒத்துழைப்புடன் பொன்னாலையில் ஒரு இலட்சம் பனை மரங்களை நடுகை செய்வதற்கும் திட்டமிட்டுள்ளதாக வேள்ட் விசன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

(த-50)

# வருமானப் பரிசோதகர் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடமாகாண உள்ளூராட்சிச் சபைகளில் வருமானப் பரிசோதகர் தரம் 11 தரம் 111 ஆகிய பதவிகளில் உள்ளவர்களுக்கு நடத்தப்பட்ட வினைத்திறன் காண் பரீட்சையின் பெறுபேறுகள் மாகாண பொதுச் சேவைக் ஆணைக்குழுவின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

தரம் 11 ஐச் சேர்ந்தவர்களுக்கு தனியான பட்டியலும் தரம் 111 ஐச் சேர்ந்தவர்களுக்கு தனியான பட்டியலும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. (த-9)

# பாவனையாளர் தேவைகள்; விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 16

பாவனையாளர்களின் தேவைகளும் சேவைகளும் என்னும் தொனிப்பொருளில் யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும்வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நண்பகல் 12.45 மணியளவில் இந்தக் கருத்தரங்கு ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரட்ண விளக்கமளிக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, யாழ். மாவட்ட பாவனையாளர்களின் தேவைகளும் சேவைகளும் பற்றி போட்டித் தன்மை மற்றும் மேம்படுத்தல் பணிப்பாளர் சாந்தினி திருநீலகண்டன், பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளுதல் தொடர்பில் அரச அதிகாரிகள் பொலிஸாரிடமிருந்து எதிர்பார்க்கும் ஒத்துழைப்புப் பற்றி பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின்வடக்குமாகாண உதவிப் பணிப்பாளர் யசூர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (த-106)

# 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூலை 16

தென்மராட்சிப் பிரதேச 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஜூலை மாதக் கொடுப்பனவான ரூபா ஆயிரத்து 900 நேற்றுத் தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கொடுப்பனவை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச அஞ்சல் அதிபர்கள் அறிவித்துள்ளனர். (த-9)

# நெடுந்தீவில் மக்களுக்கு குறை நிரப்பு சேவை

வடக்கு மாகாண சபையும் யாழ். மாவட்டச்செயலகமும் இணைந்து நடத்திய மக்கள் குறை நிரப்பு சேவை கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் மு.ப. 10 மணிமுதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா மங்கல விளக் கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.பசுபதிப்பிள்ளை, என். விந்தன் கனகரத்தினம் உட்பட திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர். அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் பெறுவதில் பலர் அக்கறை காட்டினர்.

நிகழ்வில் சுமார் 400 பேர் வரை கலந்து கொண்டு தமது பிரச்சினைகள் தொடர்பாகத் திணைக்களத் தலைவர் களுடன் உரையாடியதுடன் விண் ணப்பங்களையும் வழங்கினார் கள். முன்னதாக அமைச் சர்களும் அதிகாரிகளும் பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந்த் தலை மையில் வரவேற்கப்பட்டனர். முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வதாக இருந்தபோதும் சுகவீனம் காரணமாக அவர் சமுகமளிக்க முடியாமல் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டது.

(த-7)

# வீடுகளில் அதிக கள்; 7 பேருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 16

வீடுகளில் அளவுக்கு அதிகமாகக் கள்ளை வைத்திருந்த 7 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் பிரதேசத்தில் நடத்திய திடீர்ப் பரிசோதனையின்போது வீடுகளில் அளவுக்கு அதிகமாகக் கள்ளு வைத்திருந்தவர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குக்கு வருகை தந்திருந்த 7 பேருக்குத் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக் கப்பட்டது

இதேவேளை, கசிப்பு வைத்திருந்த நபருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-9)

# மன்னார் கடற்பரப்பில் 4 இந்திய மீனவர் கைது

மன்னார், ஜூலை 16

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் தலைமன்னார் கடற் பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இழுவைப்படகு ஒன்றில் வந்திருந்த அவர்களைக் கடற்படையினர் கைது செய்தனர். அவர்களில் ஒருவர் வயது குறைந்த சிறுவர்தொழிலாளி. விசாரணைகளின் பின்னர் அவர்கள் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் நேற்று மன்னார் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். 3 பேரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா, வயது குறைந்த சிறுவர் தொழிலாளியை 21ஆம் திகதி வரை மன்னாரில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்கவைக்குமாறும் அறிவுறுத்தினார். (வ-4,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் எதுவுமேயின்றி அல்லலுறும் பிரம்படிக் கிராம மக்கள்

## தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 16
மீள்குடியமர்த்தப்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி அவல வாழ்க்கை வாழ்ந்து வருவதாகக் கவலை தெரிவிக்கும் முல்லைத்தீவு பிரம்படிக் கிராம மக்கள், தமது அடிப்டைத் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.



அவர்கள் தெரிவித்ததாவது:
கடந்த ஜனவரி முற்பகுதியில் எங்கள் பூர்வீக நிலமான பிரம்படியில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டோம். வளம் நிறைந்த எங்கள் கிராமம் இப்போது முற்றாக இராணுவத்தால் தரைமட்டமாக்கப்பட்டு வீடுகளும், கிணறுகளும், மலசலகூடங் களும் மற்றும் பயன் தரு மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. பற்றைக் காடுகளுக்கு மத்தியிலேயே மீள்குடியமர்ந்தோம். வீடுகளின்றிக் கொட்டில்கள் அமைத்துக் காணிகளைத் திருத்தி இராணுவத்தால் நிரவப்பட்ட கிணறுகளைத் தூர்வாரி விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம். எங்களுக்கு எந்தவிதமான உதவிகளையும் யாரும் வழங்கவில்லை.

குழந்தைகளையும், பாடசாலை மாணவர்களையும் கொண்ட குடும்பத்தினர் காலையில் பிரம்படிக் கிராமத்துக்கு வந்து தமது காணிகளில் விவசாய நடவடிக்கை களை மேற்கொண்டு விட்டு இரவு வேளைகளில் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராத்திலேயே தங்குவதற்காகச் செல்கின்றனர். இதற்காக 4 கிலோ மீற்றர் தூரம் சுற்றியே செல்ல வேண்டியுள்ளது. பிரம்படி –கேப்பாபிலவு கிராமங்களை இணைக்கும் வீதியை இராணுவம் முடி வைத்திருப்பதால் மாற்று வீதியைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்த வீதியில் எந்த பஸ்களும் சேவையில் ஈடுபடுவதில்லை–என்றனர்.

"அவர்களுக்குக் கேப்பாப்பிலவில் வீட்டுத்திட்டம் ஏற்கனவே அரசால் வழங்கப்பட்டது. அந்த வீட்டை அவர்கள் வேறு யாருக்காவது வழங்கவேண்டும். ஒரு குடும்பத்துக்கு 2 இடங்களில் வீடுகள் வழங்கமுடியாது. அவ்வாறு அவர்கள் வீடுகளைக் கைமாற்றினால் அடுத்த கட்டமாக பிரம்படியில் வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்" என்று முல்லைத்தீவு மாவட்ட செயலளார் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (த–4–ரி7)

# முல்லைத்தீவு நில அபகரிப்பு அமெரிக்காவின் கவனத்துக்கு

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 16
முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் நில அபகரிப்புக்கள் தொடர்பில் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது என்பதனாலேயே நிசா பிஸ்வாலின் கவனத்துக்கும் கொண்டு சென்றோம். இவை தொடர்பில் நாடாளுமன்றிலும் கதைக்கவுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் நில அபகரிப்புக் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டத்தைக் காலத்துக்குக் காலம் வந்த ஆட்சியாளர்கள் ஆக்கிரமிக்கவே முயல்கின்றனர். அதன் வடிவங்களும் காரணங்களுமே மாறுபடுவதாக உள்ளன.
முல்லைத்தீவைப் பொறுத்தவரை இராணுவ மயமாக்கல், சிங்கள மயமாக்கல் தொடர்பில் நாம் உடனடிக் கவனம் செலுத்துகின்றோம். கடந்த புதன்கிழமை எம்மைச் சந்தித்த அமெரிக்கப் பிரதிநிதி நிசா பிஸ்வாலிடம் இது தொடர்பில் எடுத்துக் கூறினோம். அந்த மாவட்டத்தின் கடல் வளம், வனவளம் மட்டுமன்றி நில வளமும் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பில் நாம் சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல ஆரம்பித்துள்ளோம். இது தொடர்பான தகவலுடன் நாடாளுமன்றத்திலும் விரைவில் கேள்வி எழுப்புவோம்.
இந்த மாவட்டத்தில் மேலும் பல பகுதிகள் யாருமே எட்டியும் பார்க்க முடியாத நிலையில் உள்ளன. அது தொடர்பாகவும் ஆராய்ந்து உரிய தரப்புகளின் கவனத்துக்குக்கொண்டுசெல்வோம். ஏனெனில் இறுதிப் போரில் முழுமையாக அழிவடைந்து தற்போதுதான் மீளத்துடிக்கும் ஒரு மாவட்டத்தில் எமக்களிக்கப்பட்ட உறுதிமொழிக்கு மாறாகச் செயற்படுவதை அனுமதிக்க முடியாது–என்றார். (த–101)

# 100 விவசாயக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள்

முல்லைத்தீவு, ஜூலை 16
முள்ளியவளை கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 100 விவசாயக் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கப்படவுள்ளது.
கிணறு வெட்டிக் கட்டுதல், தூவல் நீர்ப்பாசனம், கசிவு நீர்ப்பாசனம், பச்சை வீடு, நீரிறைக்கும் இயந்திரம், கான்ட் ஸ்பிறே, பவர் ஸ்பிறே போன்ற பல திட்டங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
விவசாயிகளுக்கு இந்த ஒரு இலட்சம் ரூபா பகுதி பகுதியாக வழங்கப்படவுள்ளது. அவர்களும் தங்கள் உழைப்பை வழங்கி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும்போது விவசாய ரீதியிலும், பொருளாதார நிலையிலும் ஒரு மேன்மை நிலையை அடையலாம் என முள்ளியவளை கமநல சேவை உத்தியோகத்தர் தெரிவித்தார். (த–ரி7)

# 458 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்டம் அமைக்க உதவிகள்

முல்லைத்தீவு, ஜூலை 16
முள்ளியவளை கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் தெரிவு செய்யப்பட்ட458 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன. முதல் கட்டமாக மிளகாய், கறி மிளகாய் நாற்றுகள் வழங்கப்படவுள்ளன. அடுத்த கட்டமாகப் பழமரக் கன்றுக்கள் வழங்கப்படும். (த–ரி7)

# மரண அறிவித்தல்



பிரபல சோதிடர் **பொன்னம்பலம் பொன்னுத்துரை**

(மு.சின்னப்பு அவர்களின் மாணாக்கன் அ.பொ. பொன்னுத்துரை)

அளவெட்டி வடக்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பொன்னுத்துரை 14.07.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பொன்னம்பலம் - தங்கமுத்து தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்மணி தம்பதியரின் மூத்த மருமகனும், விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கண்மணியின் அன்புச் சகோதரனும், சந்திரகுமார் (பிரான்ஸ்), சிவகுமார் (லண்டன்), காலஞ்சென்ற உதயகுமார் (புனிதன்) மற்றும் விஜிதா, கவிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரி (பிரான்ஸ்), கஜனி (லண்டன்), மனோறஞ்சன் (றஜ்சன் - இ.போ.சபை கிளிநொச்சி), சூரியன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், கிருத்திகா பார்த்திபன் (பிரான்ஸ்), பிரம்மிக்கா (லண்டன்), நேமிக்கா (லண்டன்), சதுஷ்ரன் (சென் ஜோன்ஸ் மாணவன்), அபிநயன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன்), ஆத்மிகா (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கரப்பிள்ளை வீதி,**
**மானிப்பாய்.**
**077 791 3164, 021 225 5475**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(ஜே.2948) (13.18.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்தோர் பிரச்சினையை மூடி மறைக்க அரசு தீவிர முயற்சி

## இதற்காகவே விடுவிக்கப்படாத பகுதி மக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்குவதாக வலி. வடக்கு மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 16

வலி. வடக்கின் விடுவிக்கப்பட்ட பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்ட காணியற்ற குடும்பங்களைப் புறக்கணித்துவிட்டு, விடுவிக்கப்படாத பகுதி மக்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்குவதன் மூலம் இடம்பெயர்ந்தோர் பிரச்சினையை மூடிமறைக்க முயற்சிகள் எடுக்கப்படுவதாக வலி. வடக்கு மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக தமது கடும் ஆட்சேபனையை அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வலி. வடக்கில் இருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயரும் போது சிறிவர்களாக இருந்த பலர் இன்று திருமணமாகி இரண்டு, மூன்று பிள்ளைகளுடன் வாழ்விடமும் இன்றி சொந்தப் பிரதேசத்தில் நிலமும் இன்றித் தவிக்கின்றனர்.

இவ்வாறு வாழ்பவர்களுக்கு அரச காணிகளில் 20 பேச் நிலமும் வீட்டுத் திட்டமும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்.

வலி. வடக்கில் இருந்த மிகச் சொற்ப பிரதேசங்கள் கடந்த காலங்களில் விடுவிக்கப்பட்டன. அந்தப் பிரதேசத்தைப் பூர்வீகமாகக் கொண்டு அங்கு காணி உள்ளவர்கள் மீள்குடியமரத் தயாராகி வருகின்றனர்.

குறிப்பாகக் கட்டுவன், வயாவிளான், பலாலி வடக்குப் பகுதிகளில் இருந்து 26 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெயரும் போது 10, 15 வயது சிறுவர்களாக இருந்த பல ஆயிரம் பேர் இன்று பிள்ளைகளுடன் வாழ்கின்றனர்.

இவர்கள் தமக்கான மாற்று ஏற்பாடுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில், அரசினால் காணியற்றவர்களுக்கான வீட்டுத்திட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன் மூலம் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் எப்பாகத்திலும் நிலமற்றவர்களுக்கு வாய்ப்புக் கிட்டும் என நம்பிப் பலர் காத்திருந்தனர்.

இந்த எதிர்பார்ப்புகளுக்கு மாறாக வலி. வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாது - படையினரின் ஆக்கிரமிப்பில் - உள்ள பகுதியைச் சேர்ந்த மக்களில் நிலமற்றவர்களுக்கு மட்டுமே குறித்த திட்டங்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் விடுவிக்கப்படாத பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தொகையை உலகுக்குக் குறைத்துக் காட்டி அதன் எதிர்ப்பில் இருந்து தப்பும் கபட நோக்கத்தை அரசு கையாள்வதாக எண்ணத்தோன்றுகின்றது.

இவ்வாறான கபட நோக்கத்தை அறிந்து அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் உடனடியாக ஒரு நிரந்தரத் தீர்வை எட்ட வேண்டும்-என்றனர். (த-101)

> வலி. வடக்கில் இதுவரை விடுவிக்கப் படாது படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதி மக்களில் நிலமற்றவர்களுக்கு குறித்த திட்டங்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் விடுவிக்கப்படாத பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தொகையை உலகுக்குக் குறைத்துக்காட்டி அதன் எதிர்ப்பில் இருந்து தப்பும் கபட நோக்கத்தை அரசு கையாள்வதாக எண்ணத் தோன்றுகின்றது.

---

## ஆடிப் பிறப்பு பண்பாட்டுவிழா வேலணையில்

யாழ்ப்பாணம், ஜூலை 16

வேலணைப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் ஆடிப்பிறப்பு பண்பாட்டுவிழா இன்று சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் தலைமையில் பிரதேச செயலகத்தில் இது நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் இதில்தலைமைவிருந்தினராகக் கலந்து கொள்வார். (த-7)

---

## ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய சாரதிகளுக்குத் தண்டம்

தென்மராட்சி ஜூலை 16

காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 13 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் வாகன வரிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு 3 ஆயிரம் ரூபா சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அபராதமாக விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அபராதம் விதித்தார். (த-9)

---

## இந்துக்களின் குரல் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

இலங்கையிலிருந்து வெளிவரும் இந்துத் தமிழ் சஞ்சிகையான இந்துக்களின் குரல் 9 ஆவது சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்து சமயப் பற்றாளர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பெரியோர்கள் மற்றும் கலைஞர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆக்கங்கள், எமது சமயத்தின் கிரியைகள், வழிபாடுகள், கலை பண்பாட்டம்சங்கள் முதலானவற்றுக்கு நவீன காலத்தின் தேவைக்கேற்ப அறிவியல்சார் விளக்கங்களையும், புதிய ஆய்வு ரீதியான கண்டுபிடிப்புக்களையும் கூறுவதாக இருப்பது வரவேற்கத்தக்கது. அத்துடன் நாடளாவிய ரீதியில் இந்துக்கள் எதிர்நோக்கி வரும் சமயம்சார் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதாக அமையலாம்.

கவிதை, கட்டுரை, உரையாடல், துணுக்குகள், காட்டூன்கள், விமர்சனங்கள், சிறுகதைகள் முதலான ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

ஆக்கங்களை ஆசிரியர், என்.பி. ஸ்ரீந்திரன், கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு எனும் முகவரிக்கு அனுப்பலாம். (த-4)

---



நெடுந்தீவின் வரலாற்றுச் சான்றுகளில் ஒன்றான பெருக்கு மரத்தின் சுற்றாடல் பகுதி நெடுந்தீவுப் பிரதேச சபையால் அண்மையில் சீரமைக்கப்பட்டது. இந்தப் பகுதியை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் திறந்துவைத்தார். (த-7)

---

## அரச பணியாளர்களிடம் அர்ப்பணிப்பு அவசியம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

மக்களுக்கான சேவையின் மெய்யான பயன் உரிய காலங்களில் கிடைப்பதே. அதற்கேற்ற வகையில் அரச பணியாளர்கள் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்ற முன்வரவேண்டும்.

இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட அடுத்த நிதியாண்டுக்கான பிரதேச அபிவிருத்தித் திட்டத்துக்கான நிகழ்ச்சித் திட்டத் தயாரிப்பு நிகழ்வு பிரதேச செயலாளர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

வேள்ட் விசன் நிறுவனம் பிரதேச மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதுவரை கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், சிறுவர் அபிவிருத்தி, உட்கட்டுமானம் உட்படப்பல தலைப்புக்களில் வறுமைப்பட்ட மக்களின் சிறுவர் அபிவிருத்தியைமையமாகக்கொண்டு பல மில்லியன் ரூபா திட்டங்களைக் கடந்த மூன்று ஆண்டுகளில் முன்னெடுத்துள்ளது.

2016இல் 15 கிராம அலுவலர் பிரிவில் 2 ஆயிரத்து 500 சிறுவர்களின் கல்வி அபிவிருத்தியை மையமாகக் கொண்டு அது செயற்பட்டு வருகின்றது.

அரச திணைக்கள அலுவலர்கள், கல்வி அதிகாரிகள், சமூக மட்டப் பிரதிநிதிகள், பிரதேச செயலக அதிகாரிகள் என இங்கு கூடியுள்ள நீங்கள், அடுத்த நிதியாண்டுக்கான பயனுள்ள கருத்திட்டங்களை முன்வைத்து செயற்படுங்கள் - என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வேள்ட் விசன் நிறுவன மாவட்ட முகாமையாளர் ஜி.கே. அனுராஜ் கூறியதாவது:

2018 இல் அபிவிருத்தித் திட்ட அணுகுமுறையில் மாற்றங்களைக் கொண்டுவரவுள்ளோம். இதில் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தல், சிறுவர்களின் வயதுக்கேற்ப கல்வித்திறன்களை உறுதிப்படுத்தல், சிறுவர்களின் போக்கை மேல்நிலை அடையச் செய்தல், நீர் மற்றும் சூழல் அபிவிருத்தி, இளையோர் திறன் அபிவிருத்தி, சிறுவர் உரிமைகளை நிலைநாட்டுதல் போன்ற செயற்றிட்டங்களில் முன்னுரிமைப் பிரகாரம் இனம் காணப்பட்ட திட்டங்களை வலி. மேற்கில் முன்னெடுப்போம்-என்றார். (த-50)

---

## தேசிய நல்லிணக்கம் தொடர்பில் பாடசாலைகளில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 16

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியிலும் தேசிய நல்லிணக்கம் பற்றி விழிப்புணர்வூட்டும் வகையில் மாணவர் வாழ்வுக்கு புதியதோர் அர்த்தம் எனும் பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப் படுகின்றது.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு கல்வியமைச்சின் அனுசரணை யுடன் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கின்றது.

இதுபற்றிய சுற்றறிக்கை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் வலயக் கல்விப் பணிமனைகளுக்கும் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சித் திட்டம் 3 படிநிலைகளில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

1. பாடசாலைக் காலைக் கூட்டங்களில் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் பற்றி உரைகள் நிகழ்த்துதல்.
2. தேசிய நல்லிணக்கத்தை நோக்காகக் கொண்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்துதல்.
3. பாடசாலை ஆசிரியர்களிடையே சிறுகதை, கவிதைப் போட்டிகளை நடத்திப் பரிசில்கள் சான்றிதழ்களை மாவட்ட, தேசிய மட்டங்களில் வழங்குதல்.

மேற்படிப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விண்ணப்பிக்கும் விண்ணபப்படிவங்களும் பாடசாலைகளுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (த-4)

---

## வலி. தென்மேற்கில் ஒரே நாளில் திண்மக் கழிவுகள் அகற்றும் பணி

### ஒத்துழைக்குமாறு மக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

வலி. தென்மேற்குப் பிரதேசத்தின் தூய்மையையும், சுகாதாரத்தையும் கருத்திற் கொண்டு ஒரே நாளில் 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சந்திகளிலும் வீதிகளிலும் மூடை மூடையாக வீசப்பட்டிருக்கும் திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டவுள்ளன. அதற்கு ஒத்துழைப்புத் தருமாறு பொதுமக்களிடம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச சபைச் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நான்கு பிரிவுகளிலுமுள்ள பல வீதிகள் கூட்டித் துப்புரவு செய்யப்படாமலிருப்பதுடன் திண்மக் கழிவுகளும் அகற்றப்படாமலுள்ளன.

ஆளணியும் வாகன வசதிகளும் தேவையான அளவு இல்லாமையால் திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பிரதேசத்தின் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுகின்றது.

இந்த நிலையில் டெங்கு நோயின் பரவலைக் கருத்திற் கொண்டு ஒரே நாளில் 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான ஒழுங்குகளைச் செயலாளர் மேற்கொண்டார். (த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உள்நாடு - புலம்பெயர் இலங்கையரிடையே இடைவெளி அதிகம்

## பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வாவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 16

புலம்பெயர் மக்களின் அபிலாசைகள் எவற்றில் தங்கியுள்ளன என்பது அறியப்படாமலுள்ள நிலையில், உள்நாட்டு -புலம்பெயர் மக்களுக்கிடையிலான இடைவெளி மிக அதிகமாகிக்கொண்டே செல்கின்றது என்று வெளிநாட்டலுவல்கள் பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

கடல் கடந்த இலங்கையர்களை ஊக்குவிப்பதற்கான பாதை எனும் நூல் வெளியீடு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.



அவர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசின் மீது மக்கள் கொண்டுள்ள எதிர்ப்பார்ப்புகள் மற்றும் அழுத்தங்கள் அதிகளவிலான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அதனைத் தகுந்த முறையில் கையாள வேண்டிய கடப்பாடுதற்போதைய அரசுக்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

**அதிகளவான இலங்கையர் புலம்பெயர்வு**

இலங்கையைச் சேர்ந்த சுமார் 3 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் வெளிநாடுகளில் புலம்பெயர் மக்களாக வாழ்கின்றனர். தெற்காசிய நாடுகளிலேயே இலங்கையர்தான் அதிகளவில் புலம்பெயர் மக்களாக வெளிநாடுகளில் வாழ்கின்றனர்.

உள்நாட்டு மக்களை இன, மத, மொழி ரீதியில் ஒன்றிணைக்க முடியுமானாலும் புலம்பெயர் மக்களைக் குறித்த எந்தவொரு காரணிகளாலும் ஒன்றிணைக்க முடியாமையே தற்போது பெரும் சவாலாக உள்ளது. புலம்பெயர் மக்களின் அபிலாசைகள் எவற்றில் தங்கியுள்ளன என்பது அறியப்படாமலுள்ள நிலையில் உள்நாட்டு மற்றும் புலம்பெயர் மக்களுக்கிடையிலான இடைவெளி மிக அதிகமாகிக்கொண்டே செல்கின்றது.

**புலம்பெயர் மக்களின் செல்வாக்கு**

காலனித்துவ ஆட்சிக்குப் பின்னரான அபிவிருத்தித் திட்டங்களில் உள்ள குறைபாடுகள், சமநிலையற்ற அபிவிருத்தித் திட்டங்கள், 30 வருட சிவில் போர், ஜே.வி.பி. கலவரம் போன்ற பல்வேறு காரணிகளால் புலம்பெயர் மக்களின் செல்வாக்கு உள்நாட்டு மக்களின் இன, மத, அரசியல், சமூகக் காரணிகளில் பெருஞ் செல்வாக்கைச் செலுத்துகிறது.

தற்போது நல்லாட்சி அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில் அரசியல் உறுதிப்பாடு தோற்றம் பெற்றுள்ளது.

அதேவேளை, புலம்பெயர் தமிழ் மக்களின் பரவலான எதிர்பார்ப்புக்கள் மற்றும் அவர்களின் பங்களிப்புக்கள் இலங்கை மக்களைப் பெரும் மாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையில் நல்லிணக்கச் செயற்பாடுகளிலும் அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் புலம்பெயர் மற்றும் கடல்கடந்த மக்களின் பங்களிப்பு அத்தியாவசியமான தேவையாக உள்ளது. அதனைக் காத்திரமான அரசியல் நகர்வுகளில் எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பதே பெரும் சவால்.

**போரினால் இடம்பெயர்ந்த தமிழரின் ஆதிக்கம்**

புலம்பெயர் மக்களைப் பொறுத்தமட்டில் போரினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் ஆதிக்கம் காலத்துக்குக் காலம் அதிகப்படியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இலங்கையின் அரசியல் செயற்பாடுகளில் மாற்றங்களையும், தமிழ்த் தலைமைகளின் அரசியல் அபிலாசைகளிலும் அது ஏதோவொரு தாக் கத்தை ஏற்படுத்தியுள்ளது. போரின்போது இரு தரப்புகளிடையேயும் ஏராளமான உறவுகளை நாம் இழந்துள்ளோம். தற்போது மக்களின் மனநிலையில் ஏற்பட்டுள்ள வடு மற்றும் சமூக அடையாளங்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் போன்றன தீர்க்கப்பட வேண்டியது முக்கியமானது.

ஆனாலும் கடல் கடந்த மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள உணர்ச்சிபூர்வமான பிரதிபலிப்புக்கள் மற்றும் அபிலாசைகள் என்பன இலங்கையின் உள்நாட்டு மக்களின் தேவைகளைப் பிரதிபலித்துள்ளனவா என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

அறிவுப் பரிமாற்றல் மற்றும் அபிவிருத்திப் பரிமாற்றல் போன் றன புலம்பெயர் மக்களுக்கும் உள்நாட்டு மக்களுக்கும் இடையிலான தொடர்பில் அத்தியாவசியமானதேவையாக உள்ளது - என்றார். (த-4)

# மலசலகூடக் குழியில் சிசுவின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 16

வாயுத் தொல்லை காரணமாக தனது வயிறு ஊதிக் காணப்படுவதாக வீட்டாருக்குப் பொய் உரைத்த பெண் ஒருவர் சிசு ஒன்றைப்பெற்று மலசல கூடக் குழியில் வீசினார் என்று பொலிஸார் கூறினர். அந்தக் குழந்தை யைப் பேராதனைப் பொலிஸார் நீதிவான் முன்னிலையில் சடலமாக வெளியே எடுத்தனர்.

பேராதனைப் பொலிஸ் பிரிவிலுள்ள கொஸ்ஸின்ன என்ற இடத்தில் வசிக்கும் பெண் ஒருவர் பேராதனை வைத்தியசாலையில் அதிக குருதிப் பெருக்குக்குச் சிகிச்சை பெறச் சேர்க்கப்பட்டிருந்தார். ஆனால் சிகிச்சையின் போது அவர் சிசுவைப் பெற்றிருக்கிறார் என்பது தெரியவந்தது.

வைத்தியசாலைப் பொலிஸாருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அந்தப் பெண் கடந்த 12 ஆம் திகதி இரவு சிசு ஒன்றை மலசலகூடத்தில் வைத்துப் பிரசவித்தார் எனவும் அக்குழந்தை பிறக்கும்போதே இறந்து இருந்ததால் அதனை மலசலக் குழியில் வீசியதாகவும் தெரிவித்தார் எனப் பொலிஸார் கூறினர்.

கண்டி பதில் நீதிவான் முன்னிலையில் சடலம் வெளியே எடுக்கப்பட்டது.

தனக்கு வாயுக் கோளாறு காரணமாக வயிறு ஊதிப் பெருத்துள்ளதாக வீட்டாருக்குக்கூறி உண்மையை மறைத்துள்ளார். அந்தப் பெண் கைது செய்யப்பட்டு பேராதனை வைத்தியசாலையில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு நல்லாட்சியை வீழ்த்த முடியாது

## நீதியமைச்சர் விஜேதாச உறுதி



கொழும்பு, ஜூலை 16

இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்த அரசை சட்டரீதியாக எவராலும் வீழ்த்த முடியாது. இன்று பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைத்துள்ளன. இந்த நிலையில் வேறு கட்சிகள் இணைந்து கூட்டணி அமைப்பதில் பயன் இல்லை.

இவ்வாறு நீதி அமைச்சர் விஜேதாசராஜபக்ச தெரிவித்தார். மஹரகமவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசின் அபிவிருத்திப் பயணத்தை முடங்கச் செய்வதற்கு சுயநல அரசியல்வாதிகள் சிலர் முயற்சித்து வருகின்றனர். அவர்கள் தாம் செய்த ஊழல்களை மறைப்பதற்காக அரசைத் தளம்பல் நிலைக்கு இட்டுச் செல்ல முயற்சிக்கின்றனர். ஆனால் 5 வருடங்களுக்கு இந்த அரசை சட்டரீதியாக எவராலும் வீழ்த்த முடியாது.

70 வருடங்களாக இந்த நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மாறிமாறி ஆட்சி செய்தன. இன்று அந்த இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைத்துள்ளன. இந்த நிலையில் வேறு கட்சிகள் இணைந்து கூட்டணி அமைப்பதில் பயன் இல்லை.

எமது தேசிய அரசு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது. நாம் இன்று மக்களின் வாழும் உரிமை, ஊடக சுதந்திரம், நீதித்துறைச் சுயாதீனம் என்பவற்றை உறுதிப்படுத்தியுள்ளோம். இந்த நாட்டில் காணப்பட்ட மிகவும் கீழ்த்தரமான அரசியல் கலாசாரத்தை நாம் இல்லா தொழித்துள்ளோம்.

ஐரோப்பாவிடமிருந்து ஜீ.எஸ்.பி. சலுகையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அரசு வற் வரியை அதிகரித்து மக்களைச் சுமைகளுக்குள் தள்ளியுள்ளது என்று சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். நாம் மக்களின் மீது பொருளாதாரச் சுமையை சுமத்தவில்லை. அத்தியாவசியப் பொருள்களுக்கான வற் வரியை நீக்கியுள்ளோம்.

கடந்த அரசு பெருங்கடன்களைப் பெற்றுவிட்டது. அவற்றின் சாபம் எமது அரசுக்கு வந்துள்ளது. தேசிய வருமானத்தில் 97 வீதம் கடனும் வட்டியும் செலுத்துவதற்கே பயன்படுத்தப்படுகிறது. அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்ற தோல்வியடைந்த திட்டங்கள் எமது அரசிடம் இல்லை- என்றார். (த-4)

# சு.கவை விமர்சிப்போருக்கு தேர்தலில் இடம் கிடையாது

கொழும்பு, ஜூலை 16

சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் அதன் தலைமையையும் விமர்சிப்போருக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட மாட்டாது என்று உறுதியாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சர் அமரவீர தெரிவித்ததாவது:

தேர்தலில் போட்டியிட இளையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. அதில் போட்டியிடுவதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகம் தற்போது கட்சித் தலைமையகத்தில் நடைபெற்று வருகின்றது.

கட்சித் தலைமையையும் கட்சியையும் விமர்சிக்கும் முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உட்பட கட்சிக்கு எதிராகச் செயற்படும் எவருக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது. இதற்குப் பதிலாக இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். பெருமளவு விண்ணப்பங்கள் வந்து குவிந்துள்ளன. இவற்றில் பெரும்பாலான திறமைசாலிகள் உள்ளனர் -என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ் நோனிஸுக்கு பொலிஸார் அழைப்பு

கொழும்பு, ஜூலை 16

பிரிட்டனுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் கலாநிதி கிரிஸ் நோனிஸை நாளைமறு தினம் திங்கட்கிழமை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகு மாறு கொள்ளுப்பிட்டிப் பொலி ஸார் அவருக்கு அறிவித்துள் ளனர்.



தனியார் நிறுவனம் ஒன்றில் மேரி ஜெனிவர்மா என்ற 80 வயதுடைய பெண் ஒருவரைக் கடந்த மே மாதம் 16ஆம் திகதி தவறான வார்த்தைகள் மூலம் அச்சுறுத்தியமை தொடர்பில் கிறிஸ் நோனிஸுக்கு எதிராகக் குறித்த பெண்ணால் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காகப் பொலி ஸார்நேற்று கிறிஸ்நோனிஸுக்கு அழைப்பு விடுத்தனர்.

இருப்பினும் கிறிஸ்நோனி ஸுக்குப் பதிலாக அவரது வழக் கறிஞர் நேற்றுக் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முன் னிலையாகியதுடன், நோனிஸ் சுகவீனம் காரணமாக வருகை தரவில்லை எனக் கூறினார்.

இதனையடுத்து நாளைமறு தினம் திங்கட்கிழமை நோனிஸை பொலிஸ் நிலையத்தில் முன்னி லையாகுமாறு அழைப்பு விடுக் கப்பட்டது. (த-4)

# அதிருப்திக்குரியது அமெரிக்க கொள்கை

## இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை கடுமையாகச் சாடுகிறது அந்நாட்டு ஊடகம்

கொழும்பு, ஜூலை 16

இலங்கை அரசு தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகம் அதிருப்திக்குரிய கொள் கையைப் பின்பற்றுவதாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

அமெரிக்காவின் 'த வயர்' என்ற ஊடகம் இந்தக் குற்றசாட்டை முன்வைத் தது.

அந்த ஊடகம் தெரிவித் ததாவது:

இலங்கை அரசைப் பொறுத்தவரை, போர்ப் பாதிப்புக்கு உள்ளான மக் களின் மறுசீரமைப்புச் செயற்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத் திருக்கவேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. முன்னாள் அரசைக் காட்டிலும் தற்போதைய அரசு பல்வேறு விடயங்களில் முன் னேற்றம் கண்டிருக் கிறது. ஜனநாயகம், மனித உரிமை நிலவரங்கள் என்பன மேலோங்கி இருக்கின்றன. பல நிறை வேற்று அதிகாரங்கள் குறைக் கப்பட்டமை, தகவல் அறியும் உரிமைச் சட்ட வரைவு உள்ளிட்ட சில முக்கியமான விடயங்களை அரசு நிறைவேற்றி இருக்கிறது.

> " முன்னாள் அரசைக் காட்டிலும் தற்போதைய அரசு பல்வேறு விடயங்களில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஜனநாயகம், மனித உரிமை நிலவரங்கள் என்பன மேலோங்கி இருக்கின்றன. "

இவை ஒருபுறம் இருக்க பொறுப்புக்கூறல், மறு சீரமைப்பு சார்ந்த விடயங்களில் அரசு குறிப் பிடத்தக்க அளவுக்கு எதனையும் முன்னேற்றகர மாக மேற்கொள்ளவில்லை.

போர்ப் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு நியாயம் வழங்கும் வகையிலேயே கடந்த வருடம் ஜெனி வாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பரிந்துரைகள் பெரும்பாலும் செயற்படுத்தப்படாம லேயே இருக்கின் றன.

இந்த நிலையில் அமெரிக்கா, இலங்கை அரசுக்கு இந்த விட யங்களில் அழுத்தங் களைக் கொடுத் திருக்கவேண்டும். இலங்கைக்குத் தற் போது பயணம் மேற் கொண்டுள்ள அமெ ரிக்க இராஜதந்தி ரிகளான நிஷா பிஸ் வால், ரொம் மாலி னோவ்ஸ்கி ஆகியோர் இந்த விடயத்தில் அவதானம் செலுத்து வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை.

அவர்கள் இலங்கை அரசைப் பாராட்டி அறிக்கை களைவிடுவதால் எந்தப் பயனும் இல்லை. பொறுப்புக் கூறல் மற்றும் மறுசீரமைப்பு விடயங்களில் அவர்கள் மேலும் அழுத்தம் கொடுப்பார்கள் என்றும் நம்ப முடியாதுள்ளது.

எனவே ஒபாமா நிர்வாகம் இலங்கை தொடர்பில் அதிருப்திகரமான கொள்கை ஒன்றைப் பின் பற்றுகிறது-என்று கூறப்பட்டது. (த-4)

# பலசேனாவுக்கு எதிரான வழக்குகள் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 16

பொதுபல சேனாவுக்கு எதிராக நடைபெற்று வரும் இரண்டு வழக்குகளும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டன.

2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன் றின்போது, புனித குர்ஆனை அவமதித்தமை மற்றும் ஜாதிக பலசேனாவின் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தவிடாமல் தடையாக இருந்தமை போன்ற இரண்டு குற்றச்சாட்டுகளுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகள் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன் தினம் வந்திருந்தன. வழக்கு விசாரணைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாகவும், அது சட்டமா அதிபரின் கருத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

முதலாவது வழக்கில் பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மாத்திரமே சந்தேகநபராகக் கருதப்படுகிறார் என்றும் மற்றைய வழக்கில், அவருடன் இன்னும் சில தேரர் கள் சந்தேகநபர்களாகக் கருதப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த இரு வழக்குகளும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டன. (த-4)

# மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் யோசனைகள் சில சட்டமாக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 16

மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட சில யோசனைகளைச் சட்ட மாக்குவதற்கு மின் சக்தி மற்றும் புதுப்பித்தல் சக்தி அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய மின்சக்தி தொடர்பான பொறுப்பு மற்றும் செயற்றிறனை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு யோசனை களைச் சட்டமாக மாற்று வதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என அமைச்சர் ரஞ்சித் சியம் பலாப்பிட்டிய தெரிவித் தார்.

மின்சாரத்தைப் பிறப் பித்தல் மற்றும் விநி யோகித்தல் செயற்பாடு களை செயற்றிறனுடன் முன்னெடுத்தல், பாவ னையாளர்களின் உரி மைகளைப்பாதுகாத்தல் தொடர்பிலான பல்வேறு யோசனைகள் மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழுவினால் முன்வைக் கப்பட்டுள்ளதாக அமைச் சர் சுட்டிக்காட்டினார்.

பாவனையாளர்களுக் குத் தடையின்றித் தொடர்ச்சியாக மின்சா ரம் விநியோகிக்கப் படாமை மற்றும் சேவையில் காணப்படு கின்ற குறைபாடுகள் தொடர்பில் சட்டங் களுக்கு அமைவாக எதிர்காலத்தில் செயற் பாடுகளை முன்னெடுப் பதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சியம்பலாப் பிட்டிய கூறினார். (த-4)



# ரணில் திங்களன்று சிங்கப்பூர் பயணம்

கொழும்பு, ஜூலை 16

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளைமறு தினம் திங்கட்கிழமை சிங்கப்பூருக்குப் பயணிக் கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தெற்காசியப் புலம்பெயர் அமைப்பின் மாநாட் டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள் வதற்காகவே பிரதமர் சிங்கப்பூர் செல்லவுள் ளார்.

அவர் அங்கு சிறப்புச் சொற்பொழிவொன்றை யும் ஆற்றவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, சிங்கப்பூரின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் இரு தரப்புப் பேச்சுக்களிலும் ஈடுபடுவார்.

இந்த இரு நாள் உத்தியோகபூர்வப் பயணத்தில் இரு நாடுகளுக்கிடையில் பல உடன் படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன என்று கூறப்பட்டது. (த-4)

# சில பொருள்களின் வரியை நீக்குங்கள்

## அரசிடம் இறக்குமதியாளர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 16

அரசினால் வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் பொருள் களை விநியோகம் செய்ய வேண்டுமாக இருந்தால், சில பொருள்களுக்கு விதிக்கப்பட்ட வரியை நீக்குவதற்கு நட வடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர் கள் தெரிவித்தனர்.

தற்பொழுது சந்தையில் விற் பனையிலுள்ள அத்தியாவசியப் பொருளான சீனி ஒரு கிலோ வுக்கு 115 ரூபா செலவாகின்றது. இதில் 30 ரூபாவை அரசுக்கு வரியாகச் செலுத்த வேண்டி யுள்ளது. இதற்கான வரியை நீக்கினால், சீனியை 85 ரூபா செலவு செய்து கொண்டுவந்து 95 ரூபா சில்லறை விலைக்கு விற்னை செய்யமுடியும் என இறக்குமதியாளர்கள் குறிப்பிட் டனர். (த-4)

# கல்முனை கடலோர மாவட்டத்தை அங்கீகரிக்காவிட்டால் விலகுவேன்

## பிரதியமைச்சர் ஹரீஸ் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 16

அம்பாறை மாவட்டத்திலிருந்து கல் முனை கடலோர மாவட்டத்தைத் தனியான மாவட்டமாக அங்கீகரிக்காவிடின் தனது பிரதி அமைச்சுப் பதவியிலிருந்து விலகப் போகிறார் என்று விளையாட்டுத் துறைப் பிரதி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் உபதலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறி னார்.



அவர் தெரிவித்ததாவது:

மாவட்டத்தைப் பிரிக்காவிடின் அரசமைப்புச் சீர் திருத்த வாக்கெடுப் பில் எனது வாக்கை எதிராகப் பயன்படுத்த வுள்ளேன்.

இந்தக் கோரிக்கை அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் நீண்ட கால வேண்டு தலாகும். சம்பிக்க ரணவக்க இந்தக் கோரிக்கைக்கு எதிராகவுள்ளதற்காக முஸ்லிம்களின் கோரிக்கையைப் புதைத்துவிடமுடியாது.

அம்பாறை மாவட்டத்தில் 70 வீதமான மக்கள் தமிழ்மொழியைப் பேசுபவர்கள். இவ்வாறிருக்கையில் சிங்கள அதி காரிகள் இந்த மாவட்டத்தைப் பரிபாலனம் செய்வது நியாயமற்றது-என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது பாரபட்சத்தின் வெளிப்பாடே

ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டில், எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க கொண்டு வந்து, நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் இந்த நாட்டின் இன ஒற்றுமையைப் பிளந்து தள்ளியது.

அதற்கு முன்னர், இந்த நாட்டுக்கு சமஷ்டி ஆட்சியே நலன்பல தரவல்லது என்று ஓங்கி ஒலித்து வந்த இடதுசாரித் தலைவர் என்.எம். பெரேரா, பண்டாவின் பாதையில் நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அது ஒருவகை சார் 'பல்டி' அடிப்பாக உயர்ந்தது!

இப்போது சமகாலத்தில், தமிழ் இந்து மக்கள் வாழும் பகுதிகளில் வடக்கு - கிழக்கில் --புத்த பிரானுக்கு விகாரை அமைக்கும் "சீசன்" வேகவேகமாக ஊதிப் பெருத்து வருகிறது.

வடக்கு-கிழக்கு வாழ் இந்து சமயத்தினரின் வழிபாட்டுத் தலங்களுக்குப் போட்டியாக, விசமத்தனம் மிகுந்த செயற்பாடுகள் மேலுயர்ந்து வருகின்றன.

கிழக்கின் சாம்பல்தீவில், புதிதாக விகாரை கட்டப்பட்டு, பௌத்த துறவிகள் அதனைத் திறந்து வைக்கவும் ஏற்பாடாகி இருந்தது. எனினும் குறிப்பிட்ட பகுதியில், புதிய விகாரையில் வழிபாடு செய்வதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறது. (அது பிந்திய நிலைப்பாடு)

மதத்தலங்கள் மற்றும் வழிபாட்டுச்சின்னங்களை மற்றொரு மதத்தவர் அல்லது இனத்தவர் செறிவாக வாழும் பகுதியில், அதுவும் தனியாருக்குச் சொந்தமான காணியில் நிலை நிறுத்துவது முரண்பாடுகளை முளைக்க வகை செய்கின்றன என்று (மூதூர்) இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ இ.பாஸ்கரன் தெரிவித்திருப்பது அர்த்த புஷ்டி உள்ளதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமும் ஆகும்.

முந்திய அனுபவங்களின் பிரகாரம், இன்னுமோர் மதத்தவர் அல்லது இனத்தவர் செறிவாக வாழும் பகுதி ஒன்றில், பிறமத சின்னங்களை அல்லது கடவுள்களை வைத்து வந்தமையால் கடந்த காலங்களில் முரண்பாடுகள் ஏற்பட்டமை வரலாறு. அது கவனத்திலும் கருத்திலும் கொள்ளப்பட வேண்டியதாகும்.

மறுபுறத்தில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு-- அதன் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் எடுத்தியம்பிய கருத்துக்களும் இங்கே தொட்டுக்காட்டப்பட வேண்டியவையே

சாம்பல்தீவில் விகாரை அமைக்கப்படுவது இனங்களுக்கு இடையே பெரும் முறுகல் நிலையைத் தோற்றுவிக்கப் போகிறது. நல்லாட்சிக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் ஒரு சதிமுயற்சியாகவே இது அமைகிறது.

தமிழர்களின் பூமியில், விகாரை அமைக்கும் செயற்பாட்டையும், அதன் உள்நோக்கத்தையும் துடைத்தெறிவதற்கு--

ஜனாதிபதி மற்றும் பிரதமர், இது விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு மேற்குறிப்பிட்ட இடத்தில்--

சாம்பல்தீவுச் சந்தியில் பிள்ளையார் விக்கிரகத்தை நிறுவி, இந்துக்கள் வழிபடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குரல் கொடுத்துள்ளார்.

ஒரு சாராரின் மதச் சுதந்திரத்தை, வழிப்பாட்டு உரிமையை தட்டி வீழ்த்துவோரைத் தண்டிக்கும் அதிகாரம், அரசுக்கு -- அதுவும் நல்லாட்சி அரசுக்கு-- இல்லையெனின், அதற்குச் சூட்டப்பட்ட மகுடம் (மகுட வாக்கியம்) அர்த்தமற்றது. அதனை அழித்துக் கடாசிவிட வேண்டும். மக்கள் நலன் நாடிய நல்லாட்சி என்ற வெறும் சொல்லடுக்கில் அர்த்தமே இல்லை! உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவது நல்லாட்சியின் பாரபட்சத்தையே புட்டுக் காட்டுகிறது.

# தவறிழைப்போர் என்றோ ஒருநாள் தண்டனைக்கு ஆளாவது நியதி

மாவை.செங்கோடன்

இறைவன் பஞ்ச பூதங்களையும், படைத்து, மனிதனையும்படைத்து, மனிதனுக்கு உதவியாக, பல்லின சீவராசிகளையும் படைத்தார் என்று ஆகமங்கள் சொல்கின்றன. இந்த ஆகமங்களையும் அதன் விதிமுறைகளையும் இயற்றி மற்றவர்களுக்குப் புகட்டியதும் மனிதன்தான். பாவ புண்ணியங்களைப் பற்றி, பாவம் செய்தால் இறைவன் தண்டிப்பான்என்றமனப் பயத்தை மானிடர் மத்தியில் ஏற்படுத்தியதும் மனிதன்தான். ஒரு காலத்தில் சர்வாதிகார ஆட்சியின் கீழ், பாமரர்களை அடக்கி ஆண்டதும் மனிதன்தான். இன்றைய ஜனநாயக ஆட்சியில் பாமரரை வசீகரம் செய்தோ, ஏமாற்றியோ, இலஞ்சம்கொடுத்தோ, அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அப்பாவி மக்களை அகதிகளாக்கி அவர்தம் இல்லிடங்களையும் அழித்து அலைய வைத்துத் தாமும் தம் உறவுகளும் வாழ்ந்தால் போதும் என்று எண்ணுபவனும் மனிதன்தான்.



ஜனநாயக ரீதியில் சட்டங்களை இயற்றி, அவற்றை நடைமுறைப்படுத்த நீதிபதிகளை உருவாக்கியதும், அந்த நீதிபதிகள் சரியான தீர்ப்பு வழங்க வழக்காளி சார்பிலும், எதிரி சார்பிலும் நீதிபதிகளுக்கு உதவுவதற்கு முன்னிலையாகும் வழக்கறிஞர்களும், மனிதர்கள்தான். இவர்களுக்கு கட்டணம் செலுத்தி ஏற்படுத்துபவர்களும் மனிதர்கள்தான்.

இவ்வளவையும் செய்யும் மனித குலம், தன்னைத்தானே ஒரு கணம் சிந்தனையில் ஆழ்த்தி, தான் செய்தது, செய்வது மனித நீதிக்கு உகந்ததா என்று ஒருசில கணப்பொழுதாவது சிந்தித்து, மனச்சாட்சிக்கு உகந்த முறையில் தீர்மானித்தால் நாடு சுபீட்சம் பெறும்.

மக்களால் மக்களின் பொருட்டு நியமிக்கப்படும் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து தேர்ந்தெடுக்கும் ஒரு தலைவன், தனக்கு அதிகாரத்தை வழங்கிய மக்களுக்குத் தீங்கு நேராது பாதுகாக்க உழைப்பானேயானால், அவனை மக்களும் கைவிட மாட்டார்கள். இறைவனும் அவனுக்குக் கருணை புரிவார்.

அதைவிடுத்து, வாய் பேசாத தெய்வ விக்கிரகங்களை நம்பி வணங்கும் நாம், அவற்றைப் பராமரித்துத்தமது வாழ்க்கையை மேம்படுத்தும் பிரகிருதிகளை நம்பி, இறைவனுக்குக் கொடுப்பதாக எண்ணிக் கொடுக்கும் [illegible] அதனால் எமது மனம் மட்டும்தான் திருப்தி அடையும். இறைவனுக்கு உருவம் என்றொன்று இல்லையாயினும், பஞ்சபூதங்களையும் கட்டுப்படுத்தும், எமது கண்ணுக்குப் புலப்படாத, ஆனால் செயலாக்கத்தில் உணர்ந்துகொள்ளக்கூடிய ஒரு சக்தி இல்லாமல் இல்லை. அதுதான் நாம் செய்யும் நன்மை, தீமைகளுக்கமைய எமக்குத் தண்டனை வழங்க வழி செய்கின்றது.

இவ்வாறான உணர்வுகளின் பிரதிபலிப்பினாலேயே ஞானிகள், அறிஞர்கள், ரிசிகள் எமக்குப்புகட்டிச்சென்ற அறிவுரைகள், இன்றும் எம்மிடம் இறைபக்தியை உண்டாக்குகின்றன. எமது கண் முன்னே குற்றவாளிகள் தண்டிக்கப்படுமிடத்து எமக்கு நல்லறிவை ஊட்டுகின்றன.

மனிதன் தன்னலம் கருதிச் சில தவறுகளைச் செய்திருந்தாலும், அந்தத் தவறுகள் வெளிப்படும் வேளை அந்தத் தவறுகளைப் புரிந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களிடம், தமது தவறுகளை ஒத்துக்கொள்ளும்இடத்து அந்தத்தவறுகளுக்கு மன்னிப்புக் கிடைக்கிறது. இலங்கையில் எமது வாழ்க்கையின் கடந்த கால வரலாறு இதற்குப் பொருத்தமான உதாரணமாகும். பெரும்பான்மையின ஆதிக்கத்தினர், இனவாதிகளால் தூண்டப்பட்டு அநியாயங்கள் செய்தனர். சிறுபான்மையினத் தலைவர்கள் தாம்தான் பெரியவர்கள் என்றஎண்ணங்கொண்டு, கட்சி பிரிந்து வெளிநாடுகளது ஆலோசனைகளையும் உதாசீனம் செய்து நடந்ததால் வந்த வினையை எந்தப் பாவமும் அறியாத பாமர மக்களாகிய நாம் அனுபவிக்க நேர்ந்துள்ளது.

அரசியலில் பொது மக்களை குடிசார் பிரச்சினைகளில் இருந்து மீட்பதற்குப் பொலிஸ் படை மட்டும் போதுமானது. அவர்கள் சாதாரண உத்தியோகத்தர்கள் போல், தமது அலுவலகங்களுக்கு அண்மையில் குடும்பத்துடன் குடியமர உரித்துடையவர்கள்; அதுவும் வாடகைக்கு. இராணுவத்தினர் மற்றும் கடல், வான் படையினரோ நாட்டின் பாதுகாப்புக்காகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களேயல்லாமல், தம் கடமை நேரத்தில் கமம் செய்து சம்பாதிப்பதற்கோ மாற்றார் காணிகளில் பலாத்காரமாக குடும்பத்துடன் குடியமர்ந்து கும்மாளம் போடுவதற்கோ நியமிக்கப்பட்டவர்கள் அல்லர். இராணுவத்தினர் பொதுமக்களுக்குச் சொந்தமான தோம்பு உறுதிக் காணிகளை கையகப்படுத்த சட்ட ஏற்பாடுகளில் இடம் இல்லையே!

போருக்கெனக் கடன்பட்டு வாங்கிச் சேர்த்து வைத்த ஆயுதங்களை வாங்கியவர்களிடமே கொடுத்துக் கடனைக் கழிக்கலாம் என்று நினைக்க, அதனை விரும்பாதவர்கள் செய்த சதியினால் அயலில் வசித்தவர்களுக்கு நட்டஈடு கொடுக்க வேண்டிய நிலை ஏற் பட்டு அரசுக்கு ஒரு ஞானத்தை யும் புகட்டியுள்ளது.

வலிகாமம் மக்கள் எவ்வளவு கஷ்டங்களைப் போர்க் காலத்தில் அனுபவித்தார்கள். இன்றுவரை அனுபவித்துக் கொண்டு எத்தகைய கஷ்டத்தின் மத்தியில் வாழ்கின்றார்கள் என்பதனை அதுதான் அரசுக்கு உணர்த்தியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாப்பிலவு மக்களுக்கு தீர்வு எப்போது?

ருக்கி பெர்னாண்டோ

தாம் தமது வீட்டுக்குள் நுழையும்போது தமது பெற்றோரது அன்பைப் பெறுவது போல் உணர்கிறார் கேப்பாபிலவுக் கிராமத்தைச் சேர்ந்த மூத்த கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

மே 24ஆம் திகதியன்று, தம்மைத் தமது சொந்த நிலத்தில் குடியமர்த்துமாறு கோரி கேப்பாபிலவு கிராம மக்கள் உணவுத் தவிர்ப்புப் போராட்டமொன்றைமுன்னெடுத்தனர். ஆலயவருடாந்த உற்சவமொன்றில் கலந்துகொள்வதற்காக வழங்கப்பட்ட அனுமதியைப் பயன்படுத்தி, அவர்கள் கேப்பாபிலவு கிராமத்துக்குச் சென்று தமது வீடுகளைப் பார்வையிட முடிந்தது.

"வருடாவருடம் எமது சொந்த நிலங்களில் இராணுவத்தினரால் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டடங்கள், வீடுகளை அழித்தும், காணிகளின் எல்லைகளை மாற்றியும் அமைக்கின்றனர். ஆயினும் இடம்பெயர முன்னர் நாங்கள் எங்கள் காணிகளில் நட்ட பயன்தரு மரங்கள் காய்க்கத் தொடங்கியுள்ளன" என கோப்பாபிலவு கிராமத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலரான சந்திர லீலா தெரிவித்தார். "எமது வீடுகளை அவர்கள் அழித்தாலும்கூட, அவர்கள் எமது நிலங்களை விடுவிக்க வேண்டுமேன்றே நாம் விரும்புகின்றோம்" என்றார்–அவர்.

**வரலாறு**

கேப்பாப்பிலவு கிராம சேவகர் பிரிவு, முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் கீழ் அமைந்துள்ளது. இந்தப் பிரதேச செயலகத்தின் கீழ் சூரிபுரம், சீனியாமோட்டை, கேப்பாப்பிலவு மற்றும் பழக்குடியிருப்பு ஆகிய நான்கு கிராமங்கள் உள்ளன. விவசாயிகள் மற்றும் மீனவர்களை அதிகமாகக் கொண்ட இந்தப் பிரதேச வாழ் மக்கள் ஆறு பத்தாண்டுகளுக்கு மேல் இப்பிரதேசத்தில் தொடர்ந்து வாழ்கின்றனர். அத்துடன் காணியற்ற மக்களுக்கு புலிகள் அமைப்பால் இந்தப்பிரதேசத்தில்காணிகள் வழங்கப்பட்டன. பயிர் செய்வதற்கு உகந்த செம்மண், நல்லதண்ணீர்க்கிணறுகள் மற்றும் கடல் வளங்களை கேப்பாப்பிலவு தன்னகத்தே கொண்டுள்ளது.

2012 செப்ரெம்பரில் கேப்பாப்பிலவைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு கால் ஏக்கர் காணி வீதம் ஒதுக்கப்பட்டன. இதனால் இவர்கள் தமது சொந்த இடத்திலிருந்து மீண்டும் சூரிபுரம் என்கின்ற கிராமத்துக்கு மீளவும் இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. இதுவே தற்போது கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமம் என அழைக்கப்படுகிறது. தமக்கு அரசால் எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை என இந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

> இடம்பெயர்ந்த மக்களின் 520 ஏக்கர் நிலப் பரப்பு இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த நிலங்களிலுள்ள வீடுகள் இராணுவத்தினரதும், அவர்களது குடும்பங்களினதும் வாழ்விடமாக மாறியுள்ளது.

**தற்காலிக அனுமதிகள்**

150 குடும்பங்களும் புதிய காணிகளை ஏற்றுக்கொள்வதாக விண்ணப்பம் ஒன்றில் கையொப்பமிடுமாறு முன்னாள் அரச அதிபரால் கோரப்பட்டது. 4 குடும்பங்கள் தவிர தமது உறவினர்களுடன் தங்கியிருந்த கேப்பாப்பிலவைச் சேர்ந்த ஏனைய 146 குடும்பத்தினரும் ஜனவரி 2013இல் சூரிபுரத்தில் குடியேறினர். இவர்களது சொந்த நிலங்கள் இலங்கை இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாமையே இதற்கான காரணம்.

இடம்பெயர்ந்த மக்களது 520 ஏக்கர் நிலப் பரப்பு இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த நிலங்களில் உள்ள வீடுகள் இராணுவத்தினரதும், அவர்களது குடும்பங்களினதும் வாழ்விடமாக மாறியுள்ளது.

**வீட்டுத் திட்டம்**

மார்ச் 2014இல், ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களைச் சேர்ந்த மக்களுக்காக இராணுவத்தினரால் 287 தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டன.

இந்தப் பிர தேசத்தில் போதியளவு நீர் வசதியில்லாததால் கிட்டத்தட்ட 25–30 வரையான குடும்பங்கள் இராணுவத்தினரால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளில் தங்கியிருக்கவில்லை. "நாங்கள் முன்னர் வாழ்ந்த இடத்தில் பெரிய கிணறுகள் இருந்தன. இதனால்குளிர்மையான, சுத்தமான நீரை நாங்கள் குடித்தோம். ஆனால் தற்போது நீண்டதூரம்நடந்துசென்றேகுளிக்க வேண்டியுள்ளது" என இக்கிராமத்தைச் சேர்ந்த வயது முதிர்ந்தவர்கள் ஏக்கத்துடன் கூறினர்.

விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவர்கள் தமது புதிய குடியேற்றக் கிராமத்திலிருந்து பத்து கிலோமீற்றர் தொலைவிலுள்ள தமது நெல்வயல்களுக்குச் இராணுவ ஆக்கிரமிப்பின் காரணமாக மாற்று வழியால் செல்ல வேண் டியுள்ளது.

**இரா்ணுவ ஆக்கிரமிப்பு**

கடற்கரை வழியாகக் கிட்டத் தட்ட மூன்றரைக் கிலோமீற்றர் பாதையால் பொதுமக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாக மீனவர் சங்கத்தின் தலைவர் காளியப்பன் மகேஸ்வரன் தெரிவித்தார். "மீனவர்கள் தமது படகுகளைக் கரையில் நிறுத்தி வைக்க முடியாத நிலை காணப்படுகிறது. இரா்ணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கடற் கரையிலிருந்து கடலில் 40 மீற்றர் தூரம் வரை மீன்பிடியில் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது" எனவும் அவர் தெரிவித்தார். இராணுவத் தடைகள் காரணமாக இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு ஒரு தடவை மட்டுமே மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கமுடியும். இதனால் இவர்களது வருமானம் பாதிக்கப்பட்டது.

வேலைவாய்ப்பின்மை, கிராமத்து இளைஞர்களை மோசமான நிலைக்குக் கொண்டு செல்வதாகக் கிராமத்தவர்கள் கூறினார்கள். மக்கள் கசிப்பை பாவிக்கின்றனர். சில குடும்பங்கள் பெண்களின் பொறுப்பில் உள்ளன. இதனால் இந்தப் பெண்கள் தமது குடும்பங்களுக்காக சுமை தாங்கிகளாக மாறியுள்ளனர். பெண்கள் வெளியில் தமது பணிகளை முடித்து விட்டு வீட்டுக்கு காலதாமதமாகி வருவதானது குடும்பங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்துகிறது.

**அதிபர் செயலகத்துக்கான விண்ணப்பம்**

தமது சொந்த நிலங்களை விடுவிக்குமாறு கோரி 2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் கேப்பாப்பிலவு வாழ் மக்கள் ஐந்து தடவைகள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர். இதன்விளைவாக 2015இல் இந்த மக்கள் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

**மாற்று நிலம்**

கடந்த மேமாதம் கேப்பாப்பிலவு வாழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தின்போது அரசியற் கட்சிகள் தலையீடு செய்ததாகவும், இப்பிரச்சினைக்கு மூன்று மாதங்களுக்குள் தீர்வு காண்பதாக ஆர்ப்பாட்டத்தின் மூன்றாவது நாள் வடக்கு மாகாண முதலமைச்சர் கடிதம் மூலம் தம்மிடம் உறுதியளித்த நிலையில், ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டதாகவும் சமூக ஆர்வலரான சந்திரலீலா தெரிவித்தார். ஆனால் வாக்குறுதிகளை அரசியல்வாதியான முதலமைச்சர் நிறைவேற்றவில்லை. பதிலாக மீண்டும் போராட்டத்தைஅறிவித்திருக்கிறார்கள் கோப்பாப்பிலவு மக்கள்.

## சிரமத்துக்கு உள்ளாக வைக்கும் தனியார் பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கே.கே.எஸ் வீதியூடாக குப்பிளான் வரை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள், நாளாந்தம் குறிப்பிட்டதொரு நேர இடைவெளியில் தமது சேவைகளை மேற்கொண்டு வருகின்றன.

குப்பிளானில் இருந்து நாளாந்தம் தமது தேவைகளுக்காக யாழ்.நகருக்குப் பயணிப்போர், அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பல தரப்பினரும் குறித்த 770 ஆம் இலக்க வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களையே தமது பயணத்துக்கு நம்பி இருக்கின்றனர். ஏனெனில், குறித்த வழித்தடத்தில் இ.போ.ச பஸ்சேவை நடத்தப்பட்டாலும்கூட அது ஒரு ஒழுங்குமுறையில் இடம் பெறாததால் (பயணத்துக்கான முக்கிய காலநேரம், தினமும் நேரசூசிகைப் படியான சேவை) குப்பிளான் மக்கள் தமது பயணத்துக்கு தனியார் பஸ் சேவையையே நம்பியுள்ளனர். அதுவும் கூட சில நாள்களில் முன்னறிவித்தல் எதுவுமின்றித் தடைப்படுவதால், குப்பிளான் மக்கள் தமது பிரயாணத்துக்குக் கடும் சிரமத்தையும் நெருக்கடியையும் எதிர்கொள்ள நேரிடுகிறது.

கடந்த (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்தரை மணிக்கு யாழ்.பஸ்நிலையத்திலிருந்து குப்பிளானுக்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டிய தனியார் பஸ்சேவை, எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்தப்பட்டதால் அன்றைய தினம் எனது அலுவலகத்திலிருந்து வீட்டுக்குச் செல்வதற்கு பெரும் இடர்பாட்டை எதிர்கொண்டேன். கே.கே.எஸ்.வீதியூடாக தெல்லிப்பழை சென்ற பஸ்ஸில் பயணித்து, மல்லாகம் சந்தியில் இறங்கி கால்நடையாகக் குப்பிளானைச் சென்றடைய வேண்டிய சிரம நிலைக்கு நான் முகம் கொடுக்க நேரிட்டது. தினமும் குப்பிளானில் இருந்து யாழ்.நகரிலுள்ள அலுவலகத்துக்கு சென்று திரும்பவேண்டிய நிலையிலுள்ள பெண்ணான நான், இதனால் பெரும் மன உளைச்சலுக்கும் உடல் வருத்தத்துக்கும் உள்ளாக நேர்ந்தது. இத்தகைய சிரமத்தை அடிக்கடி சந்திக்க வேண்டியுள்ளதால், தயவு கூர்ந்து சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் என்போன்றவர்களது நலனைக் கருத்தில் கொண்டு காலை மாலை வேளைகளில், தடை ஏற்படாத விதத்தில் தினமும் மேற்குறித்த தனியார் பஸ் சேவையை நடத்த நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்

க.மனோ[illegible]
குப்பிளான்.

## ஊழலுக்கு உரிய தண்டனை கிட்ட வேண்டும்

இன்று மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சிச் சபைகள் போன்றவற்றில் பேசு பொருளாகிவிட்ட விடயம் லஞ்சம், ஊழல், மோசடி என்பவையாகும். இந்த மோசடியில் ஈடுபட்டதான குற்றச்சாட்டில், முன்னாள் ஜனாதிபதி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ளூராட்சி தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் அரசநிறு வனத் தலைவர்களை அரசு சட்டத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தியதுடன், அவர்களது மோசடி அளவு மதிப்பிடப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பலர் வெளிநாடுகளுக்குத் தப்பியோடிவிட்டனர். பலரது பதவி வெறிதாக்கப்பட்டுள்ளது. இன்னும் பலர் சட்டத்தின்பிடியில் உள்ளனர். வேறு சிலர் பெரிய மோசடி ஊழல் (FSD) திட்டத்தின் கீழ் விளக்கமறியல் சிறையில் உள்ளனர். இதனைவிட நிதிமோசடி, ஊழல் மோசடி மேற்கொண்டதாகப் பலரது பெயர் வெளிக் கிளம்பிய நிலை யில் உள்ளது. இதேபோலத்தான் வடக்கில் நெல்சிப் என்ற உலக வங்கி நிதித் திட்டத்தின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான அபிவிருத்திகளுக்கென பல கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன.

2012 இல் இருந்து வடக்கில் நெல்சிப் திட்ட ஒப்பந்த வேலைகளை பொறுப்பேற்றவன் என்ற வகையில்தான் இங்குள்ள பிரதம அதிகாரி, உள்ளூராட்சி ஆணையாளர், உதவி ஆணையாளர், மாவட்ட பொறியியலாளர், செயலாளர், தொழிநுட்ப அலுவலர், திட்டத்தோடு தொடர்புடைய அலுவலர்களை நான் மதிப்பீடு செய்தேன்.

இங்கு நான் குறிப்பிடுவது யாதெனில், மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய வேலைத்திட்டத்துக்கு மதிப்பில்லை. அவ்வேலையூடாக எவ்வளவு பணத்தை, எவ்வாறு சுருட்டலாம் என்பதில்தான் முழுக்கவனமும் செலுத்தப்பட்டது. இவ்வாறாக வடபகுதியில் பெரிய மோசடியுடன் தொடர்புடைய 10 பேரின் பெயர்களை முதலமைச்சர், பிரதம செயலாளர் சட்டத்தின் முன்கொண்டுவந்துள்ளனர். இவர்களது குற்றங்களில் இருந்து தப்பிச்செல்ல விடாது உண்மைகளைக் கண்டறிந்து உரிய தண்டனையை வழங்குங்கள். மோசடி செய்யப்பட்ட பணத்தை அறவிட்டு மீள அபிவிருத்திக்கு பயன்படுத்துங்கள். பலர் வெளி நாட்டுக்கு தப்பியோட முயற்சிக்கின்றனர். உண்மைகளை பிரதம செயலாளர் வெளியிட வேண்டும். அதுவே நல்லாட்சிக்கு வலுவும் மதிப்பும் சேர்க்கும்.

கண்ணபிரான், வடமராட்சி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப [illegible] விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. [illegible] விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய தின நிகழ்வில் பிரான்ஸில் கொடூரம்

## மக்கள் கூட்டத்தினுள் வாகனத்தை வேகமாகச் செலுத்தி மோசமான தாக்குதல்; 84 பேர் சாவு

பாரிஸ், ஜூலை 16

பிரெஞ்சு தேசிய தினக் கொண்டாட்டத்தின் போது பிரான்ஸில் இடம்பெற்ற மிகமோசமான வாகனத் தாக்குதலில் 84 பேருக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர் என அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரான்சின் நைஸ் எனும் இடத்தில் மக்கள் கூடிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டபோது, வெள்ளை லொறியில் வந்த ஒருவர் சனக் கூட்டத்தினுள் வாகனத்தைத் தாறுமாறாக வேகமாகச் செலுத்தி, உயிரிழப்பை ஏற்படுத்தினார் என்று பொலிஸார் கூறினர்.

இந்தத் தாக்குதலில் 84க்கு மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், பலர் மேசமாகக் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

31 வயதான துனிசியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒருவரே, இந்தத் தாக்குதலை அரங்கேற்றினார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பொலிஸார் அவரை உடனடியாகச் சுட்டு வீழ்த்தினர்.

வாணவேடிக்கைகள் முடிந்த பின்னர், இரவு 10.30 மணியளவில் இந்தக் கொடூரத் தாக்குதல் இடம்பெற்றது.


குறித்த நபர், மக்கள் கூட்டத்தினுள் வாகனத்தை மணிக்கு 60 -70 கிலோ மீற்றர் வேகத்தில் தாறுமாறாகச் செலுத்தினார் எனவும், பொலிஸாருக்கும் அவருக்கும் இடையே துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றதாகவும் அதனை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். அத்துடன் லொறியில் துப்பாக்கிகள், கிரனேட்டுக்கள் என்பன இருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

"பிரான்சில் மீண்டும் ஒருமுறை கொடூரத் தாக்குதல் இடம்பெற்றது. இந்த தாக்குதலுக்குத் தீவிரவாதிகள் மறுப்பு தெரிவிக்க முடியாது" - என்றார் பிரான்ஸ் ஜனாதிபதி.

நாடு தழுவிய ரீதியில் பாதுகாப்புக்களைப் பலப்படுத்துமாறும் அவர் உத்தரவிட்டார்.

"இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிரான போரில், பிரான்ஸ் தொடர்ந்தும் ஈடுபடும். இந்தத் தாக்குதல், பிரான்ஸ் தொடர்ந்து தீவிரவாதத்தை எதிர்க்கவேண்டும் என்பதைக் காட்டியுள்ளது. பிரான்ஸ் உறுதியானது. தொடர்ந்தும் உறுதியாகச் செயற்படும்" எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர், குறித்த வெள்ளை நிற லொறி அந்தப் பகுதிக்கு அண்மையில் காத்திருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்குப் பிரிட்டன் பிரதமர் தெரேசா மே இரங்கல் தெரிவித்தார் என அவரது ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இந்தச் சம்பவத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது கண்டனத்தை வெளியிட்டார். (த-ரி4)

# பதவி வி
# பேசவே

### சிரிய ஜனாதிப

டமஸ்கஸ், ஜூலை 16

நான் பதவி விலகுவது தொடர்பில் ரஷ்யா என்னுடன் பேச்சு நடத்தவில்லை என சிரிய ஜனாதிபதி பார் அல் -அசாத் நேற்றுமுன்தினம் ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

சிரிய மக்கள் மாத்திரமே ஜனாதிபதியைத் தேர்ந் தெடுக்கும் உரிமை உடையவர்கள் எனவும் அவர் கூறினார்.

சிரியாவில் இடம்பெற்றுவரும் வன்முறைச்சம்பவங்களுக்கு அசாத் பொறுப்புக் கூற வேண்டும். சிரியாவில் அரசியல் மாற்றம் ஏற்பட்டால் நாட்டில் சுமுகமான நிலை தோன்றும் என அமெரிக்கா முன்னர் தெரிவித்திருந்தது.

சிரிய அரசுக்கு ஆதரவாக இஸ்லாமியப் போராளிகள் மீது ரஷ்யா தாக்குதலை நடத்தி வருகின்றது. ரஷ்ய ஜனாதிபதி புடின், அரசியல் தீர்வு சிரியாவில் இடம்பெறு குழப் சூழலை மாற்றும் எனத் தெரி இந்த நிலையில், அமெரிக்க இ கச் செயலாளர் ஜோன் கெரி ஜனாதிபதி அசாத்தைப் வார்த்தை நடத்த மொஸ்கே வருமாறு அழைப்பு விடு ஆனால், அமெரிக்கா- இணைந்து, அசாத்தைப் பத இருந்து நீக்குவது தொடர்பில் கருத்துக்களை முன்வைக்கவி

"ரஷ்யாவின் அரசியல், நாடுக ஒப்பந்தங்களைப் பேணு அடிப்படையாகக் கொண்டது தனி மனிதப் பெறுமதி சார்பா இன்னும் சில மாதங்களில் சிரி தீவிரவாதிகள் முற்றாக ஒ படுவர். ரஷ்யாவின் தலை மூலமே தீவிரவாதத்தை எ பின்தள்ள முடிந்தது அபெ

# ஒலிம்பிக்கில் தாக்குதல்கள் நடத்த போராளிகள் திட்டம்

### பிரான்ஸ் உளவுத்துறை தகவல்

பிரேஸிலியா, ஜூலைஸி6

பிரேஸிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் தாக்குதல்களை நடத்த போராளிகள் திட்டம் தீட்டியிருப்பதாக பிரான்ஸ் இராணுவ உளவுத்துறைதகவல் தெரிவித்தது.

றியோ டி ஜெனிரோவில் தாக்குதல்களை மேற்கொள்ள பிரேஸிலில் உள்ள இஸ்லாமியப் போராளிகளால் திட்டமிடப்பட்டதாக, இராணுவ அதிகாரி கிறிஸ் ரோப்பே கொமாட் கூறினார். இதனைத் தவிர வேறு தகவல்களை அவர் ஊடகங்களுக்கு வழங்கவில்லை.

ஆனாலும், இந்தத் தகவல் உத்தியோகபூர்வமாக வழங்கப்படவில்லை எனப் பாதுகாப்பு ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். தாக்குதலுக்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்ற போதும், இவற்றை நடத்துவதற்கான திறன் குறைவு என பிரேஸில் நீதித்துறை அமைச்சர் கூறினார்.



பாதுகாப்புக் கருதி, 47 ஆயிரம் பொலிஸார், 38 ஆயிரம் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

10 ஆயிரத்து 500 வீர, வீராங்கனைகள், அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பிரேஸிலுக்கு வருகை தரவுள்ளனர். பிரேஸில் நீதி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கையில், சந்தேகத்துக்குரிய நபர்களின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனாவின் சான்டொங் மாகாணத்தில், பின் சோகு பகுதியில் அமைந்துள்ள இரசாயன ஆலையின் கோபுரம், கடந்த புதன்கிழமை வெடிகுண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டது. 58 மீற்றர் உயரமான இந்தக் கட்டடம், 10 வினாடிகளினுள் தரைமட்டமாகியது. இந்த வெடிப்பை நிகழ்த்துவதற்கு முன்னர் வெடிகுண்டு நிபுணர்கள் நன்கு திட்டமிட்டு குண்டுகளைப் பொருத்தினர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். (த-ரி4)

# லகல் குறித்து பில்லை ரஷ்யா

தி தெரிவிப்பு



ழுப்பமா
ரிவித்தார்.
இராஜாங்
கரி, சிரிய
ப் பேச்சு
கோவுக்கு
டுத்தார்.
-ரஷ்யா
பதவியில்
பில் அவர்
கவில்லை.
டுகளுடன்
ணுவதை
து அல்ல.
பானது.
சிரியாவில்
ஒழிக்கப்
லயீட்டின்
எம்மால்
அமெரி

இந்த விடயத்தில், தீவிரவாதிகளுக்குச் சார்பாகச் செயற்படுகின்றது. அவர்களது நோக்கம் சிரிய அரசைக் கவிழ்ப்பதாகும். நாம் தீவிரவாதத்தை முற்றாக ஒழிக்க செயற்பட்டு வருகின்றோம்" - என்று கூறினார் அசாத்.

2012ஆம் ஆண்டு சிரியப் போர் குறித்து செய்தி வெளியிட்டு வந்த ஊடகவியலாளர் மேரி கொல்வின் கொல்லப்பட்டமைக்குச் சிரிய ஜனாதிபதி மீது குற்றஞ் சுமத்தப்பட்டு, ரைம்ஸ் பத்திரிகையில் இந்த வார ஆரம்பத்தில் கட்டுரை வெளியானது.

"போரின்போது அவர் நாட்டுக்குள் வருகை தந்திருந்தார். அவரது வருகை சட்டபூர்வமற்றது. அத்துடன் அவர் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக வேலை செய்தார். அவர் மீது நடத் தப்பட்ட தாக்குதலுக்கு அவரே பொறுப்பு" எனக் கூறினார். (த-ரி4)



# வாகனமற்ற நகரமாக மாறும் பிடெல்பியா

## மக்களின் உடல் நலனைக் கருத்தில் கொண்டு

வொஷிங்ரன், ஜூலை 16

அமெரிக்காவின் ஐந்தாவது பெரு நகரமான பிடெல்பியாவை வாகனமற்ற நகரமாக மாற்றும் முயற்சியில் அந்த நாட்டு அரசு ஈடுபடுகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இருந்து, வார இறுதி நாள்களில் அங்கு கார் பாவனைக்குத் தடை விதிக்கப்படவுள்ளதாக அந்த நாட்டு அரசு அறிவித்தது.


நகர மக்களின் சுகாதார நலனைக் கருத்தில்கொண்டு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

குறைந்தது 8 மைல்கள் தூரமுள்ள வீதிகளைக் காலை 8 மணியில் இருந்து, பிற்பகல் ஒரு மணி வரை மூடுவதற்கு அதிகாரிகள் திட்டமிட்டிருக்கின்றனர் எனத் தகவல் வெளியாகியது.

இது குறித்து நகர ஊடகப் பேச்சாளர் தெரிவித்ததாவது:

மக்களின் உடல் ஆரோக்கியத்தைக் கருத்தில்கொண்டு வாகனமற்ற வீதிகளில் நடைப் பயிற்சியில் ஈடுபடவோ, ஓடவோ முடியும். மோட்டார் சைக்கிள் கூடப் பயணிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காதவாறு நடவடிக் கைகளை நாம் முன்னெடுத்துள் ளோம்-என்றார். இதனை முன்னிட்டு ஆரோக்கியமான நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது அந்த நகரத்தின் நெடுந்தூர ஓட்டச் சங்கம் தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்தது. வாகனங்களற்ற வீதிகளில் பயிற்சிகளை மேற்கொள்வது சிறப்பான அனுபவமாக அமையும். இதன் மூலம் மேலும் ஆரோக்கியம் வலுப்படும் என அதிகாரிகள் கூறினர். (த-ரி



# தொடு பேசி விளையாட்டால் இரண்டு பேர் படுகாயம்

வொஷிங்டன், ஜூலை 16

போக்மன் கோ எனும் கைபேசி விளையாட்டால் இருவர் உயரமான இடத்தில் இருந்து வீழ்ந்து படுகாயங்களுக்கு உள்ளாகினர் என அமெரிக்க மீட்புப் படையினர் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தொடுபேசி விளையாட்டின் மீது கொண்ட அதிக ஈடுபாடு காரணமாகத் தடுப்பை மீறிச் சென்று, கடற்கரை ஓரமுள்ள ஆழமான பகுதியில் இருவரும் வீழ்ந்தனர்.

ஒருவர் 50 அடி உயரத்தில் இருந்தும், இன்னொருவர், 9 அடி உயரத்தில் இருந்து வீழ்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந் அவசர உதவிக் குழுவின இருவரையும் மீட்டு மருத்து மனையில் சேர்த்தனர்.

அண்மைக்காலமாக போக்ம கோ எனும் விளையாட் தொடு பேசிப் பாவனை யாளர்களிடம் அதிக வரவே பைப் பெற்றுள்ளது. குறி விளையாட்டில் வடிவமை கப்பட்ட அனிமேசன் க பாத்திரத்தைக் கைப்பற்று தான் விளையாட்டின் வெ யாகக் கருதப்படும். (த-ரி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜூலை மாத ராசி பலன்கள்



## மகரம்

உத்தராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்

எந்தவொரு வேலையையும் நுணுக்கமாகச் செய்து மற்றவர்களின் பாராட்டைப் பெறும் மகர ராசியினரே இந்த மாதம் தன ஸ்தானத்தில் கேது, ரண–ருண ஸ்தானத்தில் சூரியன் – புதன் – சுக்கிரன், அஷ்டம ஸ்தானத்தில் குரு – ராகு, லாப ஸ்தானத்தில் வக்கிரக நிவர்த்தி பெற்ற செவ்வாய் – ராசிநாதன் சனி என கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது. ராசிக்கு பதினொன்றில் ராசிநாதன் சனி செவ்வாயுடன் சேர்ந்து சஞ்சாரம் செய்வதால் பல்வேறு நன்மைகள் உண்டாகும். கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோசம் உண்டாகும். ஆறாமிடத்தில் சூரியன் சஞ்சாரம்செய்வதால் இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும்.

தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். புதிய தொழில், வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கித் தைரியம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையைச் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். அலுவலக வேலையாக வெளியூர் செல்ல நேரலாம்.

கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் குறையும். குடும்பத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு இருக்கும். பிள்ளைகளின் மீது கவனம் தேவை. வாகனங்களால் செலவு இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் உடல் நிலையில் கவனம் தேவை.

பெண்களுக்கு மனதில் மகிழ்ச்சி உண்டாகும்படியான சூழ்நிலை உண்டாகும். வெளியூர் பயணம் செல்ல நேரலாம்.

மாணவர்களுக்குப் பாடங்கள் படிப்பது மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கும். தேர்வில் அதிக மதிப்பெண் பெறுகின்ற குறிக்கோளுடன் செயற்படுவார்கள்.

**பரிகாரம்:** சனி பகவானை தீபம் ஏற்றி வணங்கி வழிபட, உடல் ஆரோக்கியம் பெறும். கஷ்டங்கள் குறையும்.

**உத்தராடம் 2, 3, 4 பாதம்:**
எதைப் பற்றியும் கவலைப்படாமல் காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். ஆனால் மனதில் ஏதாவது சஞ்சலம் இருந்து கொண்டே இருக்கும். திடீர் பணத்தேவை ஏற்படலாம். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும்.

**திருவோணம்:**
தொழில் வியாபாரம் முன்னேற்றமடையத் தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள், மேல் அதிகாரிகள் சொல்வதைச் செய்வதன் மூலம் நன்மை கிடைக்கப் பெறுவார்கள்.

அவிட்டம் 1,2 பாதம்:
குடும்பத்தில் அமைதி ஏற்படும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம்விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நன்மையைத் தரும். பிள்ளைகள் பற்றிய கவலை நீங்கும். அவர்களுக்குத் தேவையான பொருள்கள் வாங்கி கொடுத்து மகிழ்வீர்கள்

(தொடரும்)

# காவுகொள்ளப்படும் ஆரோக்கியத்தை காத்திடுவீர்

உடுவிலூர் கலா

அழகான சமுதாயம் என்பது ஆரோக்கியமான மனிதர்களை உள்ளடக்கியது. மனிதனது ஆரோக்கியம் நல்ல நிலையில் இருந்தால் சாவு வெகு தூரத்தில் இருக்கும். எம் சமுதாயமானது ஆரோக்கியத்தையும், சமாதானத்தையும் தொலைத்து, நீண்ட நாள்களாகி விட்டன.

விலைகொடுத்து வாங்கிய நோய்களிலிருந்து நிவாரணம்பெற மருத்துவமனைக்களுக்குப் படை எடுப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. முப்பது வயதானால் மாத்திரைகளோடு பயணம் செய்யும் துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. நீரிழிவு தற்போது வயது வித்தியாசமின்றி வந்து சேர்கிறது. கொலஸ் ரோல், உயர் குருதிஅமுக்கம், நீரிழிவு, புற்று நோய் போன்ற நோய்கள் மிக இலகுவாக எம்ம வரை ஆட்கொள்வதை அவதானிக்கமுடிகிறது.

ஆரோக்கியம் என்பது சத்துணவு, உடற்பயிற்சி, மனமகிழ்ச்சி என்பவற்றை அடித்தளமாகக் கொண்டது. இந்த மூன்றுமே எம் சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பது கசப்பான உண்மை. ஆட்டுக்கல், திருகை, உரல், உலக்கை என்பன அரும்பொருள்களாகி விட்டன. முன்னையோர் உடலை வருத்தி வியர்வை சிந்திப்பாடுபட்டனர். இதனால் உட்கொள்ளும் உணவு சமிபாட்டு நேர ஒழுங்கில் சமிபாடடைந்தது. இன்று விறகு கொத்துவோரும் இல்லை. உரலில்இடிப்போரும் இல்லை. வாயு அடுப்பு, மின்னடுப்பு என்பன நொடிப் பொழுதில் சமைக்க உதவுகிறது. கிறைண்டர் பெண்களின் அரைத்தல், இடித்தல் வேலை களுக்குக் கை கொடுக்கிறது. உடற்பயிற்சி சிறுவர், முதியவர் வரை கட்டாயமானது. இன்றைய சிறுவர்களுக்கு விளையாட நேரம் ஒதுக்குவதில்லை. காரணம் கல்விச் சுமை பெரும் சுமையாக சுமத்தப்பட்டுவிட்டது. ஒரு பிள்ளையால் சுமக்க முடியாத சுமையை முதுகில் சுமத்தி பாடசாலைக்கு அனுப்பி வைக்கும் பெற்றோர், பாடசாலை நேரம் முடிந்ததும், படித்தவற்றை மீட்டுப் பார்க்கவே நேரம் கொடுக்காமல், பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுப்பி வைக்கும் கொடூரம் பெற்றோருக்கு அதியுச்ச கௌரவமாகக் கொள்ளப்படுகிறது. படிபடி என்கிற சொல்லே பெற்றோரால் பிள்ளைகளுக்குப் பலவந்தமாகத் திணிக்கப்படுகிறது. இப்படியன ஆய்க்கினை வட்டத்துள் சுழலும் பிள்ளை, விளையாட்டுக்களில் எப்படி ஈடுபட முடியும்? மாலை முழுவதும் விளையாட்டு என சும்மாவா பாரதி குரல் கொடுத்தான்?



எம்மவரில் பெரும்பானவர்களின் உணவுப் பழக்க வழக்கமானது கவர்ச்சிகரமாக உள்ளது. பண விரயத்தோடு நோய்தேடும் இந்தப் பழக்கங்களை விரும்பிக் கடைப்பிடிக்கின்றனர்.

முன்னர் விருந்தாளி வீட்டுக்கு வந்தால் அறுசுவையுணவு கொடுத்து மகிழ்ந்த காலம். அதுவும் தரையில் இருத்தி வாழையிலையில் உணவு பரிமாறி உடல் ஆரோக்கியம் பேணினர். அறு சுவையுணவு தமிழனுக் குரியது. அதுவே ஆரோக்கியத்தின் அடித்தளமாக இருந்தது. இன்று நடப்பதென்ன? பிரைட்றைஸ், பிட்சா என்பன அதியுயர் ஹோட்டல்களில் ஓடர் பண்ணி எடுத்து விருந்தினர்களுக்குப் பரிமாறி விருந்தை தரமுயர்த்த கொக்கோ கோலா, செவின்அப் என குளிர் பானங்களையும் பரிமாறி மகிழ்கின்றனர். சிலர் மதுவகைகளையும் பரிமாறுகின்றனர்.

இவையெல்லாம் கட்டாயமாக எம் மிடரில் நோய்களை திணித்து மகிழும் ஈனச்செயல். பாடுபட்டு உழைத்த பணத்தைக் கொடுத்து பொதிகளில் நோய்களைக் கட்டி வாங்குகிறோம் என்கிற உண்மையை மறந்தே விடுகின்றனர்.

கடைச்சாப்பாடு வாய்க்குருசியாகவும், கவர்ச்சியாகவும் இருக்கும். பொரித்த எண்ணெய், நிறமூட்டிகள், சுவையூட்டிகள் என்பவற்றைப் பயன்படுத்தி வியாபாரத்தை நோக்கமாகச் செய்யப்படும் உணவு களை வாங்கி உண்ணலாமா? மென் பாணங்கள், சோடாவகைகள் எல்லாமே இரசாயனக் கலவைகளால் நீடித்த பாவனைக்கு அடைக்கப்பட்டுள்ளது. ஏன்? பால்மாக்களைக்கூட பால் உயர் வெப்பத்துக்கு கொண்டு சென்று தாழ்ந்த குளிர்நிலைக்கு உள்ளாக்கி மாவாகச் செய்கிறார்கள். இதனால் பாலில் உள்ள சத்துக்கள் பெரும்பாலும் அழிந்து விடு கின்றன. பசுப்பாலை நாம் நேரடியாகக் காய்ச்சிப் பருகினால் முழுமையான உணவாகக் கொள்ள முடியும். வாய்க்கு ருசியாக உண்ணுவதை விடுத்து வாழ்வுக்கு ஆதாரமாக உண்ணப்பழக வேண்டும். நோய் எதிர்ப்புச்சக்தி எம் சமுதாயத்தில் குறைந்து விட்டது. காரணம் பகட்டு வாழ்க்கைக்கு முன்னுரிமை கொடுத்து சத்துக் கெட்ட உணவுகளை உண்கிறோம்.

> "யாழ்ப்பாணத்தில் நாம் வசிப்பதில் இறுமாப்படையவேண்டும். காரணம்: காய்கறிகள், தானியங்கள், பச்சை இலைகள் என்பன தாராளமாக புதிதாக, பெறக்கூடியதாக உள்ளன. வல்லாரை, முசுட்டை மொசுமொசுக்கை, தூதுவளை, சண்டியிலை, முல்லை, முருங்கையிலை, தவசி முருங்கை, கொவ்வை, பொன்னாவரசு, பசளிக்கீரை என்பன தாராளமாகக் கிடைக்கின்றன."

யாழ்ப்பாணத்தில் நாம் வசிப்பதில் இறுமாப்படைய வேண்டும். காரணம் காய்கறிகள், தானியங்கள், பச்சை இலைகள் என்பன தாராளமாகவும் புதிதாகவும்பெறக்கூடியதாக உள்ளன. வல்லாரை, முசுட்டைமொசுமொசுக்கை, தூதுவளை, சண்டியிலை,முல்லை, முருங்கையிலை, தவசி முருங்கைகொவ்வை, பொன்னாவரசு, பசளிக் கீரை என்பன தாராளமாகக் கிடைக்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி

# ஆடி மாதத்தின் முதல்நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம்

தமிழர்களின் வாழ்வியலில் பன்னிரண்டு மாதங்களும் முக்கியத்துவம் கொண்டதாகவே விளங்குகின்றன. சித்திரை மாதம் தொடங்கி பங்குனி மாதம் வரையில் ஒவ்வொரு மாதமும் மகத்துவமும், பெருமைகளையும் ஒருங்கே கொண்டுள்ளன.

தமிழர்கள் வாழ்வில் கூடி வாழ்ந்த காலங்களையும், பிரிந்து வாழுகின்ற காலங்களையும் போருக்கு முன் "போருக்குப் பின்" என்றகால அடிப்படையில் காணமுடிகின்றது. தமிழ்மக்கள் தம் வாழ்வில்கூடி வாழ்ந்ததும் ஆனந்தமடைந்ததும் ஆடிமாதமாக இருந்தாலும், தமிழர் வாழ்வையும், உயிரையும் சீரழித்துக் காவு கொண்டதும் இந்த ஆடி மாதமாகும். தமிழர்களைப் பொறுத்தமட்டில் ஆடிமாதம் ஆன்மிக வழியைக் கடைப்பிடிக்கின்ற மாதமாகவும் தமிழ்ச் சமூகத்தில் அனைவரும் குதூகலிக்கின்ற மாதமாகவும் அமைந்துள்ளது. ஆடிமாதமே ஈழத்தமிழ் மக்களுக்கு பெரும் துயரத்தையும் துன்பத்தையும் வரலாறாகப் பதிவு செய்து கொண்ட மாதமுமாகும்.

தமிழனைப் பொறுத்தவரையில் இயற்கையோடு ஒன்றித்த வாழ்வைக் கையாண்டு வந்ததையும், அதற்குரியவாறு தமது பண்பாடுகளையும் விழுமியங்களையும் சீராக அமைத்து, சீராக வாழ்ந்து வந்ததையும் தமிழர் வரலாறு எடுத்துக்கூறுகின்றது. இந்த அடிப்படையிலேதான் ஆடிமாதம் தனித்துவமான இடத்தைப் பிடித்துதது. அதனாலோ என்னவோ ஆடி மாதப் பிறப்பு ஒரு பெருநாளாக அமைந்துள்ளது போலும். நிலமங்கை மகிழ்வுடன் மகிழும் மாதமாகத் தமிழர்கள் ஆடி மாதத்தை வரவேற்கின்ற பண்பாட்டைக் கொண்டவர்களாகக் உள்ளனர்.

ஆடிப்பிறப்பு என்றதும் எமது கண் முன்னால் நினைவுக்கு வருவது ஆடிக்கூழ் என்கின்ற அந்த அற்புதமான உணவுதான். ஒவ்வொருவரினது நாவில் பட்டதும் நாவெல்லாம் இனிய சுவையைத் தந்துவிடும். ஆடிப்பிறப்பு நன்னாளில் இல்லங்கள் தொடக்கம் அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்கள் வரை ஆடிக் கூழ் காய்ச்சி எல்லோரும் குடித்து மகிழ்கின்ற காட்சியானது ஆடி மாதத்துக்குப் பெருமை சேர்க்கின்றது. ஆடிப்பிறப்பை பண்டிகையாகக் கொண்டாடுகின்ற மரபானது ஈழத் தமிழருக்கேயுண்டு.

ஆடிக்கூழ் சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் பருகப்படுகின்றது. ஆடிப்பிறப்பன்று தயாரிக்கப்படுகின்ற கூழுக்குப் பனையிலிருந்து பதமாக இறக்கப்படுகின்ற பதநீரைக் கொதிக்க வைத்து அதற்குள் அரிசிமாவு, வறுத்துக் குற்றியெடுத்த கோது நீக்கப்பட்ட பாசிப்பயறு, சிறிதாக வெட்டியெடுக்கப்பட்ட தேங்காய்த் துண்டுகள் யாவற்றையும் ஒன்று சேர்த்து தயாரிக்கப்படுகின்ற கூழ் அயல் பகுதியெங்கும் இனிய மணத்தைப் பரப்பும்.


மணமும், சுவையும் கருதியே அப்படிப்பட்ட கூழுக்கு தனியானதொரு மகிமை வந்ததுடன் ஆடிப்பிறப்பன்று விசேடமாகத் தயாரிக்கப்பட்டு உணவருந்துகின்றதொரு நாளாகவும் அமைந்தது.

யாழ்ப்பாணம் நவாலியூர் சோமசுந்தரப் புலவர், "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம் கொழுக் கட்டை தின்னலாம் தோழர்களே" என்ற வரிகளோடு கூழின் பெருமையை இந்தக் கவிதை ஊடாக விளக்கினார்.

சோமசுந்தரப் புலவர் இயற்றிய பொக்கிசமான கவி வரிகள் ஆடிப்பிறப்பன்று நமது மக்கள் நாவிலும் இனிமையாக உச்சரிப்பின் மூலம் தவழ்ந்து வந்துவிடுகிறது.

தைமாதத்தின் முதல் நாள் தைப்பொங்கல் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. தை முதலாம் நாள் எவ்வாறு தைப்பொங்கல் தினம் எனப் பெருமைப்படுத்தி சூரியனுக்குப் பொங்கிப் படைத்துக் கொண்டாடுவமோ ஆடிமாதம் முதலாம் நாளும் கூழும், கொழுக்கட்டையும் தயாரித்து பிதிர்களுக்குப் படைத்தும், அவர்களையும் நினைத்தும் மகிழுகின்ற தினமாகவும் முன்னோர்களால் கொண்டாடப்பட்டு வந்தது. சைவ சமய மக்களுக்கு ஆடிமாதமானது வழிபாடுகளுக்கும், விரதங்கள் கடைப் [illegible] வே ஆடி [illegible] சிறப்புக்களையும் மகிழ்ச்சியையும் கொண்டதொரு மாதமாக இருப்பதனால்தான் ஆடி மாதத்தின் முதல் நாளானது ஒரு பண்டிகை நாளாக முக்கியத்துவம் பெற்றுள் ளது.





> "இப்போதைய தலைமுறையினரும் ஆடிப் பிறப்பின் சிறப்பையும், பெருமையையும் உணர்ந்து நடக்க வேண்டும். ஆடிப்பிறப்பின் மகத்துவத்தை தமிழர்கள் இன்றைய வாழ்வினில் இழந்து வருவதையும் கண் முன்னால் காண்கின்றோம். பாரம்பரியங்களையும் பண்பாட்டுக் கடமைகளையும் நாம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்."

ஆண்டின் முதல் ஆறு மாதங்களான தைதொடங்கி ஆனிமாதம்வரை ஆறுமாதங்கள் தேவர்களுக்குரித்தானது. ஆடி முதல் மாதத்திலிருந்து மார்கழி மாதத்தின் இறுதி நாள்வரை பிதிர்களுக்கு உரித்தானதென்றும், காலம் காலமாக தமிழ்மக்களால் கூறப்பட்டு வருவதுடன் ஒரு ஐதீகம் எனவும் நம்பப்படுகின்றது.

ஆடிப்பிறப்பு, ஆடிச் செவ்வாய், ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, ஆடிக்கிருத்திகை என சைவ மக்களுக்கு முக்கியதினங்கள் ஆடி மாதத்தில் உள்ளடங்கியிருக்கின்றன. "ஆடிச் செவ்வாய் தேடிப் பிடி" என்பார்கள் ஆடிமாதத்தில் வருகின்ற செவ்வாய்க் கிழமைகளில் விரதம் கடைப்பிடித்தால் பல நன்மைகள் உண்டு எனக் கூறப்படுகின்றது.

"ஆடி விதை தேடி விதை" என்பதற்கிணங்க எமக்குத் தேவையான விளை பொருள்கள் இந்த மாதத்திலே விதைக்கப்படுகின்றன என்பார்கள். விவசாயிகள் வானத்தை எதிர்பார்த்து மழையை நம்பி மண்ணை உழுவதும் ஆடி மாதத்திலேயாகும். பருவத்தே பயிர் செய்கின்ற காலம் ஆடிமாதமாகையால் முருங்கை, கிழுவை போன்ற மரங்களை நடுகின்ற பழக்கத்தை நம் முன்னோர்கள் கடைப்பிடித்தனர். தொடர்ந்து வருகின்ற மாதங்கள் வனப்பையும், வளத்தைக் கொண்டு வரும் வசந்தகாலங்களாகும். நெல்லுடன் தானியப் பயிர்களான உளுந்து, பயறு, கடலை, கௌப்பி என்பனவற்றின் பயிர்ச் செய்கைக்கும் ஏற்றவாறு இந்தக் காலம் அமைந்தது.

ஆடிமாதமானது வட பகுதித் தமிழர்களின் தமது வாழ்வியலில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஆடிமாதத் தில் இறுதிப்பகுதியில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா, தீர்த்த உற்சவம், ஆடி அமாவாசை போன்ற நிகழ்வுகளுடன் உலகத்தில் புலம் பெயர்ந்து வாழுகின்ற ஈழத்தமிழ் சைவ மக்கள் கலந்துகொள்ளுகின்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெரும்திருவிழாவும் ஆரம்பிக்கின்றது. ஆடிப்பிறப்பின் மகத்துவத்தை தமிழர்கள் இன்றைய வாழ்வினில் இழந்து வருவதையும் கண் முன்னால் காண்கின்றோம். இப்போதைய தலைமுறையினரும் ஆடிப்பிறப்பின் சிறப்பையும், பெருமையையும் உணர்ந்து நடக்கவேண்டும்.

பாரம்பரியங்களையும், பண்பாட்டுக் கடமைகளையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் வழி தவறாமல் நடப்பதற்கும், ஆன்மிக வாழ்வியலுக்கும் உட்பட்ட மாதமாகவும் நம்பிக்கை கொள்ளுகின்ற மாதமாகவும் ஈழத் தமிழர்கள் ஆடி மாதத்தைக் காணுகின்றனர்.

ஆடிப்பிறப்பான இன்று நாம் அனைவரும் உண்டு மகிழ்ந்து குதூகலித்திடல்வேண்டும். தமிழர் பண்பாட்டில் நம்பிக்கைதானே அடி நாதமாக வுள்ளது. தமிழருக்குப் புதிய உத்வேகத்தைக் கொண்டுவரவும், வாழ்வுசிறக்கவும் ஆடிமாதப் பிறப்பில் கூழ்குடித்து கொழுக்கட்டை உண்டு மகிழ்ந்து நல்ல சிந்தனைகளுடன் ஆடி முதல் நாளை வரவேற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடனுடைய கவலை


சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய பட்டத்து ராணிக்கு உடல் நலம் குன்றியது. மருத்துவர்கள் வந்து பார்த்து மருந்துகள் கொடுத்துச் சிகிச்சை செய்தனர்.
அரசனுக்கு சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை உண்டு. அரண்மனைச் சோதிடனை வரவழைத்து ராணியின் சாதகத்தைப் பார்க்கச் சொன்னான்.



சோதிடன் வந்து ராணியின் சாதகத்தைக் கணித்துப் பார்த்தான்.
"முப்பது நாள்களுக்குள் ராணி இறந்துவிடக் கூடும்" என்று கூறினான்.
அரசனுக்கு கவலை அதிகரித்தது.

ராணி முப்பதாவது நாளில் இறந்து விட்டாள். அரசன் அளவற்ற துன்பம் அடைந்தான். "சோதிடன் கூறியதாலேயே ராணி இறந்து விட்டாள்" என்று அரசன் கோபமுற்று, சோதிடனைச்சிரச்சேதம்செய்யுமாறுஉத்தரவிட்டான். சோதிடன் அரசனுடைய உத்தரவைக் கேட்டு கலக்கமோ கவலையோ அடையாமல் உற்சாகமாகவே இருந்தான்.

அதை அறிந்த அரசன், சோதிடனிடம் "நீ உயிரை இழக்கப் போகிறாயே; உனக்கு அதனால் கவலை உண்டாகவில்லையா?" என்று கேட்டான்.
அதற்குச் சோதிடன் "நீங்களே உயிர் துறக்கும் பொழுது என் உயிர் என்ன பெரிதா? எனக்குக் கவலை எல்லாம் உங்களைப் பற்றித்தான். என்னைப் பற்றிக் கவலை இல்லை" என்று கூறினான்.
அரசன் திடுக்கிட்டு "என்ன என் உயிர் போகப் போகிறதா? எப்பொழுது?" என்று பதற்றமாகக் கேட்டான்.
"அரசே! நான் உயிர் துறந்த இரண்டாவது நாளில் உங்களுடைய உயிரும் போய் விடும். அதை முன்பே நான் கணித்து வைத்திருக்கிறேன். அதற்காகவே நான் கவலைப்படுகிறேன்" என்று கூறினான் சோதிடன்.





# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

# அன்னை தெரேசா



*(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

இறைவன் எல்லாவற்றையும் விட்டு விட்டு வர எம்மை அழைக்கும் போது பிணைப்புகளையெல்லாம் உடைத்துக் கொண்டு வெளியே வரும்போது உள்ளத்தின் ஆழத்திலே இனம் புரியாத மகிழ்ச்சி இருக்கும். புதையலைக் கண்டவனும் விலையேற்ற முகத்தைக் கண்டவனும் மகிழ்ச்சி மிகுதியால் போய்த் தமக்குள்ள எல்லாவற்றையும் விற்கின்றனர். இத்தகைய ஒரு மகிழ்ச்சிதான் அழைத்தலின் உள்ளே இருக்கும். இந்த மகிழ்ச்சிதான் உண்மையான அழைத்தலின் அடையாளம்.

ஒரு நாள் ஓர் இருக்கையில் நாங்கள் அமர்ந்திருந்தோம். அப்போது அன்னை தெரேசா, "துறவியாக வேண்டுமென்று என் வீட்டை விட்டு வெளியேற முடிவு செய்தபோது எனக்கு வயது 18. என் பணி ஏழைகளுக்குத்தான் என்பதை அப்போது உணர்ந்துகொண்டேன். அப்போதிருந்தே என் முடிவைப் பற்றி எள்ளளவும் நான் சந்தேகப்படவில்லை. தன் விரலை நீட்டி வான் நோக்கி உயர்த்திக் காட்டி, அவன் செய்த தேர்வு" என்றார்.


இப்போதும் அன்னையின் மனதில் துளிகூட சந்தேகமில்லை. கோங்ஹா இதைப் பற்றிச் சொன்ன போது "ஆன்மாவின் தாய்" தன் அறைக்குள் சென்று இருபத்து நான்கு மணி நேரம் உள்ளே இருந்தாள். அறையை விட்டு வெளியே வந்ததும் தாயும் மகளும் இறைவன் தேர்ந்தெடுத்த பாதை எது என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். தன் மகளை நோக்கி "குழந்தாய் உன்கையைஅவருடைய கைப்பிடிக்குள் திணித்துவிடு. அவன் போகும் பாதையில் முழுவதும் நடந்துபோ" என்று அறிவுரை கூறினாள்.

இறைவனின் விருப்பம்இதுதான் என்று தெளிவானதும் ஆஞேஸ் வங்காளத்திலுள்ள லொரேட்டோவுக்கு விண்ணப்பம் செய்தாள். அயர்லாந்திலுள்ள ராத்பர்மான் என்ற இடத்தில் இருக்கும் ஆதீனத்துக்கும் விண்ணப்பம் செய்தாள். வங்காளத்துக்கு வரலாம் என்றும் முதலில் அங்கே போய் ஆங்கிலம் படிக்க வேண்டுமென்றும் ஆஞேஸ்க்குத் தெரிவிக்கப்பட்டது. 1928ஆம் ஆண்டு செம்ரெம்பர் 26ஆம் திகதி தாயும் சகோதரியும் உடன்வர ஆஞேஸ் ஸ்கோப்ஜீயை விட்டு சாக்ரெப் போக ரயில் ஏறினாள். தங்களை விட்டுப் பிரியும் ஆஞேஸை வழியனுப்ப உறவினர்கள், நண்பர்கள் மாதா சபையின் உறுப்பினர்கள் எனப் பலர் ரயில் நிலையத்தில் திரண்டிருந்தனர். நிலையத்தில் நின்றுகொண்டிருந்த ரயிலின் சக்கரங்கள் சுழலத் தொடங்கவே ஆஞேஸின் இதயம் வலித்தது, படபடத்தது. கண்கள் கலங்கின. கீழே விழுந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே ஆஞேஸ் மறைந்து விட்டாள். தாயுடனும் அக்காவுடனும் சாக்ரப்பில் தங்கிய சில நாள்களும் சில நொடிகளாகக் கரைந்துவிட்டன. சாக்ரப் ரயில் நிலையத்தை விட்டு ரயில் புறப்பட்டபோது ஆஞேஸ் தன் தாய்க்கும் அக்காவுக்கும் கையை ஆட்டிக் கொடுத்த பிரியாவிடை ஆஞேஸின் இதயத்தைப் பலமாக வலிக்கச் செய்து கண்ணீர் பீறிட்டு வரச் செய்தது. தன் தாயை இறுதி முறையாகப் பார்த்ததும் இந்த ரயில் நிலையத்தில்தான். இதற்குப் பின் ஆஞேஸ் தன் தாயைப் பார்க்கவே இல்லை. இதுவே இறுதிப் பார்வை. பிள்ளைக்குரிய பாசத்துக்கு முத்தாய்ப்பு வைத்த பார்வை.

# வரலாற்றில் இன்றைய தினம்

622 - இஸ்லாமிய நாட்காட்டி ஆரம்பம்
1661 - முதலாவது வங்கித் தாள் சுவிஸ் வங்கியினால் ஐரோப்பாவில் முதன் முதலாக வழங்கப்பட்டது.
1790 - குடியிருப்பாளர் சட்டம் கையொப்பம் இடப்பட்டதையடுத்து, அமெரிக்காவின் தலை நகராக கொலம்பியா மாகாணம் ஸ்தாபிக்கப்பட்டது.
1809 - இன்றைய பொலிவியாவாகிய லா பாஷ் ஸ்பானிய முடியரசிலிருந்து சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது.
1915 - முதலாம் உலகப் போரின் போது பிரித்தானியாவை உயர்நிலைப்படுத்தியமைக் காக அமெரிக்காவில் பிறந்த எழுத் தாளரான ஹென்றி ஜேம்ஸ் பிரித்தானியப் பிரஜையானார்.
1945 - இரண்டாம் உலகப் போர்: USS இன்டியனோபோலிஸ் பாரந்தாங்கிக் கப்பல் 'சின்னப் பையன்' எனும் குறீட்டுப் பெயர் கொண்ட அணுகுண்டு பாகங்களுடன் சான் பிரான்சிஸ்கோவிலிருந்து ரினியன் தீவுகளை நோக்கிப் புறப்பட்டது.
1965 - பிரான்ஸையும், இத்தாலியையயும் இணைக்கும் மொன்ற் பிளாங்க் சுரங்கப்பாதை திறந்து வைக்கப்பட்டது.
1969 - சந்திரனில் முதலில் விண்வெளி வீரரை இறக்கிய அப்பலோ 11 கெனடி விண்வெளமையத்திலிருந்து புறப்பட்டது.
1979 - ஈராக்கிய ஜனாதிபதி அஹமட் ஹசன் அல் பாக் பதவி விலகியதை அடுத்து சதாம் ஹுசைன் பதவியேற்றார்.
1981 - மலேசியாவின் நான்காவது பிரதமரானார் மெஹதிர் மொஹமட்.
1986 - யாழ்.குடாநாட்டில் பூரண கடையடைப்பு.
- மாகாண சபைத் திட்டத்துக்கு எதிரான எதிர்ப்பு இயக்கத்தை மகாசங்கம் நடத்தும் என அறிவிப்பு.
1991 - உக்ரைன் தனது முதலாவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது.
1994 - ஷூ மேக்கர் லெவி 9 வால்நட்சத்திரம் ஜூப்பருடன் மோதியது. அதனது தாக்கம் ஜூலை 22 வரை தொடர்ந்தது.
1995 - வடமராட்சிப் பகுதி மீது படையினர் அகோர ஷெல் வீச்சு; இருவர் சாவு, நால்வருக்குக் காயம்.
2005 - கருணா அணியைச் சேர்ந்தவர் சிலாபம் நகரில் சுட்டுக்கொலை.
- அரசை எவரும் அசைக்கமுடியாது என அடித்துக் கூறுகிறார் ஜனாதிபதி.
- ஆனைக்கோட்டை தாரகா விதவைகள் மையத் தலைவி திருமதி சைலா இதயராஜா 2005 ஆம் ஆண்டுக் கான நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டார்.
2007 - 6.8 மற்றும் 6.6 மக்னிரியூட் அளவிலான நில நடுக்கம் ஜப்பான் நிகொட்டா கரையில் ஏற்படுத்திய தாக்கத்தில், 8 பேர் உயிரிழக்க, 800 பேர் வரை காய மடைந்ததுடன், அணு மின் சக்தி நிலையம் ஒன்றும் சேதமடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

# மாணவமும் கற்பனையும்

இன்றைய விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தமைக்குக் கற்பனை வளமும் ஊன்றுகோலாகவுள்ளது. சேர். ஐசாக் நியூட்டனின் புவியீர்ப்பும், கலிலியோவின் பூமி உருண்டை என்ற வாதமும் கற்பனையுடனான சிந்தனையின் அடித்தளமாகும். ஆன்மிகத்தில் கற்பனை கடந்த ஜோதி எனப் போற்றுகின்றோம். ஒரு கதவு மூடும்போது இன்னொரு கதவைத் திறந்து வைக்கும். தன்னம்பிக்கையை வளர்த்து, எங்கள் ஆக்கத்தை மனித குலம் எழுச்சிபெற வளர்த்துக் கொள்ளமுடியும். நில், கவனி, நட திட்டம் தீட்டியே எதையும் நடைமுறைப் படுத்தமுடியும். எம்முன் இல்லாததை தீர்க்கதரிசனத்துடன் சிந்திப்பதே கற்பனை வளம் ஆகும். எம் இளம் மாணவப் பருவத்தினர் கவனத்தை ஒருமுகப்படுத்தி, அறிவைப் பெருக்கி, அறிஞர்களுடன் இணைந்து செயற்படவேண்டும்.

பாடவிதான நூல்களை மட்டும் படித்து பரீட்சைகளில் சித்தி பெற்றால் மட்டும் போதுமா? உலகின் பரந்துபட்ட விடயதான அறிவும்வேண்டும். எனவே உயர்தரத்துக்குப் பொது அறிவு தேவையாகும். கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் மாணவரிடத்தில் பரந்த அறிவையே எதிர்பார்க்கின்றார்கள். தினமும் புதிதாய் செய்வது, நாள் முழுக்க ஆர்வத்துடன், சுறுசுறுப்பாய் இருப்பது, சிந்திப்பதற்கு போதிய அவகாசம் என்பதனால் மாணவம் அறிவுக் கூர்மைபெறும். இந்த நிலை பெருகிடின் எதிர்காலவேலை வாய்ப்பு அரசிடம் மட்டும் இன்றித் தனிப்பட்ட நிறுவனங்களிலும் கிடைக்கும். ஒரேயொரு நுட்ப அறிவைக்கொண்டு சந்தையில் ஊடுருவல் பெற்றவர் பலர். திறமையால் உற்பத்திச் செலவைக் குறைத்தவர்கள் பலர். எனவே மாணவப் பருவத்தில் திறமையான கற்பனை ஆற்றலை அடிக்கடி நல்ல முறையில் பயன்படுத்துவது முக்கியமாகும். இதனால் வாழ்வின் மீதான ஆர்வத்தை உண்டு பண்ணி மகிழ்ச்சி அடையலாம்.

பொது நூலகங்கள், கருத்தரங்குகள் போன்ற அறிவுத்தளத்தை உருவாக்கின் சிந்தனை வளரும். ஏன் இப்படி? என்பதைவிட ஏன் அப்படி இருக்கவில்லை? எனக் கேளுங்கள். இதுவே அறிவின் புதிய பரிமாணம். கற்பனை பல கடுமையான சூழ்நிலைகளை எளிதாக்கும். வாழ்வின் சவால்களை முறியடிக்கும்.

மாணவர்களின் கற்பனை விரிந்து செல்வதற்கு ஏற்ப அவர்களின் கல்வியும் உயர்ந்த நிலைக்குச் சென்று விடும். ஆக்கபூர்வமான கற்பனை என்றுமே சோடை போவதில்லை. கற்பனை உருவாகும் போதுதான் அதிலிருந்து ஆக்கபூர்வமான சிந்தனைகள் பிறக்கும் என்பதே உண்மை.

# அசட்டுத்தனம் எதற்கு இளைஞர்களே...! விழிப்படைய வேண்டும்....!

போராட்டம், அழிவு என்ற நிரந்தரங்களினுள்ளும் விசாரணை என்ற மாயங்களினுள்ளும் தமிழ் மக்கள் அகப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்கள் நீள்கிறது. நாட்டிலிருந்து ஏறுமுகமாக மேற்குலகை நோக்கிய பயணங்களும், அங்கிருந்து இறங்குமுகமாக அரசை நோக்கியதான மேற்குலகத்தின் வலம் வருதலும் களைகட்டியிருக்கின்றது.

உணவுப் பரிமாற்றம், கை நனைத்தல், கை அலம்பல் என்ற தந்திரங்களின் ஊடான பாசம் நல்லிணக்கமாய் அரசோடு உரசி அரவணைக்கின்றன. ஆனால், தமிழர் தாயகம் நகர்ந்திட ஆலய தரிசனங்களுள் தமிழ்ச் சனங்களின் வலிகள் அமிழ்த்தப்பட்டு கை கூப்பி வணங்குதல்களோடு முடிவுறுகிறது. இதனை பார்ப்பதற்கும் சொல்வதைக் கேட்பதற்கும் என ஒரு கூட்டம் அலை மோதுகிறது.

யாரும் பிரச்சினைகளை அழுத்தமாக இடித்துரைத்துப் பேசுவதற்கு முன்வருவதில்லை. மாறாக வார்த்தைகளில் மேலோட்டமாக மெழுக்கிட்டு அமர்ந்து விடுகின்றனர். பின்னர் அவர்கள் சொன்னவற்றை நீட்டி முழக்கி எல்லாம் சாத்தியப்படும் என்று பத்தியக்கதை கூறுகின்றனர். இதனிடை காலங்கள் வேக முறுவதை எவரும் உணர்வதாகத் தெரியவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்திலே கட்டுக்கோப்பாக இருந்த தமிழ்ச் சமூகத்தின் மீதான அழிவு நிலைகள் வேற்றூடகமாக நிலைபெறச் செய்யப்படுகின்றன. விழுமியம் சார்ந்த செயல் நிலைகளினுள் திட்டமிட்ட உடைவுகளாகக் காய்கள் நகர்த்தப்படுகின்றன. போர் என்பது போதையாக நிறமாற்றம் செய்யப்படுகின்றது. இந்த நிறமாற்றங்கள் சமூக ரீதியில் எங்கும் தொற்றுநோயாகப் பரப்பிவிடப்பட்டிருக்கின்றன. வன்புணர்வுகளும் ஒருவர் மீதான ஆயுத நீட்டுதல்களாகச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன. பண்பாட்டின் கூறான மத விழுமியங்களுள் நெறிமுறை தாண்டிய வன்முறையாகப் பௌத்த மதச் சார்புகளின் சிலை நிறுவல்கள் தமிழர் தாயகத்தில் அலங்காரம் செய்யப்படுகின்றன.

குறிப்பாகப் போராட்டக் காலத்தில் இருந்த கல்வியின் உயிர்நிலை தற்போது உறைநிலைக்குள் உட்புகுத்தப்படுகின்றது. இலட்சியம் என்ற உரிமங்களோடும் அதன் வெகுமதியான பரிணாமங்களோடும் துடிதுடித்திருந்தவர்கள், இன்று துடிப்பிழந்திருக்கின்றனர். புத்தகமும் கையுமாக, பரீட்சைகளும் நற்பெறுபேறுகளுமாக, தட்டிக்கொடுத்தல்களும் பாராட்டுதல்களுமாக, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களின் உறைவிடமாக ஒளிர்விடமாக இருந்தவர்கள் தன்னிலை இழந்திருக்கின்றனர்.

இளைஞர்களின் எதிர்காலம் என்பது இருள் நிலைகளினுள் மருள்கையுறச் செய்யப்பட்டுள்ளன. எல்லை கடந்து முகாமிடுகின்ற மதுசாரம், புகைத்தல் என்கின்ற அரசின் திட்டமிட்ட வியாபார உரிமங்களினுள்ளும் திட்டமிடப்படாத வகையில் கட்டம் கட்டமாக ஊடுகடத்தப்படுகின்ற போதைப் பொருள் என்ற பரிணாமங்களினுள்ளும் சுவீகரிக்கப்படுகின்றனர்.

இங்கு நீதி என்பது இன்னமும் சாதுவாகத்தான் இருக்கிறது. இருளில் இருந்து அது மீளவில்லை. சந்தேகம் கொள்ளப்படுபவர்கள் முழுமையற்ற விளக்கமறியலோடு சமூகத்திடை தூக்கியெறிப்படுகின்றனர். தண்டிக்கப்படுவதில்லை. உரியவர்கள் ஆதரவு கொண்டு மறைக்கப்படுகின்றனர். விசாரணைகள் இழுத்தடிக்கப்படுகின்றன அல்லது அமிழ்த்தப்படுகின்றன.

ஆக, தமிழினத்தின் நிலைத்திருப்பினிடை பல விடயங்கள் நலிவடையத் தொடங்கிவிட்டன. நம்பிக்கைகள் வெவ்வேறு திசைகளில் முட்டிமோதி முடிவுறுத்தப்படுகின்றன. இந்தநிலையிலே தமிழினம் மீண்டும் உயர்நிலை பெற வேண்டும் எனில், இளைஞர்கள் சாந்த நிலையைப் பெறவேண்டும்.. நற் சிந்தனைகளால் தன்னிலை பெறவேண்டும்...!அழிவு தரும் இடைநிலைகளின் சார்பிலிருந்து மீண்டு கொண்டு ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும்...! அசட்டுத்தனம் எதற்கு இளைஞர்களே...! விழிப்படையுங்கள்... மீண்டும் மீண்டும் விடுதலை உணர்வை உளமார அழைத்திருக்க வேண்டும்.. உணர்ந்து கொள்ளுங்கள்..! எழுக மகனே..! எழுக மகளே..!

காட்டுப்பகுதியை ஒட்டியதாக விறகுவெட்டியொருவன் வாழ்ந்தான். மரங்களை வெட்டிவருவது, கோடரியால் பிளப்பது, சிறு துண்டுகளாக்குவது பின்னர் அதனைப் பக்கத்துக்குக் கிராமங்களுக்கு கொண்டு சென்று விற்பது அதில் கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு குடும்பம் நடத்துவது என்பனவே அவனது அன்றாட வேலை. அன்றும் அப்படிதான் ஒரு பெரிய அடி மரத்துண்டை கோடரியால் பிளக்க ஆரம்பித்தான்.

உடலில் களைப்பு ஏற்பட பாதியளவு பிளந்திருந்த அடிமரத்தின் பிளவுக்கு இடையில் ஆப்பு போல் ஒரு மரச்சக்கையை தயார் செய்து வைத்துவிட்டு ஓய்வெடுக்கச் சென்றான். அங்கு நின்றிருந்த இன்னோர் மரத்தின் கிளையில் இருந்த குரங்கு ஒன்று மரம் வெட்டியின் இந்தச் செயலை அவதானித்துக்கொண்டிருந்தது. மரம் வெட்டி அப்பால் நகர்ந்த சமயம், மரத்திலிருந்து இறங்கி வந்தது. மரத்துண்டின் பிளவுபட்ட பகுதியில் வால் முழுவதுமா... விட்ட நிலையில் அதன் மேலாக அமர்ந்தும் கொண்டது.

அமர்ந்திருப்பது குரங்கு அல்லவா..! அதற்கே உரிய குரங்கு வேலையைச் செய்ய ஆரம்பித்தது. ஆப்பாக சொருகி இருந்த மர்த்துண்டை அங்கும் இங்கும் ஆட்டி ஆட்டி எடுக்க ஆரம்பித்தது. திடீரென அந்த ஆப்புதுண்டு வெளியே வந்து விட்டது. பிளவுபட்ட பகுதியின் இடைவெளியும் மூடி விட்டது. பிளவுக்குள் தொங்கி இருந்த வால் நசுங்கியது. குரங்கு பரிதாபகரமாக உயிரிழந்தது.




உண்மையில் இங்கு குரங்கின் இயல்பு நிலை தாண்டி அன்று அது செய்து விட்ட அசட்டுச் செயலின், விழிப்பற்ற தன்மையின் விளைவே அதற்கான அழிவாக மாறிவிட்டது. ஐந்தறிவு தாண்டிய ஆறறிவு படைத்தவர்களாக நாமும் செயல்முனைவுகளை சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## வைத்தியசாலையில் கமல் அனுமதி தள்ளிப்போகும் சபாஷ் நாயுடு..!

நடிகர் கமல்ஹாசன், தனது ஆழ்வார்ப் பேட்டை அலுவலகத்தில் உள்ள மாடிப் படிக்கட்டில் இருந்து கீழே இறங்கி வரும்போது கால் தவறி விழுந்தார். அவரது முதுகுத் தண்டுவடத்திலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. எனவே உடனடியாக ஆயிரம் விளக்குப் பகுதியில் இருக்கும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார்.

கமல்ஹாசனை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் விரைவில் குணமாகிவிடுவார் என்றும் அவருக்கு சில வாரங்கள் ஓய்வு தேவை எனவும் தெரிவித்தனர். விபத்தை அடுத்து லண்டனில் நடைபெறுகிற இந்தியத் திரைப்பட விழாவில் கமல் கலந்து கொள்ளமாட்டார் எனத் தெரியவந்துள்ளது. அங்கு அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட இருந்தது. சபாஷ் நாயுடு படத்தின் 42 நிமிடக் காட்சிகள் தயாராகி இருக்கின்றன. விரைவில் ஹைதராபாத்தில் அடுத்தகட்ட படப்பிடிப்பு தொடங்கப்பட இருந்த நிலையில் இந்த விபத்து நடந்தது.




## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 8 |
| | 3 | 9 | | 8 | 1 | | | |
| | | 5 | | 4 | | | 2 | |
| | 2 | | | | 6 | | 7 | |
| | 6 | 4 | | | | | | |
| | | | 4 | 3 | | | | |
| 4 | 7 | | | | 2 | | | |
| | | | 6 | | | 1 | | |
| | | | 5 | | | | 9 | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 2 | 3 | 8 | 4 | 5 | 9 |
| 4 | 2 | 9 | 5 | 1 | 6 | 3 | 7 | 8 |
| 8 | 5 | 3 | 7 | 9 | 4 | 6 | 1 | 2 |
| 1 | 7 | 4 | 8 | 2 | 3 | 9 | 6 | 5 |
| 2 | 8 | 6 | 9 | 7 | 5 | 1 | 4 | 3 |
| 9 | 3 | 5 | 6 | 4 | 1 | 2 | 8 | 7 |
| 3 | 6 | 2 | 1 | 5 | 7 | 8 | 9 | 4 |
| 7 | 4 | 1 | 3 | 8 | 9 | 5 | 2 | 6 |
| 5 | 9 | 8 | 4 | 6 | 2 | 7 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றைப் பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




**இசைமொழி** @isaimozhi
இறுக்கம் தளருங்கள், சில வேலைகள் தடைபடுவதாலோ, தாமதப்படுவதாலோ உலகம் முடிந்து விடப்போவதில்லை.




நம்ம ஐய்யாச்சாமி நடு ஆற்றில் படகில் போய்க் கொண்டிருக்கிறார். அப்போது தூரத்தில் ஒரு போர்டு உள்ளதைப் பார்த்து அதில் என்ன எழுதி இருக்கிறது என்று படிக்க முயல்கிறார். ஆனால் அவரால் படிக்க முடியவில்லை. எனவே அவர் படகிலிருந்து குதித்து நீந்தி சென்று படிக்கிறார். "இங்கு முதலை உள்ளது, யாரும் இங்கே நீந்த வேண்டாம்" என அதில் எழுதியிருந்தது.







**மேடம்:** பிடிவாத குணத்தால், மற்றவர் அதிருப்திக்கு ஆளாகலாம். நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். அதிக விலை மதிப்புள்ள பொருள்களைப் பாதுகாப்பதில் கவனம் தேவை.

**இடபம்:** பேச்சில், இனிமை நிறைந்திருக்கும். எதிரிகள் இடம் மாறிப்போகும் நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில், பணவரவு அதிகரிக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**மிதுனம்:** நண்பரிடம் பழகி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, அதிக அளவில் பணிபுரிவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். குடும்பத் தேவைகளை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** சிலர் தவறான ஆலோசனை கூறலாம், கவனம். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். எதிர்பார்த்த வருமானம் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். இஷ்ட தெய்வ வழிபாடு மனம் அமைதி பெற உதவும்.

**சிங்கம்:** மற்றவரை நம்பி, எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், நிலுவைப் பணியை நிறைவேற்றுவது நல்லது. கூடுதல் உழைப்பால் பணவரவு சீராகும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.



**கன்னி:** நேர்மை எண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி பணி எளிதாக நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**துலாம்:** முக்கிய பணி நிறைவேற தாமத[illegible] தொழில், வியாபாரத்தில், வருமா[illegible]ம். பிறர் பார்வையில் படும்படி அதிக பணம் செலவழிக்க வேண்டாம். உடல் நலனில் கவனம் தேவை.



**விருச்சிகம்:** புதிய முயற்சியில் வெற்றி உண்டாகும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**தனுசு:** சிலரது பேச்சு, உங்களை சங்கடப் படுத்தலாம். தொழில், வியாபார நடைமுறை சீராக, கூடுதலாகப் பணிபுரிவது அவசியம். சராசரி அளவில் வருமானம் இருக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்குத் துணை நிற்கும்.

**மகரம்:** நல்லவர்களின் ஆலோசனை கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். அதிக உழைப்பால், வருமானம் காண்பீர்கள். வாகனப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

**கும்பம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், பங்குதாரர்களின் ஆதரவால் வளர்ச்சி உண்டாகும். இலாபம் பெருகும். வெளியூர்ப் பயணத்தால், இனிய அனுபவம் கிடைக்கும்.

**மீனம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு, விவகாரங்களில் அனுகூலத் தீர்வு கிடைக்கும். விரும்பிய உணவை உண்டு மகிழ்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 80 | 120 | 80 | 40 | – | 30 |
| கத்தரி | 120 | 120 | 120 | 120 | 80 | 100 | – | 70 |
| கரட் | 200 | 200 | 240 | 180 | 200 | 200 | – | 140 |
| மரவள்ளி | 100 | 90 | 100 | 80 | 100 | 100 | – | 50 |
| பயிற்றை | 200 | 120 | 120 | 140 | 120 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 240 | 300 | 240 | 200 | 220 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 120 | 130 | 200 | – | 120 | 160 | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 120 | 100 | 120 | – | 100 |
| பூசணி | 150 | 140 | 160 | 180 | 140 | 140 | – | 130 |
| தக்காளி | 200 | 160 | 200 | 180 | 180 | 250 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 140 | 120 | 80 | – | 50 |
| கீரை | 25 | 30 | 30 | 20 | 20 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 600 | 600 | 700 | 500 | 600 | – | 600 |
| புடோல் | 80 | 80 | 100 | 100 | 80 | 60 | – | 60 |
| கோவா | 150 | 140 | 200 | 180 | 160 | 180 | – | 120 |
| வெண்டி | 100 | 80 | 160 | 120 | 100 | 80 | – | 60 |
| போஞ்சி | 200 | 160 | 160 | 160 | 160 | 180 | – | 140 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 180 | 160 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 30 | 30 | 30 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 100 | 150 | 140 | 140 | 120 | 80 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 250 | 240 | 300 | – | 240 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 250 | – | 200 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 500 | 350 | 400 | 600 | – | 300 |






மரப் பொருள்களால் ஆன ஆபரணங்கள் அறிமுகமாகியுள்ளன. பழைமையான அலங்காரங்களுடன் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 450 ரூபா தொடக்கம் 700 ரூபா வரைஆகும்.

## நாளை

ஆடி-02
ஞாயிற்றுக்கிழமை
- 17.07.2016
திதி: திரயோதசி
பி.இ.04.48 வரை
நட்சத்திரம்: கேட்டை
பி.ப.02.35
ராகுகாலம்:
04.30-06.00
வரை
சுபநேரம்:
09.00-10.30
வரை
பிரதோஷ விரதம்



## தோசை சுடுவது எப்படி?

தோசை சுடுவது என்பது ஒரு பெரிய விடயம்தான். ஏன் எனில் சிலர் தோசையையே இட்லி போல சுடுவார்கள். சிலருக்கு தோசையைச் சப்பாத்திபோலத் தான் செய்யத்தெரியும்.

ஆனால், சில முக்கியமான விடயங்களைச் செய்தால் தோசை, தோசைபோலவே வரும்.

அதாவது, தோசைக்கு மா மிகவும் தளர்வாக இல்லாமல் சிறிது கெட்டியாகவே இருக்க வேண்டும்.

தோசைக் கல் நன்கு அடுப்பில் வைத்து காய்ந்த பின்னர்தான் தோசையை வார்க்கவேண்டும். ஒவ்வொரு முறை தோசை சுடும் போதும், வெங்காயம் அல்லது எண்ணெயில் நனைத்த துணியைக் கொண்டு தோசைக்கல்லை முழுவதுமாகத் துடைப்பது நல்லது.

தோசை வராமல் போனால் உடனடியாகத் தோசைக் கல்லின் மீது உப்புத் தூளைக் கொட்டி முழுவதுமாகத் தடவிப் பின்னர் உப்பைத் தள்ளிவிட்டுத் தோசை வார்த்தால் அழகாக வரும்.



## புறுட் சலட்



அப்பிள்–1
மாம்பழம் – 1
அன்னாசி – 1/2
பப்பாளி – 1/2
ஸ்ரோபெரி – 10
வாழைப்பழம் – 2
அருவல் நொருவலாக
அரைத்த கச்சான்
அலுவா – 3
மில்க் மெயிட் – 1/4 ரின்

மேற் குறிப்பிட்ட பழங்கள் சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் இட்டு அனைத்தையும் கிளறவும். (மிகவும் கனிந்த பழங்களை பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். காரணம் கனிந்த பழங்களை துண்டுகளாக வெட்டமுடியாமல், உருக்குலையும். கிளறும் போதும் மெதுவாக கிளறவும்.) பின்னர் குளிரூட்டியில் அரை மணி நேரம் வைத்து விட்டு, பாத்திரங்களில் பரிமாறவும். இறுதியில் சில கரண்டி மில்க் மெயிட் இலேசாக ஊற்றி அதன் மேல் அருவல் நொருவலாக அரைத்து வைத்திருக்கும் கச்சான் அலுவாவை மேலே தூவி பரிமாறலாம்.




## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 150 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 550 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 1000 | 550 |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 500 | 300 | – |
| விளை | 650 | 500 | 400 | 800 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | – | 350 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 150 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 150 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 200 | 150 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 500 | 700 | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 500 | – | – |
| வாளை | 100 | 200 | 200 | – | 400 | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம்




## விளம்பர விதிகளை மீறுகிறதா கூகுள்?

கூகுள் நிறுவனம் தனது விளம்பர வர்த்தகத்தை அதிகரிக்க ஐரோப்பிய ஒன்றியத் தின் போட்டி விதிகளை மீறுகிறதா என்று அந்த நிறுவனத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் தனது விசாரணையை விரிவுப்படுத்தியுள்ளது.

கூகுளால் வழங்கப்படும் விளம்பரங்கள் போட்டியாளர்களை நட்டம் அடையச் செய்யும் வகையில் முக்கியத்துவப்படுத்தப்பட்டு கொடுக் கப்படுவதாக அது குற்றம்சாட்டியுள்ளது.

இணையவழித்தேடலுக்கான விளைவுகளில் கூகுள் நிறுவனத்தின் சொந்த இணைய சேவைகள் முதலில் வருவதாக கூறப்பட்ட தனது முந்தைய குற்றச்சாட்டுகளையும் வலுப்படுத் தியுள்ளது ஐரோப்பிய ஒன்றியம்.

தனது சந்தை ஆதிக்கத்தை மீறுவதான குற் றச்சாட்டில், கூகுள் நிறுவனத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் கடந்த 2010ஆம் ஆண் டிலிருந்து விசாரணை நடத்தி வருகிறது.

எதிர்வரும் வாரங்களில் இந்தப் புகார் குறித்து பதிலளிக்கப் போவதாக கூகுள் தெரிவித்தது. (த)

## சேவையை நிறுத்தும் வாட்ஸ் அப்

வாட்ஸ் அப் நிறுவனம் சில தொடுபேசிகளில் இந்த ஆண்டோடு தங்களின் சேவையை நிறுத்தப் போவதாக அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

வாட்ஸ் அப் செயலி இல்லாத தொடுபேசிகளே கிடையாது என்ற நிலை தற்போது வந்து விட்டது. அந்த அளவு வாட்ஸ் அப் தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது.

இந்த நிலையில் பழைய தொடுபேசிகளில் தங்களின் சேவை நிறுத்தப்படும் என்று கடந்த மார்ச் மாதத்தில் அறிவிப்பு வெளியிட்டது.

தற்போது இந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதியோடு சில பழைய தொடுபேசிகளில் வாட்ஸ் அப் செயற்படாது. அதற்கான சேவை முற்றிலும் நிறுத்தப்படும் என்று வாட்ஸ் அப் நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள் ளது.

இந்த அறிவிப்புப் படி, பழைய அன்ரொய்ட் கைபேசிகள், விண்டோஸ் கைபேசிகள், சிபியன், பிளக்பெரி ஆகியவற்றில் வாட்ஸ் அப் வேலை செய்யாது. (த)




# யாழ்ப்பாணம், வத்துபிட்டிவல, கொழும்பு வைத்தியசாலைகளுக்குச் சிங்கர் உதவி





நீடித்து உழைக்கின்ற நுகர்வோர் சாதனங் களின் வியாபாரத்தில் நாட்டில் முன்னிலை வகித்துவருகின்ற சிங்கர் சிறி லங்கா பீஎல்சி நிறுவனம் சி.கே.டி என்று அறியப்படுகின்ற சிறுநீரக வியாதியால் பாதிக்கப்பட்டுள்ள வர்களுக்கு உதவும் முகமாகரூபவ் தனது Thirst for Life என்ற ஆரோக்கியம் மற் றும் நல்வாழ்வு சார்ந்த நிலைபேற்றியல் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 7.5 மில்லியனுக் கும் மேற்பட்ட பெறுமதி கொண்ட மூன்று சி.ஆர். ஆர்.ரி (தொடர் சிறுநீரக மாற்று சிகிச்சை) இயந்திரங்களை நன்கொடையளித்துள்ளது.

சிறுநீரக வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளவர் களுக்காக இந்த வகையில் நிறுவனம் இது வரையில் மொத்தமாக ஆறு இயந்திரத் தொகுதிகளை நன்கொடையாக வழங்கி யுள்ளது. இந்த நன்கொடைகளை சிங்கர் சிறி லங்கா நிறுவனத்தின் குழும பிரதம நிறை வேற்று அதிகாரி யான திரு. அசோக பீரிஸ் ரூபவ் சிங்கர் சிறி லங்கா பீஎல்சி நிறுவனத்தின் விற்பனை மற்றும் வர்த்தகத் துறைப் பணிப்பாளரான மகேஷ் விஜேவர்த்தன சிங்கர் சிறி லங்கா எபீஎல்சி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் துறை பணிப்பாளரான குமார் சமரசிங்க ஆகியோர் தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் நாயகமான மருத்துவர் அனில் ஜெயசிங்கவிடம் கையளித்து வைத்தனர்.

செலவுமிக்க இந்த சிகிச்சை இயந்திரங்களின் தேவையை அவசரமாக எதிர்பார்த்திருந்த மூன்று தேசிய வைத்தியசாலைகளுக்கு இந்த நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. கொழும்பு தேசிய வைத்திய சாலையின் டயாலிசிஸ் சிகிச்சைப் பிரிவு ரூபவ் வத்துப் பிட்டிவல ஆதார வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை ஆகியவற்றிற்கே அவை வழங்கப்பட்டுள்ளன. சிங்கர் சிறி லங்கா நிறுவனத்தின் குழும பிரதம நிறை வேற்று அதிகாரியான அசோக பீரிஸ் நிகழ்வில் உரையாற்றுகையில்,

நாட்டில் சிறுநீரகம் தொடர்பான வியாதிகளால் பாதிக் கப்பட்டுள்ள நோயாளர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்ற நிலையில் அவர்களுக்கு உரிய சிகிச் சைகளை வழங்குவதற்கு தேசிய வைத்தியசாலை களுக்கு உதவும் வகையில் சி.ஆர்.ஆர்.டி இயந்திரங் கள் மேலும் மூன்றை நன்கொடையாக' வழங்கு வதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி கொள்வதுடன் உயிரைக் காப்பதற்கு ஏனையோரும் இதனைப் பின் பற்றி தமது உதவிகளை வழங்குவர் எனவும் எண்ணு கின்றோம் என்று குறிப்பிட்டார்.

இச்செயற்திட்டத்தின் பொறுப்பாளரும் சிங்கர் நிறு வனத்தின் சிரேஷ்ட வர்த்தகநாம முகாமையாளருமான தர்ன அப்புஹாமி குறிப்பிடுகையில், குடிதண்ணீர் தொடர்பான பிரச்சினைகளால் தோன்றுகின்ற வியாதி கள் சம்பந்தமாக பரந்த அடிப்படையிலான தீர்வு காணு கின்ற மற்றும் அடிப்படைக் காரணத்தைக் கண்டறியும் பொதுச் சேவைப் பரப்புரையின் மூலமாக சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்ற பிரச்சினை களுக்கு தீர்வளிக்கும் வகையில் சிங் கர் முன்னெடுத்து வருகின்ற Thirst for Life ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு நிலைபேற்றியல் செயற்திட்டமாக அமைந்துள்ளது-என்றார். (தி)

வணிகம்

## பொருளாதாரம் 5.5 வீதம் வளர்ச்சி

முதற் காலாண்டில் இலங் கையின் பொருளாதாரம் 5.5 வீதமாக வளர்ச்சியடைந்துள்ள தாக அரச தகவல் திணைக் களம் தெரிவித்தது.

இது உள்நாட்டு மற்றும் சர்வ தேச சவால்களுக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை வெளிப் படுத்துவதாகத் திணைக்கள அறிக்கையில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் இதே காலப்பகுதியில் 4.4 வீதமாக இருந்த பொருளாதாரம் 2016 இல் குறித்த வளர்ச்சியைக் கொண்டுள்ளது. நிதி அமைச் சினால் கடந்த மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட காலாண்டு நிதிக் கூற்றில் பொருளாதார வளர்ச்சி குறித்து பதிவிடப் பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டின் காலாண் டில் அதிகரித்த வருமானத் தொகை 19.5 வீதமாகக் காணப் படுவதாகவும், பணவீக்கமும் ஒற்றை இலக்கத்தில் தளம்பலின் றிக் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## ஈ.எம்.வி. பாதுகாப்புத் திறனைப் பெற்றுள்ள கொமர்ஷல் வங்கி ஏ.ரி.எம். வலையமைப்பு

இலங்கையில் உள்ள தனது ஏ.ரி.எம். வலையமைப்பை ஈ.எம்.வி. சிப் பாது காப்பு முறைகொண்டதாக தரமுயர்த்தி உள்ளதாக கொமர்ஷல் வங்கி அறி வித்துள்ளது. வங்கியின் ஏ.ரி.எம் வலையமைப்பு பல்வேறு விதமான கார்ட்டுகளை உள்வாங்கக் கூடியது.

இந்தப் பின்னணியில் மோசடிகளைத் தவிர்க்கும் வகையில் ஈ.எம்.வி. பாது காப்பு தரம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. கொமர்ஷல் வங்கியின் 630 இயந் திரங்களைக் கொண்ட வலையமைப் பில் தற்போதைய காந்தக்கோடு தர வுக்கு மேலதிகமாக Smart Card Inter grated Circuit (IC) எல்லா கொடுக்கல் வாங்கல் செயற்பாடுக ளின்போதும் இணைக்கப்பட்டுள்ளது. சிப் கார்ட்ஸ் என்றும் அழைக்கப்படும் இந்தமுறை குறிப்பாக கொடுக்கல் வாங்கல்களின் போது கார்ட்டின் பாது காப்பு மட்டத்தைக் கணிசமாக அதி கரிக்கின்றது. ஏ.ரி.எம். வலையமைப் பின் செயற்பாடுகள் ஒட்டுமொத்தமாக இந்தப் பாதுகாப்பு முறையின் கீழ் கொண்டுவரப்படுகின்ற போது மோசடி கள் அனைத்தும் சாத்தியமற்றதாகி விடும். எந்த விதமான மோசடிகளுக் கும் அங்கு இடம் இருக்காது. அதை யும் மீறி ஏ.ரிஎம் இயந்திரங்களில் மோசடி இடம்பெற்றால் அதற்கான பொறுப்பு கார்ட்டை விநியோகித்த வங்கியை சார்ந்ததாகிவிடும்.

இலங்கையில் தனி ஒரு நிறுவனம் கொண்டுள்ள மிகப்பெரிய பணப்பரி மாற்ற வலையமைப்பின் உரிமையா ளர்களான கொமர்ஷல் வங்கி தனது ஏரிஎம் வலையமைப்பைத் தொடர்ந்து மேம்படுத்த உறுதிபூண்டுள்ளது. வங்கி யின் கார்ட்டுகளை வைத்திருப்பவர் களுக்கு வசதி மற்றும் பாதுகாப்பு என் பனவற்றை வழங்குவதே இதன் நோக்க மாகும் என்று கூறினார் இந்த வங்கி யின் தகவல் தொழில்நுட்ப உதவிப் பொது முகாமையாளர் கிறிஷான் கமகே. இந்த அர்ப்பணத்தின் ஒரு அங்கமா கவே ஏ.ரி.எம். வலையமைப்பு ஈ.எம் .வி. பாதுகாப்பு முறைக்கு மாற் றப்பட்டுள்ளமை அமைந்துள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

கொமர்ல் வங்கியின் ஏ.ரி.எம் மற்றும் டெபிட் கார்ட்டுகளை வைத்திருப்பவர் கள் அவற்றைப் பயன்படுத்தி ஒரு தட வையில் 40 ஆயிரம் ரூபாவை மீளப் பெறலாம். இதை ஒரு நாளைக்கு ஒரு லட்சம் ரூபாவரை அதிகரித்துக் கொள் ளும் வாய்ப்பையும் வங்கி வாடிக்கை யாளர்களுக்கு வழங்கியுள்ளது. அதேபோல் விற்பனை புள்ளியும் ஐந்து லட்சம் ரூடாவாக வரையறுக் கப் பட்டுள்ளது. (தி)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

15/7/2016
www.cse.lk

| | | | |
|---|---|---|---|
| ASPI | ⇑ 20.79 | 6,422.69 | 6,401.90 |
| S&P SL20 | ⇑ 11.78 | 3,416.30 | 3,404.52 |
| வியாபாரப்புரள்வு | | 555,874,368 | 1,063,352,768 |
| உள்நாடு- கொள்வனவு | | 467,406,368 | 951,445,568 |
| விற்பனை | | 492,087,360 | 948,265,728 |
| வெளிநாடு- கொள்வனவு | | 88,468,008 | 111,907,168 |
| விற்பனை | | 63,787,032 | 115,087,024 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | | | | |
|---|---|---|---|---|
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 23.1 | 2,873,543 | 66,171,080 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X | 173.1 | 366,562 | 63,450,173 |
| சென்ட்ரல் பைனான்ஸ் | CFIN.N | 223 | 263,643 | 59,282,082 |
| பீப்பிள் லீசிங் & பைனான்ஸ் | PLC.N | 18.4 | 1,553,750 | 28,585,281 |
| ரெக்ஸ்டைல் பெர்சி | TJL.N | 36.9 | 764,616 | 28,214,185 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 82.00 | 325,115 | 26,659,718 |
| புளூ டைமண்ட் | BLUE.N | 2.6 | 7,045,606 | 19,139,671 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 140 | 109,975 | 15,618,185 |
| எல் பி பைனான்ஸ் | LFIN.N | 125 | 122,466 | 15,273,565 |
| செலான் வங்கி | SEYB.N | 100.2 | 142,201 | 14,222,407 |

அறிவித்தல்கள் -

பங்குலாபம்
ஜோன் கீல்ஸ் ஹோட்டேல்ஸ் (KHL) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.30

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 212 |
| விலை உழைப்பு | 13.3 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கச் சட்டை தொழிலதிபர் கொடூரமாக வெட்டிக்கொலை

இந்தியாவின் புனே மாவட்டத்தைச் சேர்ந்த தங்கச் சட்டை தொழில் அதிபர், நேற்று முன்தினம் இரவு படுகொலை செய்யப்பட்டார்.

தத்தா புகே (வயது - 48) என்ற தொழில் அதிபர், 2012ஆம் ஆண்டில் 3 கோடி மதிப்பில் (இலங்கை ரூபா) 3.5 கிலோ எடையுள்ள தங்கச்சட்டையை அணிந்துதோன்றியதன் மூலம் புகழ் பெற்றார். புனே மாவட்டத்தின் திறந்தவெளி மைதானத்தில் நேற்று முன்தினமிரவு 11.30 மணியளவில் பத்திற்கும் மேற்பட்ட நபர்களால் தத்தா புகே கொடூரமாகத் தாக்கப்பட்டு, அதே இடத்தில் உயிரிழந்தார். பிறந்த நாள் விழா ஒன்றில் பங்கேற்க வருமாறு புகே அழைக்கப்பட்டார். அவரும் அவரது 22 வயது மகனும் புறப்பட்டுச் சென்றனர். வழியில் சுமார் 12 பேர் கொண்ட கும்பல் தத்தா புகேயை காரில் இருந்து வெளியே இழுத்துச் சென்று அரிவாளால் வெட்டியும் கற்களால் தாக்கியும் மகன் கண் எதிரில் கொலை செய்தது. அந்தக் கும்பல் அங்கிருந்து ஓடிவிட்டது. புகேயின் மகனை கொலையாளிகள் தாக்க முற்படவில்லை. (வ-5)

## ஐ.நா. தீர்மானத்தை

மாநாடு கொழும்பில் நேற்று நடந்தது. அதனை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார் அமைச்சர் மங்கள சமரவீர. அவர் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைவாக நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. நாட்டினதும், மக்களினதும், இராணுவத்தினரிதும் நற்பெயருக்குக் கடந்தகால ஆட்சியில் ஏற்பட்டிருந்த களங்கத்தை நீக்கி நற்பெயரை ஏற்படுத்த முடிந்தது.

நாட்டில் வாழும் அனைத்து இனத்தவர்களும் இணைந்து நாட்டின் சுதந்திரத்தை வென்றெடுத்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் இன, மத, மொழி ரீதியாக பிரிந்தனர். இதுமாத்திரமல்லாமல் விருப்பு வாக்குத் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் சாதி ரீதியாகவும் பிளவுபட்டனர். இந்த பிளவுகள் நாட்டை ஈற்றில் போருக்குள் தள்ளியது. மூன்று தசாப்தங்கள் முடிவின்றித் தொடர்ந்த போர், குருதி வெள்ளத்தைப் பெருக்கெடுக்கச் செய்தது. நாட்டில் ஏற்பட்ட இரண்டு ஆயுதப் போராட்டங்களும் நாட்டு மக்களைத் தொடர்ந்து பிளவுபடச் செய்தன. இவற்றிலிருந்து நாட்டை மீட்க வேண்டியது இன்றியமையாதது.

நல்லாட்சி அரசு மூன்று முக்கிய விடயங்களை முன்னிலைப்படுத்திச் செயற்படுகின்றது. ஜனநாயகம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆகியவையே அவை. போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை அழைப்பதாக நான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபாலவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசின் நிலைப்பாட்டை மிகத் தெளிவாக அறிவித்தனர். அரசின் நிலைப்பாட்டில் ஆட்சியிலிருக்கும் வரையில் மாற்றம் இருக்காது - என்றார்.

நடைபெற்று முடிந்த ஜெனிவா கூட்டத் தொடரில் கருத்துரைத்த அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவித்து வரும் கருத்துக்கள் அரசின் இறுதி முடிவல்ல என்று குறிப்பிட்டிருந்தார்.

நாடுதிரும்பியதும் மங்கள சமரவீரவினால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில், வெளிநாட்டு நீதிபதிகள் விசாரணைப் பொறிமுறையில் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்த கருத்துத் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த மங்கள, அது ஜனாதிபதியின் தனிப்பட்ட கருத்து என்று தெரிவித்தார்.

மங்களவின் இந்தப் பதிலையடுத்து, மகிந்த ஆதரவு அணியினர் எதிர்ப்புக் காட்டத் தொடங்கினர். ஜனாதிபதியின் கருத்தை தனிப்பட்ட கருத்து என்று தெரிவித்த மங்களவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று அறிவித்தனர். இதையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிநாட்டு நீதிபதிகளை தான் பதவியில் இருக்கும் வரையில் அனுமதிக்கப் போவதில்லை என்று மீண்டும் வலியுறுத்தினார்.

எனினும் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தில், விசாரணைப் பொறிமுறையில் பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், பன்னாட்டு விசாரணையாளர்கள், பன்னாட்டுச் சட்டத்தரணிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படி இருக்கும் போது வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க மாட்டோம் என்று கொழும்பு கூறுவது ஐ.நா. தீர்மானத்தை "ஒரு தலைப்பட்சமாக மீறும் செயல்" என்று மனித உரிமைகள் சட்டத்தரணி நிரான் அங்கிரெல் தெரிவித்தார். (உ-வ-5)

## வற் வரிக்கு

தொழிலாளர்கள், வர்த்தகர்கள் எனப் பலதரப்பி னர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

கொழும்புத்துறை முகத்தை அண்மித்த மணிக்கூட்டுக் கோபுரத்தின் முன்பாக ஆரம்பமான பேரணி முதன்மை வீதி, முதலாம் குறுக்கு வீதி, ஒல்கொட் வீதி ஊடாக புறக்கோட்டை ரயில் நிலையத்தை வந்தடைந்தது. வற் வரி அதிகரிப்பை மேற்கொண்டுள்ள அரசு அதற்கான மானியத்தைப் பெற்றுத்தர வேண்டுமென்ற கோரிக்கையை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களும் தொழிலாளர்களும் முன்வைத்தனர்.

"அரசைச் சிக்கலுக்குள் தள்ளுவது எமது நோக்கமல்ல. நல்லாட்சியையும், நல்வாழ்வையும் எண்ணியே அரசுக்கு வாக்களித்தோம். வற் வரிப் பிரச்சினைக்கு அரசு உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். இந்தக் கோரிக்கையை முன்வைத்தே கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்" என்று பேரணியில் ஈடுபட்ட வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

புறக்கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தால் புறக் கோட்டை பிரதான வீதியின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் வெடிகளைக் கொளுத்தியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (வ-5)

## பன்னாட்டு

அ நு ர கு ம ா ர விநியோகித்தார். "போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்கேற்பு தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு என்ன?" என்று ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் கேள்வி எழுப்பினார்.

"பன்னாட்டு நீதிபதிகளை அழைத்து விசா ரணை செய்ய வேண்டிய அவசியம் இலங்கையில் காணப்பட்டால் அது நாட்டின் சட்டத்துக்கும் அரசமைப்புக்கும் அமையவே செய்யப்படவேண்டும். வெளிநாட்டு நீதிபதிகளின் பங்கெடுப்பானது அரசமைப்புக்கு முரணானது. அரசமைப்புக்கு முரணான எதையும் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்துவதன் ஊடா கவே செய்ய முடியும். சிக்கலான இந்தப் பிரச்சினையில் நீதியை நிலைநாட்டு வதற்கு இருக்கும் சிறந்த தீர்வு முற்று முழுதான உள்நாட்டுப் பொறிமுறையே" என்றார் அநுர. (வ-5-106)

## பொறுப்புக் கூறல்

ளர்கள். இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலர் நிசா பிஸ்வால் மற்றும் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான துணைச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி இருவரும் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பிலிருந்து புறப்பட்டனர். அதற்கு முன்னதாக கொழும்பிலுள்ள பன்னாட்டு ஊடகங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினர்.

இலங்கைக்கு அமெரிக்கா கொடுத்து வருகின்ற அழுத்தம் தளர்வடைந்திருப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

"வழக்கமாக நாங்கள் மேற்கொள்ளும் பயணத்திலிருந்து இந்தப் பயணம் எந்த வகையிலும் வேறுபட்டதல்ல. ஒன்றிணைந்த நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கை இன்னும் சுபீட்சமானதாக இருக்கும் என்று அமெரிக்கா நம்புகின்றது" இவ்வாறு பிஸ்வால் தெரிவித்தார்.

உண்மை மற்றும் நீதி விடயங்களில் இலங்கை - அமெரிக்க தொடர்பாடல் மீது வொசிங்டன் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது. ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட்ட விடயங்களில் எது நகர்ந்துள்ளது எந்தெந்த விடயங்கள் நகரவில்லை என்பதை அறிவதே பயணத்தின் நோக்கம்.

அமைதிக்கான நடவடிக்கையின் வேகம் சிறிது விசனப்படும் நிலையில் காணப்பட்டாலும், பொறுப்புக் கூறும் விடயத்தில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் இருப்பதையும் அமெரிக்கா கண்டிருப்பதாக பிஸ்வால் தெரிவித்தார்.

"பொதுமக்களுடனான சந்திப்புக்களில் பொறுமையின்மையும் விசனமும் அதிகரித்திருப்பதை உணர முடிந்தது. ஆனால் விரக்தி காணப்படவில்லை. நம்பிக்கை இன்னும் இருக்கின்றது. எதிர்ப்பும் இருக்கின்றது. இந்த நம்பிக்கை சரிவர வெளிக்காட்டப்படவில்லை" என்றார் பிஸ்வால்.

பொறுப்புக் கூறும் பொறிமுறைக்கு இராணுவம் அங்கீகாரம் வழங்கி ஆதரவளிப்பதற்கு, இராணுவத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியதாக மாலினோவ்ஸ்கி தெரிவித்தார். இலங்கை - அமெரிக்க இராணுவ நெருக்கம் பற்றியும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது என்றார் மாலினோவ்ஸ்கி.

போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு தொடர்பான சர்ச்சை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, "இலங்கை அரசின் இறைமையை மதிக்கும் வகையில் ஐ.நா. தீர்மானம் உள்ளது. போர்க்குற்ற விசாரணைக்கான நீதிமன்றக் கட்டமைப்பு மற்றும் அதன் உள்ளடக்கம் குறித்து இலங்கை அரசே முடிவு செய்யும். இலங்கையின் இறைமையினுள் பன்னாட்டுப் பங்களிப்பை உள்ளடக்கிய பலவழிகளில், பல்வேறு மட்டங்களில் இலங்கை அரசு தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது" என்று மாலினோவ்ஸ்கி குறிப்பிட்டார். (வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி ராமேஸ்வரி சீவரட்ணம்

பிறப்பு 16 . 09 . 1926



இறப்பு 14 . 07 . 2016

யாழ்.தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தை இல.11, சென்றலோறன்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராமேஸ்வரி சீவரட்ணம் 14.07.2016 வியாழக்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சீவரத்தினத்தின் ( P.W.D. Overseer ) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ராமச்சந்திரனின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சந்திரகுமார் ( UK), தேவகுமார், திருமதி ராஜகுமாரி, காலஞ்சென்ற திருமதி விஜயகுமாரி (Australia ), திருமதி ஜெகதாம்பாள் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சிவகுமாரி (UK), திருமதி ஜெயசுந்தரி, குமாரசிவம், சற்குணநாதன், குகநேசன், சிறீராம், திருமதி வாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், தயானுஜி, சிவானுஜி, மேருஜா, கஜிந்தன், நிரோசன், சகானா, சிவசீலன், ஜெயசீலன், வானதி, குமாரதி, இந்து, ஜனன், மயூரன், லக்ஸ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெய், பிரேம்,டியா, சாயினி, சேனன், கேசினி,சௌமினி, ராகவி, ஆரியன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 7 மணிவரை அஞ்சலிக்காக மகிந்தபாலர் கல்கிசையில் வைக்கப்பட்டு 18.07.2016 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இறுக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/24418) (11,17,18)

[illegible]

தகவல்: சீ.தேவகுமார் (மகன்)

தொலைபேசி: 077 777 4470. 011 236 0636

## மரண அறிவித்தல்



### துரையப்பா நடராஜா

அன்னை மடியில் 20.04.1927 ✠ ஆண்டவன் அடியில் 11.07.2016

தொல்புரம் இ.துரையப்பா அன் சன்ஸ் உரிமையாளர்களில் ஒருவரும் நீர்ப்பாசன திணைக்கள முன்னாள் உத்தியோகத்தருமான துரையப்பா நடராஜா 11.07.2016 திங்கட்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பொன்னையா சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சாந்தினி, மாலினி, வசந்தினி, மேனகா, சிவசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ப.இராம நாதன், இ.சோமஸ்கந்தன், ப.குலசிங்கம், உமாதேவா, ந.முரளிகரன் ஆகியோரின் அன்பு மாமனும், அபிராமி சுகிதரன், மால்மருகன், ஆரணி, சரவணன், இஷானி, இஷாந், சாங்கவி ஆகியோரின் பேரனும் ஆர்த்தி, அஷ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும், காலஞ்சென்ற துரையப்பா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் இளைய புத்திரரும், பொன்னையா - இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ் சென்ற வர்களான து.இராசரத்தினம், சி.மனோன்மணி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர் களான பரமானந்தம், சண்முகராஜா, சீனிவாசகம், இராமநாதன் மற்றும் கைலை நாதன், தனலட்சுமி, கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை இல.591 காலி வீதி, கல்கிசையில் அமைந்துள்ள மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு காலை 9.00 மணிக்கு அஞ்சலியும், கிரியையும் ஆரம்பமாகி பின்னர் நிசல செவன மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

53/5, இராமகிருஸ்ணா வீதி, வெள்ளவத்தை,

தகவல்: குடும்பத்தினர்

(சி.24419) (13,16,17)

011 236 2491

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினர்
**திருமதி விஜயகுமாரி ஸ்ரீபாஸ்கரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**நல்லசேகரம்பிள்ளை பரமசாமி**
அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்க ளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி பாடசாலை கள் அதிபர் சங்கம்**

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் திட்டமிடல் கிளையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி சிறிதரன் சிவரூபி அவர்களின் தந்தை

**பொன்னையா தர்மலிங்கம்**

அவர்களின் இழப்பின் துயரத்தினால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

(செ/2054)
(11,17,18)

## கண்ணீர் அஞ்சலி



எமது முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் தற்போதைய வணிகத்துறையின் தலைவரும் எமது துறையின் இணைப்பேராசிரியருமாகிய பேராசிரியர் க.தேவராஜா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**அன்னம்மா கந்தையா**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துறைத்தலைவி, விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
மனிதவளமுகாமைத்துவத் துறை, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(செ/2044)
(11,17,18)

### கடை வாடகைக்கு

யாழ் மணிக்கூட்டு கோபுர வீதியில் (Clock Tower Road) 20'நீளம் 13'அகலம் உடைய கடை வாடகைக்கு உண்டு

0769986037 0777046628

### காணி விற்பனைக்கு

கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியில் 5பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 9994655

### காணி விற்பனைக்கு

A9 வீதியில் நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதி, ஆரம்பத்தில் காணி விற்பனைக்குண்டு. பிரித்து கொடுக்கப்படும்.

தொடர்பு:- 077 8730129

### வீடு விற்பனைக்கு

சேச் ஒழுங்கை அராலி வடக்கு வட்டுக்கோட்டைப் பகுதியில் அமைதியான சூழலில் அழகிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 2484360

### வேலையாள்கள் தேவை

இரும்புக்கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. கொக்குவில்.தாவடி.இணுவில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

0767528957

### வேலையாள்கள் தேவை

ஸ்தாபனம், திருமணமண்டபத்தில் சுத்திகரிப்பதற்கும் உணவு, குளிர்பானங்கள் பரிமாறுவதற்கும் நிரந்தரமான வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் வயதெல்லை 25-45, மாநகரசபைக்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.

077 903 7288/ 077 502 2466/ 077 355 0849

### பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர் வரும் 23.07.2016 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பொன்விழா மண்டபத்தில் இடம் பெறவிருக்கின்றது. எனவே பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பழையமாணவர் சங்கம்**
**புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**
**மு/புதுக்குடியிருப்பு.**

### விசேட பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேடபொதுக் கூட்டமானது இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை (17.07.2016) காலை 9.30 மணியளவில் சங்க பணிமனையில் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருவதோடு, சகல அங்கத்தவர்களையும் உரியநேரத்திற்கு சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இணைச் செயலாளர்.

### ஆடிச்செவ்வாய் உற்சவத்தை முன்னிட்டு கடைகளுக்கான ஏலம் கூறல்.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவியின் ஆடிச் செவ்வாய் உற்சவத்தை முன்னிட்டு கடைகளுக்கான ஏலம் கூறல்.

இடம் : ஆலய முன்றில்
காலம்: 17.07.2016
நேரம்: பி.ப 4.00 மணிக்கு

குறிப்பு: கடைகளை ஏலத்தில் எடுக்கும் கடை உரிமையாளர்கள் ஏலம் முடிந்தவுடன் முழுத் தொகையையும் கட்டி பற்றுச்சீட்டினை எடுக்க வேண்டும்.

இணைச்செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி


வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் பெண் பரிசாரகராக கடமையாற்றும் **திருமதி மலர்விழி சிவகுமாரன்** அவர்களின் தாயார்

**கண்மணி ஐயாத்துரை**

14.07.2016 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாவட்ட வைத்திய அதிகாரியும் சக பணியாளர்களும்**
**ஊழியர் நலன்புரி சங்கம்,பிரதேசவைத்தியசாலை,**
**வல்வெட்டித்துறை.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர்**
**திருமதி கனகாம்பிகை செல்வநாயகம்**

கடந்த மாதம் 17.06.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி கனகாம்பிகை செல்வநாயகம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும் தொலைபேசியிலும் மரணச்சடங்கிலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியினை தெரிவிப்பதுடன் அந்தியேட்டிக் கிரியைகள் 14.07.2016 அன்று வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றதுடன் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று(16.07.2016) சனிக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.60, மணல்தரை வீதி,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி **தமிழினி உமாசந்திரன்**

பிறப்பு
26 . 10 . 1977



பிறப்பு
13 . 07 . 2016

ஆதிகோயிலடி,வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தமிழினி உமாசந்திரன் கடந்த (13.07.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.திருமதி புஸ்பராசா (ஆனந்தியப்பா)-தில்லைநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் திரு.திருமதி குணபாலசிங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் உமாசந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் ஜனனனின் (தரம்-09 மாணவன்-ஹாட் லிக்கல்லூரி) பாசமிகு தாயாரும் மாதவன் (லண்டன்), ரகுநந்தன்(கனடா), புருஷோத்தமன், சுதாகினி (பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கஸ்தூரி (லண்டன்), சர்மினா (கனடா), கௌரி, பிரேமதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் மாதுர்ஷன் (லண்டன்), பிருந்தன் (கனடா), பிரியந்தன் (கனடா), ஆரித்திகா ஆகியோரின் அன்பு மாமியும் ரோஷினி, தீபிகா, பிரபாகரன் ஆகியோரின் ஆசைப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆதிகோயிலடி,
வல்வெட்டித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
077 6171506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார பரிசோதகருக்கு இடையூறு; கைதான 4 வர்த்தகர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 16
சங்கானை பொதுச் சந்தையில் பொது சுகாதாரப் பரிசோதகருக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டி வர்த்தகர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தையில் புகையிலை, வெற்றிலை, சீவல் விற்கும் வியாபாரிகளுக்கும் பொது சுகாதார பரிசோதகருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதனால் அங்கிருந்து சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர் மானிப்பாய் பொலிஸாரை அழைத்துக்கொண்டு மீண்டும் சந்தைக்குச் சென்றார். இதன்போது 4 வர்த்தகர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொதுசுகாதார பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக வர்த்தகர்கள் மீது குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிவான் மன்றில் அவர்கள் முற்படுத்தப்பட்டனர். இதன்போது வர்த்தகர்கள் நான்கு பேருரையும் பிணையில் விடுவிக்க நீதிவான் கட்டளையிட்டார்.

(வ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா கந்தையா



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா கந்தையா கடந்த (13.07.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், கமலேஸ்வரி, காலஞ்சென்ற இராசேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம் (Central Bank), பேராசிரியர் தேவராஜா (Jaffna University) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, தேவராசலிங்கம் மற்றும் சாந்தாதேவி, இலட்சுமிதேவி ஆகியோரின் அன்பு மாமியும், லீலாவதி (Norway), புவனேந்திரகுமார் (Denmark), ஞானேந்திரகுமார் (Norway), சாந்தி (Denmark), தர்மதா (Germany), வத்னா(Germany), சுகன்யா (Canada), உமையவள் (Australia), மயூரன் (London), சர்மிளா (Newzealand), மலர்விழி (London), கோகிலா(London), சங்கர்(Canada), சர்வேந்தன் (Australia), சயந்தன் (Peoples Leasing), சாம்பவி, சசிகரன்(London), சதீசன் (Agricultu re Department), செந்தூரன் (London) சங்கீதன், சஞ்சீவன் (Kokuvil Hindu College) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு மு.ப. 11.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **பாலசுப்பிரமணியம்** (மகன்- Central Bank),
**பேராசிரியர் தேவராஜா** (மகன் - (Jaffna University) )
**0777 982688**

**உழவர் வீதி, தாவடி
வடக்கு, தாவடி.**

## மரண அறிவித்தல்கள்

### சாதுலிங்கம் வைத்தியநாதன் (குஞ்சண்ணா)



உடுப்பிட்டி, இலக்கணாவத்தையைப் பிறப்பிடமாகவும், இலகடி, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட சாதுலிங்கம் வைத்தியநாதன் கடந்த (14.07.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாதுலிங்கம்-பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கந்தையா-இராசம்மா தம் பதிகளின் அன்பு மருமகனும் பத்மாதேவியின் பாசமிகு கணவரும் குகநாதன் (லண்டன்), காலஞ்சென்ற ராகினி, கிருபநாதன் (பிரான்ஸ்),ஜெகநாதன் (லண்டன்), வாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் காயத்திரி (லண்டன்), தர்மினி (பிரான்ஸ்), கிருஷ்ணகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனும் ரிலக்சனா,கனுஜன்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் பத்மநாதன்,சந்திராதேவி(கனடா), செல்வநாதன், ரகுநாதன் (கொழும்பு), காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் புஸ்பநாதன், இந்திராதேவி ஆகி யோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

**இலகடி,
அல்வாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.
077 5764319**

### திருமதி பரமேஸ்வரி தேவராசா



யாழ். நவாலியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி (சித்தி) தேவராசா கடந்த (14.07.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்வமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பு செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தேவராசாவின் அன்பு மனைவியும், தயாபரன் (சீலன்-ஜேர்மனி), லயனி (தங்கா - லண்டன்), சுவந்தினி (சுவந்தி - லண்டன்), கஜேந்திரன் (கண்ணன்-தாவடி, தபால் ஊழியர், சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசானை (ஜேர்மன்), தவேந்திரா (லண்டன்), பாலச்சந்திரன் (லண்டன்), தட்சாயினி (ராஜி, முன்பள்ளி ஆசிரியை, ஊரெழு) ஆகியோரின் அன்பு மாமியும், இநியா, லயனி, துசான், தவப்பிரியன், லாவண்யன், கயித்தன், யஸ்வினி, டஸ்வினி, கர்ணிகா, கௌத்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் தனலட் சுமி ஆகியோரின் சகோதரியும், நாகரத்தினம், காலஞ்சென்ற ராசரத் தினம் ஆகியோரின் மைத்துனியும், செந்தில் செல்வி, லசிந்தா, கலைச் செல்வி, காலஞ்சென்ற சிவசங்கர் மற்றும் இராஜசங்கர் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
செ. தேவராசா
(முன்னாள் இ.போ.ச. ஊழியர்)
கண்ணன் (மகன்)

**தாவடி வடக்கு, கொக்குவில்.
077 844 8558**

## மரண அறிவித்தல்

### திருமதி சுவர்ணராணி (பேபி) தர்மராஜா



முருகேசர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுவர்ணராணி தர்மராஜா 13.07.2016 புதன்கிழமை இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம் - மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்பு மகளும், தர்மராஜாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தவபாலசிங்கம், சிவானந்தசிங்கம், தேவராணி மற்றும் கிருஷ்ணகுலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிரூபன், நிரஜா, நித்யா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**15/1, முருகேசர் வீதி,
நல்லூர்.** (J/2952) (11,17,18)

தகவல்:
**தர்மராஜா - கணவர்**

## மரண அறிவித்தல்

### இராமநாதன் சுப்பிரமணியம்



யாழ். சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சுப்பிரமணியம் கடந்த (14.07.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன்-சின்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற வர்களான வெற்றிவேலு-இராசம்மா தம்பதிகளின் அன்பு மருகனும் இராஜமலரின் பாசமிகு கணவரும் மகேஸ்வரி (இலங்கை), யோகரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தெய்வநாயகி, பத்மலோசனி, தெய்வராணி, நல்லநாதன், சிவநேசன், கேதீஸ்வரி, சோதிநாதன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாயினியின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி காலயன்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்சிலைமடு அ.த.க. தங்கத்தை வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 16
மாகாணமட்ட தடகளத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை தங்கப்பதக்கத்தை வென்றது.

கற்சிலைமடு அ.த.க. பாடசாலையின் சார்பாக களமிறங்கிய எஸ். விதுசா 21 நிமிடங்கள், 20 செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தைக் கைப்பற்றினார். உடையார்கட்டு மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சுடர்மதி 22 நிமிடங்கள் 47 செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், அத்தியார் இந்துக் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய ஆர்.தயானி 22 நிமிடங்கள், 48 செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)






# ஐயாயிரம் மீற்றர் ஓட்டத்தில் முருங்கன் மத்திக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
மாகாணமட்டத் தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் முருங்கன் மத்திய மகா வித்தியாலயம் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

முருங்கன் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.ஹரிகரன் 17 நிமிடங்கள் 6 செக்கன்கள் 1 மில்லி செக்கனில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தை வென்றார். ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். அலெக்ஸ் 17 நிமிடங்கள், 40 செக்கன்கள், 7 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், அருணோதயக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ஆர். கண்ணன் 17 நிமிடங்கள், 42 செக்கன்கள் 5 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

## பாடும்மீன் இறுதியில்

அராலி சரஸ்வதி வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் அணி இறுதிக்குத்தகுதிபெற்றது. அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் பாடும்மீன் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது பாடும்மீன். நாவாந்துறை சென். மேரிஸ் ஏற்கனவே இறுதிக்குத் தகுதி பெற்றுவிட்ட நிலையில் இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (ம-23)




மாகாணமட்ட தடகளத் தொடரின் இரண்டாம் நாளாகிய நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலின் போது...

# சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு கோலூன்றிப் பாய்தலில் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி தங்கத்தை தனதாக்கியது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய ஏ.புவிதரன் 3.70 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கத்தை வென்றார். அருணோதயக் கல்லூரியின் வீரர்களான சாருக்சன் 3.70 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஆர்.மதுசன் 3.40 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)



# தடகளத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 16
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் யாழ். துரையப்பா மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இன்றைய மூன்றாம் நாள் போட்டிகள் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெறவுள்ளன.

15வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 400 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், குண்டு போடுதல், 100 மீற்றர் சட்டவேலி என்பனவும் பெண்கள் பிரிவில் 400 மீற்றர் ஓட்டம், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், 100 மீற்றர் சட்டவேலி ஆகியனவும் நடைபெறவுள்ளன.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் நீளம் பாய்தல், 400 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், ஈட்டி எறிதல், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சல் ஓட்டம், 110 மீற்றர் சட்டவேலி என்பனவும், பெண்கள் பிரிவில் 400 மீற்றர் சட்டவேலி, உயரம் பாய்தல், 400 மீற்றர் ஓட்டம், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், முப்பாய்ச்சல் என்பனவும் நடைபெறவுள்ளன.

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கோலூன்றிப் பாய்தல், 400 மீற்றர் சட்டவேலி, குண்டெறிதல், 400 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், தட்டெறிதல், 110 மீற்றர் சட்டவேலி என்பனவும், பெண்கள் பிரிவில் 400 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், 100 மீற்றர் சட்டவேலி ஆகியனவும் நடைபெறவுள்ளன.

21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தட்டெறிதல், 400 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், உயரம் பாய்தல், ஈட்டி எறிதல், 110 மீற்றர் சட்டவேலி என்பனவும், பெண்கள் பிரிவில் 400 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், முப்பாய்ச்சல், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் தூரமுடைய அஞ்சலோட்டம், 100 மீற்றர் சட்டவேலி, கோலூன்றிப் பாய்தல் என்பனவும் நடைபெறவுள்ளன. (ம-422)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சாதனையுடன் தங்கம் வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூலை 16
மாகாணமட்ட தடகளத் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.டெனிசன் முப்பாய்ச்சலில் நேற்று சாதனை நிகழ்த்தினார்.

பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ். துரையப்பா மைதானத்தில் நேற்றுமுன் தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.டெனிசன் 12.74 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து சாதனையுடன் தங்கத்தை தனதாக்கினார். அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த யு.அகிலன் 2009 ஆம் ஆண்டில் 12.59 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்ததே இதுவரை சாதனையாக இருந்தது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே. கபிலவன் 12.63 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கினார். பாண்டியன்குளம் மகா வித்தியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.நிருஜன் 12.40 மீற்றர் நீளத் துக்குப் பாய்ந்து வெண்கலத்தை தனதாக்கினார். (ம-23)




மாகாணமட்ட தடகளத் தொடரில் 19 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த அணி தங்கம் வென்றது. (ம)

# தடகளத் தொடரில் நேற்றுவரை யாழ். இந்து மகளிர் ஆதிக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரில் பெண்கள் பிரிவில் நேற்று மாலை வரை (அஞ்சலோட்டத்தையும் சேர்த்து) யாழ். இந்து மகளிர் ஆதிக்கம் செலுத்தியது.

இதன்படி இந்துமகளிர் 45 புள்ளிகளைப் பெற்றுள்ளது. 43 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தை முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம் தனதாக்கியது. மகாஜனக் கல்லூரி 42 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. பளை மத்திய கல்லூரி 40 புள்ளிகளுடன் நான்காமிடத்தையும், தட்சணாமருதமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 36 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன. ஆறாம் இடத்தை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் ஏழாமிடத்தை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயமும் தமதாக்கின. நானாட்டான் மகா வித்தியாலயம், அத்தியார் இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆகிய நான்கும் தலா 20 புள்ளிகளுடன் எட்டாமிடத்தைப்பெற்றன. (ம)

# மடுக்கந்த தேசிய பாடசாலைக்கு ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம்




யாழ்ப்பாணம், ஜூலை 16
மாகாணமட்ட தடகளத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதலில் வவுனியா மடுக்கந்த தேசிய பாடசாலைக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

மடுக்கந்த தேசிய பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.கௌசல்யா 22.33 மிற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கத்தை தனதாக்கினார். முல்லைத்தீவு மகா வித்தியாலயத் தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.மதுசா 20.89 மீற்றர் தூரத் துக்கு எறிந்து வெள்ளிப் பதக் கத்தை வென்றார். பாசையூர் சென். அன்ரனிஸை பிரதிநிதித் துவம் செய்த ஆன். பியூலா 20.05 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

(ம-23)

# ஹாட்லி கணிசமான ஆதிக்கம் ஆண்கள் பிரிவு தடகளத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 16
மாகாணமட்டத் தடகளத்தில் பாடசாலைகளுக்கு இடையிலான தரப்படுத்தலில் ஆண்கள் பிரிவில் ஹாட்லி பெருமளவான புள்ளிகளின் வித்தியாசத்தில் (அஞ்சலோட்டத்தையும் சேர்த்து) நேற்று மாலை வரை முதலிடத்தில் நீடித்தது.

56 புள்ளிகளுடன் ஹாட்லி முதலிடத்தைக் கைப்பற்றியது. ஹாட்லிக்கும் இரண்டாவது இடத்திலுள்ள அருணோதயாவுக்கும் இடையே 11 புள்ளிகள் வித்தியாசம் பேணப்படுகிறது. இதன்படி அருணோதயக் கல்லூரி 45 புள்ளிகளைப் பெற்றுள்ளது. உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி 34 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. 32 புள்ளிகளுடன் யாழ். மத்திய கல்லூரி நான்காமிடத்தையும், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் 30 புள்ளிகளுடன் ஐந்தாமிடத்தையும் பெற்றன. மன்னார் பத்திமா மகா வித்தியாலயம், மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம் ஆகியன முறையே ஆறாம் ஏழாம் இடங்களில் உள்ளன. மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, மகாஜனக் கல்லூரி என்பன 22 புள்ளிகளுடனும், முருங்கன் மகா வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி இரண்[illegible] புள்ளிகளுடனும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. (ம)





மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தலின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியின் பயிற்சியாளராக முரளி நியமனம்

ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக முரளிதரன் நியமிக்கப்பட்டார். முரளியின் இந்த நியமனம் ஆஸியின் சுழல் வீரரான லையனை வைத்தும் அந்த அணி இலங்கையை வீழ்த்த திட்டமிட்டுள்ளதாகவே கருதப்படுகிறது.

இலங்கைக்கு வந்துள்ள ஆஸ்திரேலிய அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள், இரண்டு ரி-20 ஆட்டங்கள் கொண்ட நீண்ட தொடரில் விளையாடவுள்ளது. ஆஸ்திரேலிய அணி இவ்வாறு நீண்ட தொடர்களுக்குச் செல்லும்போது, விளையாடச் செல்லும் நாட்டின் ஆடுகளங்கள், பலங்கள், பலவீனங்கள் பற்றி அறிவதுக்காக அந்த நாட்டின் வீரர்களையே குறுகிய காலப் பயிற்சியாளராகவும், ஆலோசகராகவும் நியமிக்கும். சில வாரங்களுக்கு முன்னர். இலங்கையின் முன்னாள் துடுப்பாட்ட வீரராக சமரவீர ஆஸியின் துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். தற்போது முரளிதரன் ஆஸியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.



ஆஸ்திரேலியாவின் சுழல் வீரரான லையன் கடந்த சில மாதங்களாக முரளியிடம் பயிற்சி பெற்று வருகிறார். தற்போது முரளியின் இந்த நியமனமானது ஆஸ்திரேலியா லையனை (சுழலை) வைத்தும் இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவே கருதப்படுகிறது. (ம)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Dr.(Mrs)சி.கிரிஜகலா
B.V.Sc.(SL)
(உதவிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், முல்லைத்தீவு)

இன்று (16.07.2016) சனிக்கிழமை கொழும்பு B.M.I.C.H மண்டபத்தில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பொதுநிர்வாக முதுமாணி (MPA) பட்டத்தைப் பெறும் எங்கள் மதிப்புக்குரிய உதவிப் பணிப்பாளர் அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர்வு பெற மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கால்நடை வைத்தியர்கள், அலுவலர்கள்,
கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்,
முல்லைத்தீவு.

(J/2948) (11,17,18)



முடியவில்லை போர்த்துக்கல்லின் யூரோக் கிண்ணக் கொண்டாட்டங்கள். (ம)

BCHS

## 20% கட்டணக் கழிவில் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். **Rs.6000/=**

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. **Rs.8000/=**

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
23.07.2016 காலை 8.30, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

**Batches Start On**
18.07.2016@10.00am
20.07.2016@9.00am
25.07.2016@10.00am
27.07.2016@9.00am
30.07.2016@9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S)
07[illegible]

## உடனடி வேலை வாய்ப்பு

- விளம்பரத்துறையில் ஆர்வமும் ஆற்றலும் அனுபவமும் உள்ள ஆண்,பெண் இருபாலருக்கும் உடனடி வேலைவாய்ப்பு.
- 6 மாத காலத்திற்குள் உங்கள் திறமையை பொறுத்து குறைந்தது 2 லட்சம் ரூபாயை பெறக்கூடிய வாய்ப்பு.
- தகுதி - O/L

V2 Travels and Tours (Pvt) Ltd.

5 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றி வரும் எமது ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டு நன்மை பெறுங்கள்.

0768226243 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

## இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை வலிமை என்கிறார் பிரீத்வைட்

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை மிகவும் வலிமையாக உள்ளது எனத் தெரிவித்தார் டெஸ்ட் ஆட்டங்களில் மேற்கிந்தியத் தீவுகளின் உபதலைவரான பிரீத்வைட். இந்திய அணி தனது சொந்த மைதானத்தில் மட்டுமல்லாது அன்னிய மண்ணிலும் துடுப்பாட்டத்தில் ஆதிக்கம் செலுத்த வல்லது. அந்த அணியிடம் அபாரமாக துடுப்பாட்ட வரிசை உள்ளது. ஏழு இலக்குகளை வீழ்த்தும்வரைக்கும் இந்தியாவின் துடுப்பாட்டத்தில் தளம்பல்கள் ஏற்படும் என நான் கருதவில்லை. அந்த அணியின் சுழல் வீரரான அஸ்வின் நிச்சயம் அந்த அணியின் பெரியதொரு பலமாக இருப்பார். பந்துவீச்சில் அவரின் வியூகங்களையும் சமாளிக்கவேண்டியிருக்கும் என்றார்.

## முன்பள்ளி ஆசிரியை தேவை

சங்கத்தானை-சாவகச்சேரி ஸ்ரீமுருகன் முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்பிப்பதற்கு பொருத்தமான ஆசிரியை தேவை. க.பொ.த சாதாரணதரத்தில் தமிழ்,கணிதம் உட்பட மூன்று பாடத்தில் 'C'தர சித்தி பெற்றிருப்பதுடன் க.பொ.த உயர்தரம் மற்றும் முன்பள்ளி டிப்ளோமா சான்றிதழ் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும். எதிர்வரும் 30.07.2016 இற்கு முன்பு தங்கள் விண்ணப்பங்களை முன்பள்ளி நேரங்களில் நிர்வாகத்திடம் கையளிக்கவும். அல்லது கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஸ்ரீமுருகன் முன்பள்ளி, பெருங்குளம் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.